[illegible] 
KUDI ARASU. Reg. No. M. 2041

# குடி அரசு

| | |
|---|---|
| உள்நாடு சந்தா ஒரு வருஷம் | ரூ 3—0 |
| அரை வருஷம் | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ 2.
தொடர்ந்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

புஸ்தகம் 4 | ஈரோடு. விபவ ஆண்டு தை மீ 1உ. (13—1—29) ஞாயிற்றுக்கிழமை. | ஸஞ்சிகை 38



அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும் பெற்ற நல்ல மருந்துகள்.

## [ரூ. 1-8-0 அமிர்தரஸம். (Rs. 1-8-0)

சகல நோய்களுக்கும் கைகண்ட ஔஷதம்.

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசராயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரசம் தான். ஆவிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

## அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும்தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், வாத வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதிகளையும் போக்கி உடனுடன் கிரமமாய்மலப்பிரவர்த்திசெய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும். 24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

## தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்தமாத்திரை உயர்ந்த சுபாஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்யப்பட்டது, உடைந்த தாதை கட்டி. கெட்ட போக சக்தியையும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0 50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0. வி. பி. வேறு.

சகல மருந்துகளின் விபரமும், நோய்களின் தன்மையும், சாப்பிடும் முறை, பத்தியம், அநுபானம் முதலியவைகளும், குணமானவர்களிற் பலரின் உயர்ந்த நற்சாக்ஷி பத்திரங்களும் அச்சிடப்பட்ட நமது பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

நமது வெளியூர் சோல் ஏஜண்டுகள்.

1. பர்மாவிற்கு:— மு. ச. வடிவேல பிள்ளை, காந்தி கதர் நிலயம், மொகல் வீதி, ரங்கூன்.
2. தஞ்சைக்கு.— எம். கல்யாணசுந்தர முதலியார், கதர் ஸ்டோர், கடைத்தெரு, மாயவரம்.
3. திருச்சிக்கு—: கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை, புகையிலை மண்டி, 54 தஞ்சை ரோடு, திருச்சி.
4. மதுரைக்கு:— வி. முத்துராமலிங்கம் பிள்ளை, கோவில்தெரு, திண்டுக்கல்.
5. தென் ஆற்காட்டிற்கு:—வி. கே. எஸ். அய்யர். & கம்பெனி, சிவபுரி புகையிலை வியாபாரம், கீழ வீதி, சிதம்பரம்,

இதர வெளியூர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

தண்டபாணி வைத்தியசாலை,
292, சைனாபஜார், மதராஸ்

## திருப்பூர் பனியன்ஸ்.

அழகாயும் உறுதியாயும் நீடித்து உழைக்கக்கூடியதாயும் உள்ள பனியன்கள் நம்மிடம் கிடைக்கும்.

32 இஞ்சு டஜன் 1-க்கு 4—8—0

வேண்டியவற்றிற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள் செடிகள்

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0, நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு, வெட்டர்கள் கோட்டை. சேலம்.

## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இனங்கள் விலையேறுவதும் குறைவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
[illegible] கோவில் வீதி,
புதுச்சேரி.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஆம் ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் கட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தவர் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொள்ளலாம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார், [illegible]
மயிலாப்பூர், மதராஸ்

## சுயமரியாதை அகராதி.

(முன் தொடர்ச்சி,)

பணக்காரர்கள்:—சட்டத்திற்கு அகப்படாமல் சாமர்த்தியமாய் மோசம்செய்தவர்கள்.

தொழிலாளி:—தன்பலம் தான் தெரிந்து கொள்ளாத யானை

முதலாளி:—மற்றவர்கள் உழைப்பில் உலக போகங்களை அனுபவிப்பவன்

ஆசிபல்:—சையால்காத கயவர்கள் வாயாடி வயிறுவளர்க்கும் ஸ்தானம்

ஸ்தலஸ்தாபனங்கள்:— தாயை குற்றம் சொல்லிவிட்டு தான் விபசாரம்செய்யும் மகள்

ஸ்தலஸ்தாபன அங்கத்தினர்கள்:—ஷை விபசாரிகளுக்கு மாமாக்கள்

பிராமணாள் காபிகிளப்:—நூதனஜாதிகளும் வியாதிகளும் சிருஷ்டிக்கப்படும் இடம்

கோயில்கள்:—பார்ப்பனர் பகற்கொள்ளை படிக்குமிடங்கள்

லோககுரு:—பகற்கொள்ளைக் கூட்டத்தலைவர்

காங்கிரஸ்:—சர்க்கரை மிட்டுவதுபோல் நாட்டை விரோதிகளுக்குக் காட்டிக்கொடுத்து விரோதிகளிடம்—ஏன் காட்டினரிடமிருந்துகூட கூலிவாங்கும் கூட்டத்தார் ஸ்தாபனம்

சத்திரம்:—சோம்பேறிகள் காரியாலயம்

ரயில்வேஸ்டேஷன்:—பார்ப்பனர்களும் பாங்கிகளும் சம்மந்தம் செய்துகொள்ளுமிடம்

குமாரசாமி,

## பார்ப்பனீயம் ஒழிந்த திதி.

கோபிசெட்டிபாளையம் தாலூகா கெலங்கரபாளையத்திலிருக்கும் வடக்குவளவு பண்ணுடிச்சி பழனியம்மாள் 1928-ம் வருஷம் டிசம்பர் மாதம் 28ந்தேதி வெள்ளிக்கிழமையதினம் தம்முடைய புருஷனுக்கு நடத்த வேண்டிய திதியை புரோகிதத்தையும் பார்ப்பனீயத்தையும் ஒழித்து ஏழைகளுக்கும் பந்துக்களுக்கும் அன்னமிட்டு முடித்தார்கள். கொ. ர. பொன்னம்பலம்.

## வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

ஜவ்வர்து பத்தி. மல்லேஸ்வரம், பெரியகடைவீதி, ஸ்ரீ ராமசசந்திரஸ்டோர்ஸ் காரியதரிசியவர்கள் தமது ஸ்டோரில் தயார்செய்து விற்கப்படும் பலவகை ஊதுபத்திகளில் ஜவ்வாது பத்தியென்ற ஒருவகை பத்திகளில் ஒருபாக்கட் எமக்கு அன்புகூர்ந்து அனுப்பியுள்ளார். ஷை பத்திகளை உபயோகித்துப் பார்ப்பதில் அவைகள் மிக ரம்மியமாக தம் பெயருக்கேற்றவாறு ஜவ்வாதுமணம் வீசுகின்றன. ஒரு பாக்கட் அதாவது 250 பத்திகளின் விலை ரூ 2—0—0 தான் என்று குறிப்பிட்டிருக்கிறது. சுதேசியத்தை ஆதரிக்க வேண்டுமென்கிற கனவான்கள்வாசனைகளில் இத்தகையாாது முயற்சியை ஆதரித்து ஊக்கப்படுத்த வேண்டுகின்றோம்.


## செல்வராஜ் & கோ., காலண்டர்.

தலைவர்களின்படங்களடங்கியது.

30 x 20 அங்குல அளவில் நல்ல தடித்த வழுவழுப்பான ஆர்ட்பேப்பரில் திருவாளர்கள் டாக்டர் நாயர், தியாகராயர், பனகால் அரசர், ராமசாமி நாயக்கர், பி. டி. ராஜன், எ. ராமசாமி முதலியார், எம். கே. செட்டியார், குமாரசாமி செட்டியார், பன்னீர் செல்வம், சௌந்தரபாண்டிய நாடார், கண்ணப்பர், கே. வி. மேனன், சுரேந்திரநாத் ஆரியா, சின்னையா பிள்ளை ஆகிய பதினொரு தலைவர்களின் திருவுருப்படங்களுடன் கூடியது. காலண்டர் 1-க்கு விலை அணா 8 தான். வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும். விலாசம்:—

செல்வராஜ் & Co.,
சைக்கிள் வியாபாரிகள், ஈரோடு.


## தேவை.

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு மாதம் ரூ 60—2—80 சம்பளத்தில் ஒரு சீனியர் அக்கவுண்டெண்ட் தேவை. தக்க யோக்கியாம்சம் பெற்றவர்களே விண்ணப்பம் செய்ய வேண்டும். முனிசிபாலிட்டியில் நீண்ட அநுபவம் பெற்றவர்களுக்கு மேற்குறிப்பிட்ட சம்பளத்தைவிட அதிகமான சம்பளத்திலிருந்து ஆரம்பிக்கப்படும். விண்ணப்பதாரிகள், ஜனவரி மீ 15உக்குள் கீழ்க்கண்டவருக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.


ஈரோடு முனிசிபாலிடி 3—1—28 } K. சுப்பாராயலு நாயுடு சேர்மென்,

## நோட்டீஸ்.

1929–30ம் வருஷத்திற்கு முனிசிபல் சங்கத்தாருக்குச்சேர்ந்த சுங்கம்(Tole gates) மார்க்கெட் முதலியவைகளின் குத்தகைகளை 1929-ஆம் பிப்ரவரி-மீ 2-உ சனிக்கிழமை காலை 8-மணிக்கு கோயமுத்தூர் விக்டோரியா டவுன் ஹாலில் முனிசிபல் சங்கத்தாரின் ஷ்பெஷல் மீட்டிங்கில் ஏலம் போடப்படும்.

முனிசிபல் ஆபீஸ் கோயமுத்தூர் 3—1—29 } C. S. இரத்தின சபாபதி சேர்மென் C. M. C.


## நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத்துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம், மஸ்லின் துணியிலும் பல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ. 4–15–0.

திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.

ஸ்ரீ கிருஷ்ணா ஏஜன்ஸி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

## ஆரோக்கிய லேகியம்.

மலபந்தமே அநேக வியாதிகளுக்கு மூலகாரணம் அன்றாடம் மலப்பிரவர்த்தி சரியாய் ஆகிவிட்டால் அநேக வியாதிகள் வராது. இந்த லேகியத்தில் கழற்சிக்காய் அளவு இரவில் படுக்கைக்கு போகுமுன் சாப்பிட்டால் காலையில் சுகமாய் மலப்பிரவர்த்தி ஆகும்.

ஒரு சேர் டப்பி ஒன்றுக்கு விலை ரூபாய் 2—0—0
அரைச்சேர் டப்பி ஒன்றுக்கு விலை ,, 1—0—0

பண்டிட், சி. வ. ஞான சம்பந்தம்,
ஜீவ ரக்ஷாமிர்த இராஜ வைத்தியசாலை, சீகாழி. S I R.

புத்தகம் 1-க்கு



இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.
Mysteries of Wedded Life.
இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.
எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்
வாஸன் புஸ்தக சாலை,
244, தங்கசாலைவீதி, சென்னை.

விலை ரூ. —0—0

## "இந்த பிராமண சபையில் நாலு பிராமணனாவதுண்டா?" என்று சபைத்தலைவரே கேட்கிறார்.

### கைவல்யசாமியார் எழுதுவது

"பிராமணர்களைப் பகிரங்கமாகச் சபைகளிலும் பத்திரிகைகளிலும் குற்றம் சொல்லுகிறார்கள்" என்று பிராமணசபை உபசரணைக்கமிட்டித் தலைவரால் சொல்லப்பட்டதற்குப் பொறுமையோடும் ஞாயத்தோடும் சாஸ்திரப்பிரமாணத்தால் முன் வியாசத்தில் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வியாசத்தில் பிராமணசபைத்தலைவர் பிரசங்கத்திலுள்ள சில வற்றைப்பற்றி எழுதுகிறோம்.

"திரு. ஸ்லேட்டர்போன்றமேல்நாட்டார்கள் 24 மணி நேரமும் வீணாகாமல் சமஸ்கிருதம் படிக்கிறார்கள். அவர்கள் சமஸ்கிருதத்திலும் பேசுகிறார்கள். இந்த மகாசபையில் அப்படிப்பேச ஆற்றலுடையவர்கள் நாலுபேராவதுண்டா? இம்மாதிரி இருந்தால் நம் சமூகத்திற்கே ஈனமானதல்லவா" என்று கேட்கிறார். பிராமணசபையைப்பார்த்து சபைத்தலைவர் கேட்ட கேள்வியால் அந்த சபையில் சாஸ்திர யுக்தமான பிராமணன் ஒருவனுமில்லை என்பது வெளியாயிற்று. வைதீகப்பாப்பார்கள் கூடின கூட்டத்திலேயே நாலு பிராமணனில்லாமலிருந்தால், கள்ளுக்கடைக்குத்தகை எலம் கூறும் பாப்பானையும் கூட்டி கள்ளுக்கடை எலமெடுக்கும் பாப்பானிலிருந்து கப்பலேறிக் கண்டதை உண்ணும் பாப்பான் வரையிலும் ஒரு கடுகளவுகூட பாப்பான் கிடைக்கமாட்டான் என்பதற்குப் பிராமண சபைத்தலைவரின் வார்த்தையே சாக்ஷி.

ரிக், யஜுஸ், ஸாம, அதர்வணமென வேதங்கள் நான்கு. சிக்ஷையல்லது சப்த சாஸ்திரம், வியாகரணமல்லது இலக்கணம், சந்தஸ் அல்லது யாப்பியல், நிருத்தம் அல்லது சொல்லியல், ஜோதிடம் அல்லது வானசாஸ்திரம், என வேதாங்கங்கள் ஆறு. தருமசாஸ்திரம், மீமாம்சம், நியாயம், புராணங்கள் எனவேத ரகசியங்களை வெளியிட வந்த சகாய சாஸ்திரங்கள் நான்கு. இந்த பதினன்கும் சதுர்தச வித்தைகள் எனப்படும். இவற்றை ஒவ்வொரு துவிஜனும் பார்ப்பானும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். இவைகளிலே தான் ஸகல தருமங்களும் ஞானங்களும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் இவற்றைக்கற்றவனுக்குத்தான் உண்மைப்பொருளை உணரும் சக்தி உண்டாகிறதென்றும், அப்படி நடக்காதிருந்தால் அவனுக்கு மோக்ஷமார்க்கத்தில் ஆபத்தென்றும் பிராமணதருமம் சித்திக்காதென்றும் எல்லாப் பாப்பார சாஸ்திரங்களும் ஒருவழியாகச் சொல்லுகின்றன. வேதங்களுக்குப்பிர்மம என்று ஒருபெயருண்டு அதனால் வேதம் படிப்பவன் வேதியனென்றும், பிரமகுலனென்றும், பிர்மதேஜஸ் உடையவனென்றும், பிர்மாவின் முகத்தில் பிறந்தவனென்றும் வழங்கப்பட்டது. வேதத்தின் முக்கியபாகமும் கர்மதந்தியந்திரங்களும் அடங்கியிருப்பதற்குப் பிராமணங்களென்று பெயர். அந்த பிராமணங்களின் மந்திர நிச்சயம் தெரிந்தவனே பிராமணனென்று சாஸ்திரங்கள்சொல்லிவைத்தன. வேதத்தின் ஒருபாகமாக பிராமணங்களைத் தெரிந்த பிராமணனும், பிர்மம் என்னும் வேதத்தைப்படித்தவனும் திரு. ஸ்லேட்டர் போன்றவர்கள் மேனாட்டிலிருக்கிறார்களே யல்லாமல் "இந்த பிராமண சபையிலும் சமூகத்திலும் நாலு பேர்கூட இல்லையே" என்று சபைத்தலைவர் சொன்னது ஞாயத்தில் சத்தியமும் சத்தியத்தில் முதன்மையுமாகும்.

பின்னும் அவர் "பூர்வவாசனையிருந்தால்தான் வேதம் அத்தியயனம் வரும். இதற்கு ஜோதிடனைக் கேட்கவேண்டியதில்லை. இங்கிலீஷ்உள்ள இடத்தில் வேதம் நுழையாது" என்கிறார். இங்கிலீஷ்படித்து சேவகாவிர்த்தி செய்யும் பாப்பானிடம் வேதம் நுழைவதில்லை அவன் வேதியனாகமாட்டான் என்றதானை "குடிஅரசு"ம் சொல்லுகிறது. 24 மணி நேரமும் வீணாகாமல் சமஸ்கிருதத்திலேயே பேசும் திரு. ஸ்லேட்டர் போன்ற மேனாட்டார்கள் எந்தப்பூர்வ வாசனையால் படிக்கிறார்கள்? என்பதும், வேதம்படிக்கப் பூர்வவாசனையையுடைய பாப்பார்கள் 24 மணி நேரமும் இங்கிலீஷ்படித்து சேவகாவிர்த்திக்கே செல்வது எந்தப்பூர்வ வாசனையால் என்பதையும் சபைத்தலைவரே சொல்லவேண்டும். "வேதம் படிப்பதற்குப் பாப்பானே அதிகாரி, அவன்தான் பூர்வ வாசனை யுடையவன்" என்று சொல்லிக்கொண்டிருந்த வஞ்சகக்கொடுமையை சபைத்தலைவர் வார்த்தை வெளிப்படுத்திவிட்டது. "திரு. ஸ்லேட்டர்போன்ற மேனாட்டார்கள் வேதம்படித்து சமஸ்கிருதத்திலேயே பேசுகிறார்களே, இந்தப்பிராமண சபையில் அவர்களைப்போல் படித்தவர்கள் நாலுபேராவதுண்டா? இப்படி இருப்பது நம் சமூகத்திற்கு ஈனமல்லவா" என்று வைதீகப்பாப்பாரைப்பார்த்து வைதீகம் நிறைந்த சபைத்தலைவர் சொல்லும் நிலையில் பாப்பார்களிருக்கையில், இப்பேர்ப்பட்ட பாப்பார்கள் தவிர மற்ற வகுப்பார்களை சமஸ்கிருதப்பள்ளியில் சேர்த்துக்கொள்ள மறுப்பதும், சிலபள்ளியில் சேர்த்துக்கொண்டாலும் இலக்கணம் சொல்லிக்கொடுக்கமாட்டோமென்பதும்சாஸ்திரவகுப்பில் பாப்பான்தவிர வேறுயாரையும் சேர்த்துக்கொள்ளாததும் ஞாயமா என்பதை பாப்பார்களே ஆலோசித்துப்பார்த்துப் பின்னால் பார்ப்பார்களை பகிரங்க மேடையிலும் பத்திரிகையிலும் தூஷணை புரிவதாக் கோபிக்கட்டும்.

சமஸ்கிருத பாடசாலை நிர்வாகச் செலவிற்கு எதுவாயிருக்கும். கோவில்களும், மடங்களும், தருமஸ்தாபனங்களும், பிரபுக்களும், எங்களுக்கு அன்னியமா? எங்கள் மூதாதைகளின் பொருள்கள் அதிலில்லையா? கோவிலுக்கு காணிக்கை கப்பம் கொடுக்காமல் சுவாமியை கட்டிமட்டும் தழுவுகிறோமா? குருவுக்கும் குருக்களுக்கும் தக்ஷணை தெண்டம் கொடுக்காமல் மடத்துச்சோற்றுக்கு மட்டும் மானம்கெட்டு நிற்பவர்களா? கடவுள் பாதம் எங்கள் பிறப்பிடமாக விருந்தாலும் பாதம் கடவுள் உடம்பில் சேரவில்லையோ? கடவுள் பாதத்தையல்லவா எல்லாவேதமும் பெரியவர்களும் தேடிப்போனதாக சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. கடவுள் பாதத்தையே காணவேண்டி மனிதன் பிறந்தானென்றும் அதற்காகவே கடவுள் மனிதனை உண்டுபண்ணினாரென்றும் அதையடையாவிட்டால் மனித ஜென்மமே பாழாகுமென்றும் பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அதைப்பற்றினவனைத்தும் சாஸ்திரங்களிலிருக்கின்றன. அந்த சாஸ்திரப் பள்ளியிலோ வகுப்பிலோ பாப்பான்தவிர மற்றவர்களைச் சேர்க்கமாட்டார்கள் இதுஎன்ன நியாயமய்யா?

வேதங்களைக் கடவுளே சொன்னதால் வேதம் கடவுளுடையது; கோவில் நாம் கட்டி அவருக்குக்கொடுத்துவிட்டபடியால் அதுவும் அவருக்குச் சொந்தம்; நஞ்சை, புஞ்சை, தோட்டம், தோப்பு, காணிக்கை, உண்டிகை முதலிய சொத்துக்களை அவருக்கே தானமாக நாம் கொடுத்துவிடுகிறபடியால் அதுவும் அவருக்குச்சொந்தம். எல்லாச் சொத்துக்களும் கடவுளுக்குச் சொந்தமானபடியால் அவருடைய முதற்பிள்ளைகளென பாத்தியம் கொண்டாடும்பாப்பார்கள் அனுபவித்துக்கொண்டு வரும் பாத்தியாபாத்தியதையைப்பற்றிப் பின்னால்பேசுவோம். சிதம்பரத்து மீனாட்சிகாலேஜ் வெள்ளியங்கிரியிலிருந்து வந்த நடராஜப்பிரபுவின் கூடவந்த சிதம்பரத்துப்பாப்பானின் பாட்டன் வீட்டுச்சொத்தா? நாட்டுக்கோட்டை நகரத்து பிரபுவினுடையதல்லவா? இந்தப்பள்ளியிலும் சாஸ்திர வகுப்பில் மற்றபிள்ளைகளைச்சேர்த்துக் கொள்ளுவதில்லையே. சேர்த்துக்கொள்ளுவதற்கு தருமசாஸ்திரம் இடம்கொடுக்க வில்லையென்று சொல்லுவார்கள். இந்த காலத்தில், செல்வத்தைப்போன்றே அறிவிலும் கணக்கிலும் முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் நாட்டுக்கோட்டை நகரத்தவர்களுக்கும் திரு. ஸ்லேட்டர்போன்ற மேனாட்டவர்கள் சாஸ்திரங்களில் பிரக்யாதியடைந்திருக்கிறார்கள் என்பது தெரியும். "வட்டியால் பாப்பான் ஜீவிக்கக்கூடாது, வட்டியால் ஜீவிப்பவனிடம் தானம் வாங்கப்படாது" என்கிறது தருமசாஸ்திரம். நாட்டுக்கோட்டை நகரத்தனிகர்களிடம் தானம்வாங்க எந்தபாப்பான் தருமசாஸ்திரத்தை யனுசரித்து மறக்கிறான்? பணக்காரர்களுக்கு பல சுகபோக தொந்தரவுகளாலும்படித்தவர்களுக்கு வயிறுபெரிதாக இருப்பதாலும் இதை நினைக்கமுடிவதில்லை. பண்டிதர்களாவது இந்த நியாயங்களை ஜனசமூகங்களுக்குச் சொல்லட்டும். இதை விட்டுவிட்டு "இயற்கை அழகுவேண்டும், உன்னிப்பார்க்கவேண்டும், பன்னியால் தெரியவேண்டும், தவம் கிடக்கவேண்டும்" என்னும் அர்த்தம் கண்டுபிடிக்க முடியாதபேச்சால் என்ன பயன்?

"தற்காலப்படிப்பு நம்சாஸ்திரத்திற்காவது நம் மதத்திற்காகவாவது ஏற்றதல்ல, கேவலம் ஆண்டியாய்ச்செய்துவிட்டது" என்றும் "இந்தப்படிப்பைப்படித்து பிராமணன் ஏன் சேவகனாக ஆசைகொள்ளவேண்டும்" என்றும் சபைத்தலைவர் கேட்கிறார். அந்தப்படிப்பைப்படித்து ஆண்டியாகவும் சேவகாவிருத்திக்கு ஆசைப்படவும் பாப்பார்களைக் கட்டாயப்படுத்தினவர்கள் யாருமில்லை. சபைத்தலைவரான திரு. டி. ஆர். ராமச்சந்திர அய்யர் வக்கீல்படித்து எழுபதுவயதாகியும் வக்கீல்வேலையை விடமாட்டேன் என்றுசொல்லுவதற்கு எந்தஆசைகாரணமோ அதுவேதான் மற்றபாப்பார்களுக்கும். பிராமணனாக இருந்தால்தானே சேவகாவிருத்திக்குப்போக ஆசைகொள்ளமாட்டான். பிராமணசபைத்தலைவரான இவர் வக்கீல் வேலையில் ஏராளமானபொருள் சம்பாதித்து ஆடம்பரத்தோடு வாழ்வதைப்பார்க்கையில் மற்றபார்ப்பானுக்கும் அதில் ஆசைபற்றுமல்லவா? பிர்மாவின் முகத்திலிருந்து வந்தபாப்பான் இப்பொழுதிருக்கிறான்? இங்கிலீஷ்படித்து பாஸ்பண்ணுவிட்டால் வக்கீல்வீட்டுப்பெண்ணும் வரதக்ஷிணையும் எப்படிக்கிடைக்கும்? பாப்பான் நரைகண்டவுடன் வானப்பிரஸ்தாச்சிரமத்தையடையவேண்டுமென்கிறது ஸ்மிருதிகள். நரையும் கடந்து சந்நியாசமடையும் வயது வந்துகூட சபைத்தலைவர் வக்கீல்தொழில் செய்கையில் இவருடைய வைதீகத்திற்கும், பிராமணதருமத்திற்கும், பிராமணசபைத்தலைவர் என்பதற்கும், இவர் மற்றபாப்பார்களைப்பார்த்து "சேவகாவிருத்திக்கு ஏன்போகிறீர்கள். இப்பொழுது பாப்பான்படிக்கும் இங்லீஷ்படிப்பு நம்மதத்திற்கும், சாஸ்திரத்திற்கும் பயன்தராதே" என்பதற்கும் ஏதாவதுபொருத்தமுண்டா என்பதைக்கவனித்துப்பாருங்கள். பஞ்சமகாபாவங்களையும் விட்டு உலகவிவகாரங்களிலுள்ள ஆசைகளை நீக்கிக்கொள்ளுவதே வானப்பிரஸ்தாச்சிரமதருமம். இதற்கு யாத்திரைஒருபடி. எழுபதுவயதிற்குமேலாகியும் இதற்குக்கூட ஆசைப்படாமல் பொய்க்கு மேல்பொய்யும் மெய்க்குப்பொய்யும் அனுதினமும் விதத்திற்குவிதம் கண்டுபிடித்துக்கொண்டேயிருக்கும் வக்கீல்தொழிலை பணஆசையால் விடாமல்வைத்துக்கொண்டிருக்கும் திரு. டி. ஆர்.

(இதன் தொடர்ச்சி ௧௨-ம பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-அயோத்யாகாண்டம்

* (9-ம் கட்டுரை தொடர்ச்சி)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்)

இனி தசரதனது தீய சிந்தையை ஆராய்வோம். இவன் வசிட்டன் சுமந்திரன் முதலியவர்களைக் கைவசப்படுத்திக் கொண்டு அவர்களுடைய உதவியால் தன் அன்புக்குரிய மகனாகிய இராமனுக்கு முடி சூட்ட அநியாயமாக முயல்கின்றான். இவன் தன் தந்தைக்கு தன்னை மணக்கு முன் செய்து கொடுத்த வாக்குறுதியை அறியாதவளாகிய கைகேசி செய்வாதினத்தால் மனம்மாறி தான் முன் பெற்று வைத்துள்ள இரண்டு வரங்களைக் காரணமாகக் கொண்டு பரதனுக்கு நாடும் இராமனுக்கு காடும் பெறுகிறாள், பெறும்போது தசரதன் அவளைத் தன் மனைவியல்லள் என்றும், பரதன் இராமன் காடேகுவதை விரும்பினால் தன் உத்தரகிரியைகளுக்கு உரியவனாகானென்றும் பயமுறுத்துகிறான். பின் இராமன் காட்டுக்குப் போன போதும் அவ்வாறேகூறுகிறான். தானியம், செல்வம், சேனை இவைகளையெல்லாம் இராமனுடன் அனுப்பி விடுவதாகப் பயமுறுத்துகிறான்.

கைகேசியிடம் இந்தப்பருப்பெல்லாம் வேகவில்லை, அவளுக்கு, தசரதன் கேகயமன்னனிடம் செய்து கொடுத்திருந்த வாக்குறுதி மட்டும் தெரிந்திருந்தால் நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும். அவன் அதைக்கூறி தசரதனுடைய துரோகத்தைக் குடிகளெல்லாரும் அறியுமாறு செய்திருப்பான். அப்படியானால் தசரதன், இராமன், வசிட்டன், சுமந்திரன் இவர்களுடைய சூழ்ச்சிகளையெல்லாம் குடிகள் தெரிந்து இராமன் முதலியோரை வெறுக்கத் தலைப்பட்டிருப்பர். அப்போது இராமன் அரசனாவது முடியாத காரியமாகிவிடும். அதனாலே தான் அந்த மட்டோடு காடேகி வேறுவகையாகப் பரதனை ஏமாற்றி அரசைக் கைக் கொள்ளலாமென இராமன் நினைத்தான். அதனாலேயே அவனை ஒருவராலும் காட்டுக்குப் போகாது தடுக்கமுடியவில்லை.

பரதனோ, தசரதனுக்கு மிகவும் காதல் மிக்க மனைவியாகிய கைகேசியின் மகன். அவனை வஞ்சித்து சத்தியத்திற்கும் விரோதமாக இராமனுக்கு கள்ளத்தனமாக முடிசூட்டுமாறு தசரதன் முயல்வானேன்? இது மிகவும் முக்கியமான தொரு செய்தியே. இதைப்பற்றி முன் கட்டுரைகளில் ஒருவாறு ஆராய்ந்தோம். இங்கே அதை விபரமாக கவனிப்போம்.

பரதனுக்குரிய அரசை இராமனுக்குத் தர தசரதன் முயல்கிறான். பரதனை வேண்டுமென்று நாட்டை விட்டு அனுப்பினான். இப்போது இராமன் நாட்டை விட்டு அதுவும் ஒரு குறித்தகால அளவுக்குப் பிரிந்திருக்கச் சம்மதிக்கமாட்டேனென்கிறான். இராமனோ இலக்குவனோடு காட்டுக்குப்போகிறான். ஆனால் இலக்குவன் போவதைப்பற்றி தசரதன் ஓர் சொல்லும் சொல்லவில்லை. அவன் காடேகுவதைப்பற்றிய கவலையும் தசரதனுக்குக் கொஞ்சமும் இருந்ததாகத் தெரியவில்லை. இதை மொழிபெயர்ப்பாளரொருவராகிய சீனிவாசய்யங்காரும் கவனித்து ஓர் குறிப்புமெழுதியிருக்கிறார். அயோத்தியா காண்டம் சருக்கம் 38, பக்கம் 164 ல் "லக்ஷ்மணனைப் பற்றித் தசரதர் பேசுவதே யில்லை. இந்த விடத்தில் ஏதோ வாய்தவறி அவனுடைய பெயரைச் சொல்லி விட்டார்போலும். காட்டிற்குப்போகையிலும் அவனுடன் பேசவுமில்லை; ஆசீர்வதிக்கவுமில்லை; வருந்தவுமில்லை. ஆச்சர்யம்!" என்று அவர் ஆச்சர்யத்துடன் குறித்துள்ளார். இவ்விதமாக மற்றைய மக்களிடத்தில் பாராமுகமாகவும் வெறுப்பாகவும் நடந்து கொள்ளுவதற்கும் இராமனிடத்தில் மட்டும் மிகவும் பற்றுதலோடு நடப்பதோடு அவனுக்காக தன்னுயிரையும் கொடுப்பதற்குத் தயாராயிருப்பதற்கும் வேறு காரணம் வேண்டும். இல்லையேல் இத்தசரதன் இவ்வாறு நடக்கக் காரணமேயில்லை.

தசரதனுக்கு எண்ணிறந்த மனைவிகளிருந்தனரென அறிகிறோம். அவர்களும் இராமனுடைய தாயாகிய கோசலையுட்பட எல்லா மனைவியரையும் தயரதன் வெறுத்தனனென்றும் அறிகிறோம். இதைப்பற்றி இராமன்கூட காடேக விடை பெறும் பொழுது அவனைக்கண்டிக்கிறான். இதற்குக் காரணம் ஏனைய பெண்களினும் கைகேசி கொண்டிருந்த அழகும் அறிவுமே. அவளுடைய பேரழகில் அவன் தானே ஈடுபட்டான். அவளுடைய அறிவால் அவனுக்கு மிகவும் அன்புடையாள் போல அவள் நடந்த நடை அவனை அவளிடத்தில் மேலும் மேலும் அதிகமான பற்றுதலோடிருக்குமாறு செய்தது. இவ்விதமானதே இவனுக்கு இராமனிடத்தில் ஏற்பட்ட பற்றுதலும்.

இராமன் இயல்பாகவே பேரழகன். அவனுடைய சிறந்த அறிவால் தசரதனிடத்தில் நெருங்கிப் பழகி அவனுடைய பற்றுதலுக்கும் இடமானான். தசரதன் இராமனுடைய அழகில ஈடுபட்டுபோலி ஒழுக்கத்தால் மேலும்மயங்கி, கிழவனானபடியால் கைகேசியிடத்தில் கொண்ட பற்றைப் போல இவனிடத்திலும் பற்றுதல் கொண்டு இவனை எப்போதும் தன் பக்கத்தில் வைத்துப் பார்க்கவேண்டும் என்றும் அடிக்கடிமார்போடு தழுவவேண்டும் என்றுமமிகவும் விரும்பினான். இதனாலேயே தசரதன் இராமனை ஏனையமக்களிடத்திலும் அதிகமாக நேசித்து அவனுக்காக எத்தகைய வஞ்சகத் தீய செயலையும் கள்ளத்தனமாகச் செய்யத் தயாராகிறான்.

விசுவாமித்திர முனிவன் இராமனை அழைக்க வந்த போது தசரதன் (பாலகாண்டம் சருக்கம் 20) "இராமன் நால்வரில் மூத்தவன், மற்றவர்களை விட அவனிடத்தில் எனக்கு விசேஷ பிரேமை, அவனை விட்டுப் பிரிந்தால் ஒரு முகூர்த்தமாவது என் உயிர் தாங்காது" என்றுகூறுகிறான். அயோத்தியா காண்டம் முதற் சருக்கத்தில் மற்றைய பிள்ளைகளை விட இராமனிடம் அதிகப் பற்றுதலை அவன் வைத்திருந்தானென வால்மீகி கூறுகிறார். அதனாலேயே அவனுக்கு முடிசூட்டி அவனழகைப் பார்க்க விரும்புகிறான் மூன்றும் சருக்கத்தில் வால்மீகி நமது கருத்தைத் தெளிவாகக் கூறுகிறார். "இராமனுடைய அழகை எத்தனை தடவை பார்த்தாலும் போதுமென்று தோன்றாது. உத்தம குணங்களும் அழகும் வாய்ந்த புருஷனைக் கண்டு ஸ்திரீகளுடையமனம் களிக்கும். தன்னைப் பார்க்கும் புருஷர்களுடைய கண்களையும்மனதையும் இராமன் கொள்ளை கொள்ளுகிறவன், கோடைகாலத்து வெயிலில் தபிப்பவர்கள் மழையைப் பெய்து குளிர்ச்சியைக் கொடுக்கும் மேகத்தை எவ்வளவு தடவை பார்த்தாலும் திருப்தி அடையாதது போல தன்னை நோக்கி வரும் இராமனைப் பார்த்துப்பார்த்து தசரதன் திருப்தி அடைய வில்லை. அவன் இராமனை கைசளாற் பற்றியெடுத்து இறுகத்தழுவி ஆனந்த பரவசனானான்." எனக்கூறுகிறார். அயோத்தியாகாண்டம சருக்கம் 11 ல் இதையே வால்மீகி முனிவர் தசரதன்வாக்காலும் மிகவும் விளக்கமாகக் கூறுகிறார். தசரதன் கைகேசியைத்தூக்கி மடிமீது வைத்துக் கொண்டு "அழகில ஈடற்றவனே! பெண்களுக்குள் உன்னைககாட்டிலும் எனக்குப் பிரியமானவர்களுமுண்டோ? அதைப் போலவே ஆண்களுக்குள் இராமனைக்காட்டிலும் எனக்குப் பிரியமானவர்களுமுண்டோ? என் உயிர் நிலையும் சிறந்தவனுமான அந்த இராமன் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். ஒரு முகூர்த்த காலமாவது எவனைப்பார்க்காமலிருந்தால் என் உயிர் தரிக்காதோ அந்த இராமன் மேல் ஆணையிடுகிறேன். உன் எண்ணத்தைச் சொல் என் தேகத்தையும் பிராணனையும், பரதன்முதலியமற்ற புத்திரர்களையும், மற்ற பந்துக்களையும் இழக்கச் சம்மதிப்பேன்; இராமனை மாத்திரம் விட்டுப் பிரியச் சம்மதிக்க மாட்டேன்; அவன் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன், உன் மனத்திலிருக்கும் விருப்பத்தைச் சொல்" என்று வேண்டிக் கொள்கிறான். இது கைகேசி வரத்தைக் கேட்காத முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சி. இதனால் இராமனிடம் அவன் கொண்ட மோகம் இன்ன விதமானதென்று கூறுகிறான். குடி வெறியரும், காமவெறியரும், கவலைமிக்கு மனமுடைந்தாரும் தங்கள் மனத்திலுள்ள உண்மை யெண்ணங்களைப் பிறரறியுமாறு கூறுவாரென்பது அறிஞர்கள் முடிபு. அவ்வாறே காம வெறி மிக்குடைய தசரதன் தன் மனத்தில்தோன்றுகிற எண்ணங்களை ஒளியாமல் வெளிவிட்டுள்ளான். அதுவும் கைகேசி முன்னிலையிலேயே 'உன் மேல் அன்பு கொண்டது போல ஆணை இராமனிடமும் அன்புடையேன், உன் மகன் பரதன் முதலியோரை இழக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் இராமனைச் சிறிதுநேரம் விட்டுப் பிரியவும் சம்மதியேன்' என்று கூற வேண்டுமானால் அவன் இராமனிடம் கொண்டிருந்த மயக்கம் எத்தன்மையதாயிருத்தல் வேண்டும்!

சருக்கம் 12 ல் "என் மூத்த மகனான இராமனைப் பார்க்கப்பார்க்க எனக்குப் பிரீதி வளர்கிறது. அவனை ஒரு கணம் பார்க்காமலிருந்தாலும் என் உயிர் போய் விடும். இராமனில்லாமல் என் தேகத்தில் பிராணன் நிற்காது." என்று கதறிக் கொண்டு தசரதன் கைகேசி காலில் விழுகிறான் "நான்கு பிள்ளைகளுக்கும் இந்த நாட்டைச் சமமாகப் பிரித்துக் கொடுக்கிறேன். அல்லது பரதனுக்கு முடிசூட்டுவிக்கிறேன். இராமன் மாத்திரம் வயது சென்ற என்னருகில் இருக்கும்படி ஒப்புக் கொள். இப்படிச் செய்யாவிட்டால் உன் எண்ணம் நிறைவேறாது" என்று மறுபடியும் கூறுகிறான்.

"இராமன் காட்டுக்குப் போவேனென்று கூறிவிட்டால் அது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருமே" என்று இராமனுடையபொய்யொழுக்கத்தை விரும்புகிறான். பின் விடை பெற வந்த இராமனை முறட்டுத்தனத்தால் அரசனாகும்படி தூண்டுகிறான் இவ்விதமெல்லாம் செய்வதற்குக் காரணம் அவன் இராமனிடம் கொண்டிருந்த காமமேயாகும்.

இராமனுக்கு அரசைத் தர பலவிதத்திலும் முயன்றும் பலன் பெறாமல் காட்டுக்குப் போகும் இராமனைத் தொடர்ந்து ஓடுகிறான். இலக்குவனைப்பற்றி அவன் பேசவுமில்லை, வாழ்த்தவுமில்லையென முன்னரே குறித்துள்ளோம். பரதனை வேண்டுமென்றே நாட்டைவிட்டனுப்பினான், இராமனை அனுப்ப வருந்துகிறான், இராமன் போகும் போது அவனை நோக்கியே வருந்துகிறான், இலக்குவனை நோக்கி ஒரு சிறிதும் வருந்தவில்லை. இராமன் விரைவாகப் போக அவன் கண்ணுக்கு மறைகிற வரை அவனைப் பார்த்தபடியே நிற்கிறான், அவ்விடத்திலிருந்து தன் கண்களை அவன் எடுக்கவேயில்லை.

இராமனை வழியனுப்புமுன் தசரதன் (சருக்கம் 34) "இன்று இரவு நீ புறப்படுவதில் எனக்கு கொஞ்சமேனும் பிரியமில்லை. நீ போகவே கூடாது. உன்னை ஒரு இரவு முழுதும் பார்க்கும் நன்மையாவது எனக்குக் கிடைக்குமல்லவா!" என்று கூறி அன்றிரவு மட்டுமாவது அவனைத் தன்னருகில்வைத்துப்பார்க்க விழைகின்றான். இராமன்

(இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின்

# 7-8 வது ஆண்டு விழா.

(திரு. சுந்தரம் எழுதுகிறார்.)

சென்னை "நவசக்தி" ஆசிரியர் உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் தலைமையில் நாளது ஜனவரி மாதம் 1, 2 தேதிகளில் சொற்பொழிவாளர்கள் பலர் தொண்டர்பணி, அறிவுடைமை, பெரிய புராணம், சைவசமய நடைமுறை, சைவசமயமும் நமது கடமையும், நால்வர் பெருமை, மங்கயர்க்கரசியார் என்பன முதலிய பொருள்பற்றி உபந்நியாசஞ் செய்தார்கள். இவைகளில் முக்கியமாக அறிவுடைமை, சைவசமயமும் நமது கடமையும், என்பனவைகள் கவனிக்கத்தக்கவை. அறிவுடைமை என்னும் பொருள்பற்றி உபந்நியாசம் செய்தவர் திருக்குறள் அவதானியார் தென்காசி திரு. தி. ப. சுப்பிரமணியதாஸ் என்பவர். இவருடைய உபந்நியாசம் புராணங்கள், கோவில், குளம், தீர்த்தம், மதம், சமயம், கடவுள் இவைகளை நம்பி முயற்சியில்லாது பாமர மக்களை ஏமாற்றும் சில பிரசங்கிகளுக்கும் சங்கங்களுக்கும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. அவ்வுபந்நியாசத்தின் சுருக்கம்:—

மக்களாய்ப்பிறந்த ஒவ்வொருவருக்கும் அறிவுவேண்டியதவசியம். அறிவுடையோர் எல்லாம் உடையர். அறிவிலார் எல்லாமிருந்தும் ஒன்றுமில்லாத கயவரேயாவர். தற்காலம் மக்களிடம் அறிவுவளர்ச்சியில்லாமையினாலேயே சில சுயநலப் பண்டிதர்களால் மக்கள் ஏமாற்றமடைகிறார்கள். கல்விச்செல்வம் பொருட்செல்வம் உடையவர்கள் மக்கள் அறிவு வளர்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்வார்களானால் அதுவே அவர்களுக்கு ஒரு பெரும் புகழாகும். மக்கள் விடுதலையடையவேண்டுமானால் கடவுள், மதம், சமயம், புராணம், காவியம், இனிமை, நயம் என்று பிரசாரஞ் செய்வதைப்பார்க்கிலும் மக்களுக்கு அறிவு வளர்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்து கொண்டு வந்தால் அவரவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களைத்தேடிக்கொள்வார்கள். கடவுளுங்கூட அறிவுடைய மக்கள் முன்னிலையில் தானே தோன்றிவிடுவார். தரகர்கள் தேவையில்லை. மூடநம்பிக்கைகள், மூட பழக்க வழக்கங் தானே தொலைந்து விடும். ஆசிரியர் திருவள்ளுவரும் "அறிவும முயற்சியும ஒருங்கு சேர்ந்தால ஒருவனது குடி உயரும், முறையே நாடும் தேசமும் விடுதலை அடையும், அறிவும் முயற்சியும் ஒருங்கே அமையப் பெற்றவன் தான் பிறந்த குடியை உயர்த்துவான்" என்றும் "அதற்கேற்ற கருமங்களை செய்பவனுக்குகடவுள் தானேதோன்றி அவர்கள் கருமத்தை முடித்துவைப்பர்" என்றும் உறுதி கூறுகிறார். ஆகவே நாம் நம் நாட்டு மக்களுக்கு அறிவையும் முயற்சியையும் கொடுத்து விடுதலையடையச் செய்யவேண்டுமே தவிர பொது அறிவிற்குப் புலனாகாத தற்கால போக்கிற்கு முரண்பட்ட பழம் புராணங்களையும் காவியங்களையும் சிறப்பு வகையால் "அதற்குப்பொருள் இது, இதற்குப் பொருள் அது" என்று வியாக்கியானஞ் செய்து பொழுது போக்குவதற்கு தெய்வப்புலமை திருவள்ளுவர் "அறிவுடைமை" அதிகாரத்தில் இடமில்லை. நாடு தற்காலம் வறுமையால் பீடிக்கப்பட்டு பசி நோயால் வருந்திக்கொண்டிருப்பதால் வியாக்யானங்களையும், தத்வார்த்தங்களையும் விரும்பவில்லை என நமதவதானியார் மிகத்தெளிவாய் உபந்நியாசம் செய்தார்.

இரண்டாவதாக, டாகூர் புரொபஸர் உயர்திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M. A. M. L. பேசியதாவது:—

சைவ சமயம் என்பது சிவனை கடவுளாக வழிபடும் கொள்கையுடையது. ஒழுக்கத்தை அடிப்படையாகக்கொண்டது. பண்டைக்காலத்தமிழர்கள் கடவுளை விருக்ஷங்களின் அடியில் உருவமாகக்கொண்டு வழிபட்டு வந்தார்கள். காலப்போக்கில் கட்டிடங்கள் (கோவில்கள்) தோன்றின. ஆனால் அவைகள் ஓவியக்காரர்களால் மக்கள் அறிவு வளர்ச்சி, வாழ்க்கைக்குறிய சின்னங்கள் போன்ற சித்திரங்களால் கட்டப்பட்டன. பின்னால் கோவில்கள் மக்களை ஏமாற்றிப் பணம்பறிக்கும் இடமாக மாறிவிட்டன. சமயத்தினாலும் மதத்தினாலும் ஜாதிப்பிரிவினையோ உயர்வு தாழ்வு மக்கள் பிறவியினாலேயோ கிடையாது. தற்காலம் ஜாதிதிமிர் யேகம் உண்மைச்சமயங்களைமறைத்து விட்டது. உண்மைச்சமயச் சட்டங்களில் கடவுள் முன்னிலையில் மக்களுக்கு வழிபடும் உரிமை உயர்வு தாழ்வில்லாது சமத்துவமாயும் சமசுதந்திரமாயுமிருக்கக் காண்கின்றோம். அத்தகைய சட்டங்கள் ஆகமமென்றும் வேதமென்றும், சொல்லப்படுகின்றன. ஆகமங்களும், வேதங்களும் காலத்திற்கும் மக்கள் அறிவிற்கும் ஏற்றவாறு அவ்வக்கால அறிஞர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய்ச்சி மூலமறிகிறோம். அதை ஒரு சுயநலவகுப்பாரும் அவர்களுடன் கலந்து மயக்கங்கொண்ட நம்மவர்களில் சிலரும் கடவுள் சொன்னது அநாதி என்று பாமர மக்களை ஏமாற்றி வருகின்றார்கள். அது போலவே புராணங்கள், காவியங்கள் காலத்துக்கேற்ற முறையில் தங்கள் தங்கள் சுயவேத்தை நாடி ஒவ்வொரு சமயத்தாராலும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய்ச்சி மூலம் நாம் இப்பொழுது அறிகிறோம். அவைகளில் மக்கள்வாழ்க்கைக்கும் அறிவுவளர்ச்சிக்கும்தற்காலப்போக்கிற்கு முறண்பட்டவைகளையும் தவறாக இருப்பவைகளையும் ஒழித்துவிடவேண்டியதுதான். அவைகளிலுள்ள குற்றங்களை எடுத்துச் சொல்லுபவர்களிடத்தில் நாம் பொறாமையோ பகைமையோ காட்டுவதில் பயனில்லை. குற்றங்களை ஒப்புக்கொண்டு சீர்திருந்துவது தான் நமது கடமை. குணம் குற்றம்எடுத்துச் சொல்லும் சுதந்திரம் ஒவ்வொருவனுக்கும் உண்டு. அதற்கு முட்டுக்கட்டையாய்நின்று அறிஞர்கள் உள்ளதை மறைத்துப்பேசுவதுதான் குற்றமேதவிர அறிவிலார்செய்யும் எத்தகையச் செயலையும் குற்றமாக அறிஞர்கள் கருதார்கள். மேலும் அறிவிலார் செய்யும் எந்தக்கிளர்ச்சியும் நாட்டையோ மக்களையோ கெடுத்துவிடாது. உண்மைச்சமயமோ கடவுளோ மறைந்துபோகாது. அறிஞர்களாயுள்ளவர்கள் சுயநலங்கொண்டு அல்லது பொறாமைகொண்டு ஒரு கிளர்ச்சி செய்வார்களானால் அது நாட்டுக்கும் மக்களுக்கும் கெடுதியாகவும், உண்மை உழைப்பாளிக்கு இடையூறாகவும் முடியும். ஆகவே தற்காலமக்கள் நிலைமை உணர்ந்து மக்கள் அறிவுவளர்ச்சி தற்கால வாழ்க்கைக்குரியவைகளுக்கேற்ற முறையில் புராணங்களோ காவியங்களோ திருத்திதெளிவுபடுத்தி அமைக்கப்படவேண்டும். மடங்கள், கோவில்கள் முதலான தர்மஸ்தாபனங்களில் நம்முடைய பணங்கள் ஏராளமாயிருந்தும் மக்கள் அறிவுவளர்ச்சிக்கான ஏற்பாடுகள் ஒன்றும் காணோம். அறியாமைக்கும், மூடபழக்க வழக்கங்களுக்குந் தான் பயன்படுகின்றன.

நாம் கிளர்ச்சிசெய்து தர்மஸ்தாபனங்களிலுள்ள பணங்களைக்கொண்டு மக்களுக்கு சமத்துவம் சமசுதந்திரம் கொடுக்கக்கூடியகல்வி போதிப்பதற்கு இலவச வாசகக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டும். ஆகமங்கள் வேதங்கள் என்பவைகளில் தள்ளவேண்டியவைகளைத் தள்ளி கொள்ளவேண்டியவைகளை எடுத்து ஆராய்ச்சிசெய்து புகுப்பிக்கவேண்டும். கடவுள் பேரால் மதம், சமயம், இவைகளின் பேரால் மக்களை ஏமாற்றுதல் கூடாது. கடவுள் ஒருவராயிருப்பதால் சமயம் ஒருசமயமாகத்தானிருக்கவேண்டும். மாறுபட்ட சமயங்களிருந்தாலும் ஒவ்வொரு சமயத்தின் அடிப்படையான கொள்கையும் ஒழுக்கம், அன்பு, வாய்மை இவைகளைக்கொண்டதானதால் நமக்கு சமயச்சண்டைகள் வேண்டாம். ஜாதிபேதத்தால் மக்களிடை பகைமையும் பொறாமையும் ஏற்படுகின்றன. இவைகள் தொலைவதற்கு இவைகளைப் போதிக்கும் போலிவேதங்களை தொலைத்துவிட்டோமானால் மக்கள் சமசுதந்தரத்தைப் பெற்றுவிடுவார்கள். இத்தகைய வேலையை மடாதிபதிகளும் தர்மஸ்தாபன அதிகாரிகளும் செய்யும்படி நாம் அவர்களை கட்டாயப்படுத்தவேண்டும். முக்கியமாக உண்மையான வேதங்கள் ஆகமங்கள் சொல்லுகிறபடி ஒழுக்கமும் யோக்கியமும் அன்பும் அறிவுமுள்ளவர்கள் எந்தவகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் அத்தகையவர்களை கோவில்களுக்கு அர்ச்சகராகவும் மடங்களுக்கு அதிபதிகளாகவும் நாம் கிளர்ச்சி செய்து ஏற்படுத்துவோமானால் ஜாதிசண்டைகளும் பிறப்பில் உயர்வுதாழ்வுகளும் அடியோடு ஒழிந்துவிடும். தொடரும்.

## ஒரு விதவைப்பெண் தேவை

சைவவெள்ளாஞ் செட்டியார் வகுப்பைச்சேர்ந்த 24 வயதுள்ள கல்யாணமாகாத வாலிபர். தமிழ் நன்குபடித்தவர். வர்த்தகர். பொதுநல சேவையில் உழைத்துவருகிறவர். பூஸ்திதியுண்டு. கம்பீரமான தோற்றமும் நல்ல அழகும் வாய்ந்தவர். இவருக்கு படித்த அழகுள்ள ஒரு விதவைப்பெண் தேவை. கலப்பு விவாகத்திற்கும் சம்மதமுடையவர். விலாசம்—

Y. C/o. பத்திராதிபர், 'குடி அரசு' ஈரோடு.

# கான்பூரில் சுயமரியாதை கிளர்ச்சி.

## தலை கீழான புரட்சி இல்லாமல் தலை எடுக்கமுடியாது.

சோழவந்தன் ஸ்ரீமான் முனகால எஸ். பட்டாபிராமய்யர் மொழி பெயர்த்தது.

(கான்பூரில் வெளிவரும் பெயர் பெற்ற ஹிந்தி வாரப்பத்திரிகையான 'பிரதாப்'பில் 9—12—28 ல் ஜாதிக்கட்டையுடைக்குஞ் சங்கக் காரியதரிசி லாகூர் ஸ்ரீமான் சந்த்ராம் பி. ஏ. அவர்கள் 'உலகப்புரட்சியின் சக்கரத்தில்நாம்எங்கே' என்ற தலைப்பில் எழுதியது.)

வீழ்ந்துகிடக்கும் ஜாதி, புரட்சி— பெருந்தலைகீழ் புரட்சி-யில்லாமல் உயிர்த்து எழுந்து சுக க்ஷேமங்களையடைய முடியவே முடியாது. ஹிந்துஜாதி நெடுங்காலமாய் வீழ்ச்சியடைந்து இருக்கிறது. அது அறம், அரசியல், அறிவு, உடல், ஒழுக்கம், ஒற்றுமை, முதலான எல்லாத்துறைகளிலும் வீழ்ச்சியடைந்திருக்கிறது.

சிறு சிறு சீர்திருத்தங்களால் சாகக்கிடக்கும் ஹிந்து ஜாதியை உய்விக்க நினைத்தவர்களால் இது வரை ஒன்றையுமே சாதிக்கமுடியவில்லை. நம்மில் அசட்டை, கலகம், சுயநலப்பிரியம், பிறவிச்செருக்கு, பேடித்தனம் இவைத்தோரைத்துன்புறுத்தல் கியவைகளால் அழுக்கேறிக்கிடக்கிறது. துர்நாற்றம் வீசும் இவ்வழுக்கைத் தொலைக்க பெரும் புரட்சியாலல்லாமல் மற்றெவ்விதத்திலும் முடியாதென உறுதி கூறலாம்.

நம்மைச்சுற்றியுள்ள வெளி நாடுகள் முன்னேறிச் சென்று விட்டன. ஆனால் நாமோ தாழ்த்தப்பட்டோரை கிணற்றில் தண்ணீர் எடுக்க விடுவதாவேண்டாமா? என்ற ஆழ்ந்த யோசனையிலேயே இன்னமும்இருக்கிறோம். மற்ற நாட்டவர்கள் நம்மைக்குறித்து இவ்விதயோசனையிலாழ்ந்து கிடப்பது ஓர் ஆச்சரியமல்ல.

நாங்கள்தான் சீர்திருத்தச்சிரோண்மணிகள் என்று செருக்குக்கொண்டிருக்கும் ஆரியசமாஜத்தாருங் கூட ஜாதிப்பிரிவுகள் சாஸ்திர சம்மதமாக இருக்கக்கூடுமோவென ஐயுறுகிறார்கள். ஆரிய சமாஜத்தினுடைய இத் தாழ்ந்த நிலை பரிதாபப்படவேண்டியதாயிருக்கிறது.

ஸ்வாமி தயானந்தர் நம்மை எக்குழியிலிருந்து மீட்க விரும்பினாரோ அப்படுகுழியிலேயே நாம் மீண்டும் விழப்பார்க்கின்றோம். அவ்வாறு பண்டைய பழக்கங்களைக் கொண்டாடிக் கண் மூடித் திருமாணிக்கங்களும் திருட்டுச் சாஸ்திரங்களைக் கைக்கோலாகக் கொண்டேவும் குருட்டு வைதீகர்களைப்பின் பற்றி நடப்பவர்களும்பெருங்கிளர்ச்சியுடன் பொங்கித் ததும்பும் புரட்சிக்கடலின் பிரளய ஆவேசத்துக்குத் தப்பி இனிமேல் வாழமுடியுமோ?

சாஸ்திரங்களையும், ஸ்மிருதிகளையும் நம்மைபோன்ற மனிதர்கள் தானே இயற்றினர். அவ்வாறிருக்க இவ்வெண்ணம் இவர்கள் புத்திக்கு ஏன் எட்டுவதில்லையோ யாமறியோம்.

இவ்வமயம் நம் சமூகத்தை க்ஷயநோய் வாய்ப்பட்ட சேயைப்போன்றும், அந்துகள் அரித்த நெல்மணிகள் போன்றும் ஜாதிப்பிரிவுகள் செய்து வைத்திருப்பது வெள்ளிடைமலை. அவ்விதமிருக்க, அழுகி யொழுக்கிக்கொண்டிருக்கும் சாஸ்திரங்களையும் புழுத்துச்சிதறிப்பறக்கும் ஸ்மிருதிகளையும் தேனைத்தடவி விழுங்க நாம் முயலலாமோ?

என்ன அடிமை தர்மம்! என்ன அடிமைத்தனமான மனப்பான்மை! நம்முடைய புத்திகளும் இன்ஸால்வெண்ட் மனுக்கொடுத்து விட்டதென்றே நாம் நினைக்கவேண்டும். இவ்வழுகிய மனப்பற்றை அறவேயொழித்தாலொழிய நாம் ஜீவித்திருக்க முடியாது. ஏ! கண்மூடித் திருமாணிக்கங்களே! சாஸ்திரங்களும், ஸ்மிருதிகளும், புராணங்களும், கிரந்தங்களும் மனிதர்களுக்காக உண்டாக்கப்பட்டனவேயன்றி மனிதர்கள் அவைகளுக்காகப் படைக்கப்படவில்லையென்பதை இனி மேலாவது உணருங்கள்.

இவ்வித பிற்போக்கையடைவிக்கும் நூற்கள் நம்முடைய முன்னேற்றத்திற்குத் தடையாகவிருக்குமானால் அவைகளை உடனே குப்பைத்தொட்டியில் எறிந்து விடுங்கள். அவ்விதம் வீசியெறியத் தயங்குவீர்களானால் புத்தயிருட்டும் புரட்சி புரட்சி என்ற வார்த்தையைச் சொல்லி வீண்காலம் போக்காமலும் அப்புனிதமான புரட்சியெனும் பெயரையுங்கெடுத்துவிடாமலுமிருக்க உங்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

புரட்சியின் வழி! மிகவுங்கடினமானது, ஆனால சிற்றின்பப்பிரியர்களும் சுகானுபவிகளும் இப்பாதையில் திடமுடன் ஓரடியேனும் முன்னெடுத்து வைக்க முடியாது. ஏனெனின் அவ்வழி கூறியவாளின் முனையையொக்கும் ஆதலால் வீரம் நிறைந்தவன்தான் அவ்வழியிற் காலெடுத்து வைக்கமுடியும். குருடர்களைப் பின்பற்றிச் செல்லும் குருடர்களும் காசிவாசியாகிய பண்டிதர்களுடையவும் தேவபந்தியிலிருக்கும் முல்லாக்களுடையவும் விவஸ்தைக்குத் தலை வணங்கும் அடிமைகளும் கனவிலும் அவ்வழி செல்ல முடியாது.

அன்பே உருவான புத்தனும் அவ்வொடுங்கியசந்தில் தன்னுயிரை முற்றுந்துறந்த நீரர்களே காலடி வைக்க முடியும் ஒரு புறம் மாளவியா, தர்பாங்கா மகாராஜா, ஆதிய மஹாபிராமணர்கள் நம் ஹிந்துக்களின் தலைவர்களாய்? இவர்கள் பெண்களுக்குள் வாகவயதைப்பன்னிரண்டுக்கு மேலுயர்த்தக் கூடாதென்கிறார்கள்! ஜாதிப்பிரிவையொழுக்கி ஹிந்துக்கள்ஒற்றுமைப்பட்டு மேன்மையடைவதைச் சகிக்காதவர்கள் இவர! அவர்களுடைய முழு தர்மங்களும் அடுப்பங்கரையிலும் மடைப்பள்ளியடுப்புகளிலும் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். இத்தலைவர்கள் (தாழ்த்தப்பட்டோரை) மனிதனை மனிதன் தீண்டினால் உடுத்த ஆடையுடன்நீரில் மூழ்குவார்கள், மூழ்க வேண்டு மென்றும் உபதேசஞ் செய்வார்கள், இவர்களை நம் மக்கள் முட்டாள் தனத்தினாலும் மூட நம்பிக்கையாலும் நீடித்த காலமாய் நமக்குள்ளிருந்து வரும் தர்மத்தை விசாரித்தறியாத அடிமைத்தனமான மனப்பான்மையாலும் தலைவர்கள் என்று போற்றுகிறார்கள்? புகழ்கிறார்கள்.

மற்றொருபுறம் ஆப்கானிஸ்தான அரசர் பாதுஷா அமானுல்லாகான் இருக்கிறார். அவர் குர் ஆன் ஷரியத்திஸ்லாம் (ஸ்மிருதிகள்) களின் மிரட்டல்களைச் சட்டை செய்யாது தன்னுயிருக்கே பேராபத்தைத் தேடிக் கொண்டும் ஒரே பிடிவாதத்துடன் தன் நாட்டின் நன்மையையும் மேன்மையையுங்கருதி முரடர்களும் காட்டு மிராண்டிகளும் மதாவேசங் கொண்டவர்களும் ரத்த வெறிகொண்டவர்களுமான ஆப்கானியர்களுக்குள்ளிருந்தகோஷா (படுதாமுறை) வெகுவிவாகம், பிணங்களைப்புதைத்தல் முதலான கேடுவிளைவிக்கும் முறைகளையறவே யொழித்துவருகிறார். இப்பேர்ப்பட்ட மகாபுருஷனுடையபாதங்களை முத்தமிடவேண்டுமென மனமெழும்புகிறது.

காபூல் அரசர் அமானுல்லாகான் இன்னுஞ்சிலவாண்டுகள் வாழ்வாரேயாயின், மதவெறிகொண்ட முல்லா பூஜைபுரியும் மனிதனால் அவருடலுக்கு ஆபத்து நேரிடாதிருக்குமாயின், உலகத்தில் வலுத்த நாடுகளுக்கிடையே ஆப்கானிஸ்தானம் உயர்ந்த பதவியடையுமென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. மாக்ஷிமை தங்கிய ஆப்கானிய அரசரின் புதிய உத்திரவு பின் வருமாறுளது.

"காபூலில் எம்மனிதனும் இஸ்லாம் தர்ம கிரந்தங்களின் விதிப்படி இறந்தவர்களையடக்கஞ் செய்யக்கூடாது, ஏனெனின் இறந்தவர்களை பூமியிற் புதைப்பதால் துர்நாற்றமும் நோயுமுண்டாகின்றன. ஆப்கானிய சர்க்கார் ஜெர்மனியிலிருந்து இரண்டு யந்திரங்களை வரவழைத்துள்ளார்கள். அவைகளுக்குள் பிணத்தைப் போடுவதனால் இரண்டு நிமிஷத்தில் அது சாம்பலாகிவிடும்"

இதிலிருந்து ஆப்கானியர், இறந்தவரை எரிக்குங் கட்டளையை குர்ஆனின் எந்த வாக்கியத்திலிருந்து நிரூபிப்பார்கள்? அமீரவர்கள் ஹஜரத்நூஹ் (Noah) காலத்திய பழம் புத்தகங்களால் தன் நாடு மேன்மையடையும் வழியை மறிக்கக் கட்டளையிடமாட்டார். அவர் எவை தன் நாட்டுக்கு நன்மை பயக்குமென்று கருதுகிறாரோ அவைகளுடனே அமைக்குவதில் சிறிதும் தயங்குவதில்லை. அவர் நெஞ்சில் தன் இனத்தாரை நினைந்து நினைந்து பரிதாபமடைகிறார். சில சமயங்களில் அவர் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகுகின்றது எந்நாட்டுக்கு இவர் மன்னரோ, அந்நாடு பெரும் பாக்கியமடைந்ததாகும். எந்த ஜாதி இப்பேர்ப்பட்ட மனிதரத்னத்தை உற்பத்தி செய்ததோ அச்சாதி பாக்கியமுடையதாகும். இது தான் புரட்சி. இதுவே தலைகீழ் மாற்றம். இன்னும் இதுவே ஜாதியும் தேசமும் சுதந்திரமடையும் வழி.

அமீர் அமானுல்லாகான், தன்னுடைய தலைப்பார்வையையுடைய கண்களால் இவ்வுலகத்தில் விரைவிலே நேரிடப்போகும் பெரும் போரை ஊகித்துப்பார்க்கிறார். வரப் போகிற பெரும்போரில் புவியெங்கும்பரவக் கூடியதான அக்கொடியபோரில் ஆப்கனிஸ்தானம் உயிர் தப்பவேண்டுமானால் கல்வியறி

(இதன் தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.)

வட ஆற்காடு ஜில்லா

## பார்ப்பனரல்லாத வாலிபர்கள்

# முதலாவது மகாநாடு.

நிகழும் ஜனவரி மாதம் 4, 5-தேதிகளில் ராயவேலூர் லக்ஷ்மணசாமி முதலியார் நகரமண்டபத்தில் கூடியது.

### ஊர்வலம்.

வேலூர் வக்கீல் திரு கிருஷ்ண செட்டியார் அவர்கள் இல்லத்திலிருந்து ஊர்வலம் துவக்கப்பட்டது. ஊர்வலத்தில் திருவாளர்கள் கே. வி. மேனன், ராவ் பகதூர் எம். கே. ரெட்டியார், ஈ. வெ. ராமசாமிநாயக்கர், ஆரியா, கண்ணப்பர், தண்டபாணி முதலியவர்களை மோட்டாரில் அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்திருந்தும் திரு நாயக்கர் கால்நடையாகவே செல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க சுமார் ஆயிரம் பேர்கள் வாலிபர்களும் பெரியோர்களுமாக பாண்டு, நாதசுரம் முதலிய வாத்தியங்களோடு 9 மணிக்கு ஊர்வலம் ஆரம்பித்து முக்கிய தெருக்கள் வழியாயும் கடைவீதிகள் வழியாயும் ஜே சப்தத்துடனும் சென்றது. வழிநெடுக அநேகமாக வீட்டுக்குவீடு கடைக்குக்கடை ஊர்வலம் நிறுத்தப்பட்டு தலைவர்கள் மாலையிடப்பட்டு சந்தனம் தாம்பூலம் பன்னீர் தெளித்தல்கற்கண்டு ஆரஞ்சி ஆப்பிள் திராக்ஷை முதலிய பழவர்க்கங்கள் விநியோகிக்கப்பட்டு பெரிய ஆடம்பரத்தோடு சரியாய் 11 மணிக்கு ஊர்வலக் கூட்டம் மகாநாடு மண்டபம் வந்துசேர்ந்ததும்,

### கொடியேற்றம்.

மகாநாட்டு கொடியை திரு ராவ்பகதூர் எம். கே. ரெட்டியார் அவர்களை ஏற்றும்படி வரவேற்புத் தலைவரான முனிசிபல் சேர்மன் திரு பத்மநாப முதலியார் அவர்கள் கேட்டுக்கொள்ள, வாலாஜாபாத் இந்து மதாபிமான பாடசாலை மாணவர்கள் திரு ரெட்டியார் பேரில் கொடியேற்றப் பாட்டு பாட, அப்பாடலையும் ரெட்டியாரின் உருவப்படத்தையும் அச்சடித்த பிரதிகளை பொது ஜனங்களுக்கு விநியோகிக்க திரு ரெட்டியார் அவர்கள் வாலிப சங்கத்தினுடையவும் சுயமரியாதை இயக்கத்தினுடையவும் அருமை பெருமைகளையும் அவைகள் இதுவரை நாட்டில் செய்திருக்கும் வேலையையும் புகழ்ந்துகூறி வாலிபர்களுக்கு அருமையுடன் உபதேசம் செய்து பெருத்த கரகோஷத்தினிடையேயும் ஜே சப்தத்தினிடையேயும் கொடியேற்றினார்.

ராவ் பகதூர் திரு. M. K. ரெட்டியாரவர்கள் கொடியேற்றும்போது பேசியதாவது:—

அன்புள்ள தோழர்களே, நமது இயக்கத்தின் கொள்கை செயல் என்பதையும், வெறும் பேச்சல்ல என்பதையும் நினையுங்கள். மூட நம்பிக்கை யென்னும் சனியன் நம்மைப்பிடித்து நம்மை முன்னேற விடாமல் தடுக்கிறது. அம்மூட நம்பிக்கையை ஒழித்து வெற்றி பெறுவதே நமது வாழ்க்கையின் முக்கிய நோக்கம். பழைமைவற்றினின்று நீங்குங்கள். அடிமைத்தன்மை யூட்டும் பழக்கங்களையும் வழக்கங்களையும் ஒழியுங்கள். நமது தலைவர்களது எச்சரிக்கையான உறுதிமொழிகளை நோக்குங்கள். அவர்களிடத்து உண்மையாயிருங்கள். நன்மை தீமை இரண்டிலும் அவர்களோடு ஒட்டி ஒழுகுங்கள். அவர்களையே பின்பற்றுங்கள். அவர்களை என்னவென்று வினவாது அவர்கள் சொல்லுவதைச்செய்து அதனால் வரும் பயனை ஏற்றுக்கொள்ளுங்கள். பின்னடையாதீர்கள். தைரியமாயிருங்கள். தைரியம் உள்ளவர்களே ஜெயம் பெறுவார்கள்.

### மகாநாடு திறப்பு.

கொடியேற்றம் முடிந்தவுடன் ஜனக்கூட்டம் மண்டபத்திற்குள் எள்விழ இடமில்லாமல் தலைவர்கள் முதலிய சில முக்கியஸ்தர்கள்கூட உட்செல்ல முடியாத அளவுக்கு நிறைந்து விட்டது. வந்திருந்தவர்களில் முக்கியஸ்தர்கள் திருவாளர்,

ஈ. வெ. ராமசாமி நாயக்கர், ராவ்பகதூர் எம். கே. ரெட்டியார், பத்மநாப முதலியார், திவான்பகதூர் டி. வரதராஜுலு நாயுடு, ராவ்பகதூர் வி. முருகேச முதலியார், ராவ் சாகிப் ராஜகோபால் நாயுடு, ஜெயராம்நாயுடு, ஜே. எஸ். கண்ணப்பர், ராஜு முதலியார், ஆர்யா, மிஸ்டர் பிட்மென், என். தண்டபாணி பிள்ளை, சுந்தரராஜுலு நாயுடு, எஸ். எஸ். பாணி, கர்னல் சங்கரன், டாக்டர். வி. முருகேச முதலியார், டி. கே. நயினார். ஜானகிராம், ஏ. லோகநாத முதலியார். திரு கிருஷ்ண செட்டியார் பி. ஏ. பி. எல், டாக்டர். சீனிவாச முதலியார், பீ. ராஜவேலு முதலியார், ராமச்சந்திர பூபதி, கே. பி. சந்தோஷம், ராஜ் பிள்ளை, W. ராமலிங்கமுதலியார், வி. மாசிலாமணி முதலியார், வீ. வீராசாமி முதலியார், கே. சி கந்தசாமி முதலியார், வேலு கவுண்டர், கே. பி. சிதம்பர முதலியார், சி. தெண்டபாணி பிள்ளை, வி. ஆர். குப்புசாமி முதலியார், எஸ். பி. துரைசாமி முதலியார், சி ராஜு முதலியார், ஞானிபாலசுந்தர முதலியார், பி. சி. முருகேச முதலியார், வி வி. பிள்ளை, எஸ். டி. அருணாசல முதலியார், டாக்டர் பாலசுந்தர முதலியார், துரைசாமி நாயுடு, பொன்னம்பல செட்டியார், சஞ்சீவிவேலு பிள்ளை, வேலுசாமி முதலியார், முத்துக்குமாரசாமி முதலியார், வி, ஜி. அருணாசல முதலியார், திருஞான முதலியார், ஏ. ஆர். செல்லப்பா, ரெங்கசாமி ரெட்டியார், கந்த கவுண்டர் மற்றும் பலரும் ஆவாரகள்,

திரு சந்தோஷம் அவர்கள் வாலிபசங்கச்சார்பாக திரு. நாயக்கருக்கு ஒருவரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுத்தார். பிறகு, திருவாளர பத்மநாபநாயுடு அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைக்கும்படி திரு. ஈ வெ. ராமசாமி நாயக்கரைக் கேட்டுக்கொள்ள அவர் எழுந்து சில வார்த்தைகள் சொல்லி மகாநாட்டைத் திறந்துவைத்ததாக வெளியிட்டார்,

### திரு நாயக்கர்.

சகோதரசகோதரிகளே, நமது நண்பரும் சகோதரருமான திரு. ஆரியா அவர்களால் துவக்கப்பட்ட இந்தபார்ப்பனரல்லாத வாலிபர் சங்கமானது இப்போது நமதுநாடு முழுவதும் ஏற்பட்டு பெருத்த கிளர்ச்சி செய்து வருகின்றது.

எனது இயக்கத்தையும் தொண்டையும், எனது உடல் நலிவும் சரீரதளர்ச்சியும் எதிரிகள் தொல்லையும் ஒருசிறிதும் தடைசெய்யமுடியாமல் என்னை மேலுமேலும் உற்சாகப்படுத்தி வெற்றிக்கொடியை நாட்டி வருவதற்கு பெரிதும் உதவியாய் இருந்து வருவது இந்த வாலிப இயக்கமேயாகும். உண்மையிலேயே இப்பிரதேசத்து வாலிபர்களிடம் எனக்கு அளவுக்கு மேற்பட்ட நம்பிக்கை இல்லாதிருந்திருக்குமானால் என்னுடைய கடையை வெகுநாளைக்குமுன்பே சுருட்டிக் கட்டிக்கொண்டு வேறு ஏதாவது ஒரு துறையில் மூழ்கி இருப்பேன். ஆதலால் இந்த வாலிபஇயக்கம்தான் நமது நாட்டிற்கு மாத்திரமல்லாமமல் வெளிநாட்டிற்கும் சுதந்திரமும் விடுதலையும் சுயமரியாதையும் வாங்கிக்கொடுக்கப்போகின்றது. எப்படி எனில், எந்த ஒரு நாட்டிற்கும் அரசியல் தலைவனோ தேசியத்தலைவனோ மதத்தலைவனோ பாஷைப் பண்டிதனோ சாஸ்திரியோ முயற்சித்து உண்மையான சுதந்திரமோ விடுதலையோ வாங்கிக்கொடுததாக சரித்திரக் காலந்தொட்டு நமக்கு ஆதாரங்கள் கிடையாது. எங்கும் வாலிபர் கிளர்ச்சிதான் விடுதலை அளித்திருக்கின்றது. ஒவ்வொரு விடுதலை முயற்சியும் முதலில் கட்டுப்பாட்டை உடைத்தெறிந்தபின்தான் வெற்றிபெற்றிருக்கின்றது. கட்டுப்பாடுகளை உடைப்பதற்கு வாலிபர்களால்தான் முடியுமேயொழிய மற்றவர்களால் சுலபத்தில் சாத்தியப்படாது ஆதலால் நான்முழுவதும் இந்த வாலிபர்களையே மனப்பூர்வமாக நம்பியிருக்கின்றேன். அவர்கள் இயக்கமும் கிளர்ச்சியும் வெகு சீக்கிரத்தில் உலகையடைந்த முன்வரவேண்டும் என்றும் ஆசைப்பட்டுக்கொண்டு இம்மகாநாட்டைத் திறக்கின்றேன். (பெருத்த கரகோஷம்)

### வரவேற்புப் பிரசங்கம்

மகாநாட்டு வரவேற்புத்தலைவர் திரு. பத்மநாப முதலியார் தமது வரவேற்பு உபன்யாசத்தைப்படித்தார்.

பிறகு தலைவர் திரு. கே. வி. மேனன் அவர்கள் அக்கிராசனப்பிரசங்கத்தை படித்தார். (அப்பிரசங்கத்தை மற்றொருபக்கம் பார்க்க)

### திரு நாயக்கர் உருவப்படத் திறப்பு

இவைகள் முடிந்தவுடன தலைவர், திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் உருவப்படத்

தை திறந்துவைக்கும்படி ஸ்ரீமதி மார்த்தா ஆரியா அம்மாள் எம். ஏ. அவர்களைக்கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவ்வம்மையார் எழுந்து உருவப்படத்தை திறந்துவைக்கும் போது திரு. நாயக்கரைப்பற்றி பேசிய வார்த்தைகளின் சுருக்கமாவது:—

ஸ்ரீமதி மார்த்தா ஆர்யா.

நண்பர்களே திரு. நாயக்கர் உருவப்படத்தை திறக்கும்பெருமையை அளித்ததற்கு நன்றி செலுத்துகிறேன்.

நான், திரு. ராமசாமி நாயக்கர் ஒரு ஒப்பற்ற பெரியாரென்று மதித்திருக்கின்றேன். அவரைப்பற்றி அவரை புகழ்வதற்காக எதுவும் சொல்லப்போவதில்லை. அவருக்கு நாம் நமது மனமார்ந்த நன்றி அறிதலைச் செலுத்தவேண்டிய நிலையில் ஏதாவது சொல்லுவேனே ஒழிய வேறில்லை. நான் ஒருபெண் என்கின்ற முறையில் திரு. நாயக்கருக்குக் காட்டவேண்டியதன்றி அதிகமிருக்கின்றது. திரு. நாயக்கரின் உழைப்பு இந்தியாவின் சமூக சமுதாய முன்னேற்றத்திற்கு எதிர்பார்க்க முடியாதபலனை அளித்திருக்கின்றது.

நாம் அவர் உபதேசத்தைப் பின்பற்றி அவர் ஆசைப்படி நடந்து வருவோமாயின் இந்நாடானது உலகத்திலேயே சிறந்ததான மேல்நாடுகளுக்கு மேல்நாடாகிவிடும்.

மனிதர்களுக்கு வேறுஎந்தக்குணம் சாத்தியமானாலும் பகுத்தறிவு ஏற்படுவது மிகவும் அரிதானகாரியம். பகுத்தறிவைஉடையவர்கள் தானாகவேதலைவர்களாகி விடுவார்கள். நமது திரு ராமசாமிநாயக்கர் ஒப்பற்ற தலைவராய் விளங்குவதற்கும் அவரது தொண்டு நாட்டிற்கு இவ்வளவு பயனளிப்பதற்கும் அவரது அரிய உயரிய பகுத்தறிவே காரணமாகும்.

அவரது பகுத்தறிவின் முன் பண்டைய மூடப்பழக்க வழக்கங்கள் என்னும் வலிமை பொருந்திய கட்டடங்கள் நிலைகுலைந்து சின்னபின்னப்பட்டு மறைந்தோடுகின்றன.

தற்கால நாகரீகத்திற்கு ஒவ்வாததும் நமது முன்னேற்றத்திற்கு இடையூறானதுமான எல்லாக்குருட்டு நம்பிக்கைகளும் மூடப்பழக்க வழக்கங்களும் சூரியனைக் கண்ட பனி போல் மறைகின்றன.

நாகரீகம் என்பது மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு உரியதானது. நாகரீகந்தான் மனிதர்களின் நன் மதிப்புக்கும் நல்வாழ்வுக்கும் அறிகுறி, ஆனால் எந்த தேசத்தில் கோடிக்கணக்கான மக்கள் மிருகங்களிலும் கேவலமாக தாழ்த்தப்பட்டிருக்கிறார்களோ, எந்த தேசத்தில் இவ்வகையில் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்ற முயற்சி செய்யும் பெரியோர்கள் இல்லாமல் இருக்கிறார்களோ, அத்தேசத்தை நாகரீக தேசமென்று சொல்லமுடியாது- மக்களில் பிறவியில் தாழ்ந்தவர்கள் என்ற ஒரு வகுப்பைக்கொண்ட எந்த தேசமும் தன்னை நாகரீகமுள்ளதேசம்என்றுசொல்லிக்கொள்ள உரிமை உடையதாகாது.ஒரு நாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கின்றார்களென்றால், அதுகொடுமையும், மூடத்தன்மையும்கொண்டஒரு கூட்டத்தார் தங்கள்சுயநலத்தைக் கருதி சூழ்ச்சியினாலும்,புரட்டினாலும், ஏமாற்றத்தினாலும் சாதுக்களை அழுத்தி வைத்திருக்கும் அக்கிரமிகளின் செய்கையாகும். இவ்வாறு அக்கிரமங்களால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி புரிந்து கை தூக்கி விடுவதே திரு. நாயக்கரின் முக்கிய தொண்டு. அவர் மேல் ஜாதியாரென்பார்களின் தந்திரங்களையும், கற்பனைகளையும் தாராளமாய் வெளியாக்குகிறார். எல்லாமக்களும் எக்காலத்திலும் ஒன்றுதானென்று போதிப்பதின் மூலம் பொதுவாக எல்லாருக்கும் சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டுகிறார். ஜாதியில் உயர்வு தாழ்வு உண்டு என்பதற்கு ஆதாரமான எல்லாவற்றையும் குப்பைத் தொட்டியில் போடச்சொல்லுகிறார். மானிட இயற்கையை பறை சாற்றுகிறார் இப்பறை சாற்றுவதை கேட்டவர்கள் மயக்கத்திலிருந்து எழுந்து ஜாதி பேதக் கொடுமையிலிருந்து விலகி சுயமரியாதையை அடைகிறார்கள், மக்களின் அவ்வித சுயமரியாதை உணர்ச்சிக்கு திரு. நாயக்கரே மூல கர்த்தாவாகவும் மக்களின் நன்றி பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் பாத்திரமாகவும் விளங்குகிறார்,

இதுபோலவே மக்களில் ஆண்,பெண்களுக்குள்உயர்வு தாழ்வு இல்லையென உறுதிப்படுத்துகிறார். பெண்கள் ஆண்களின் மூர்க்கத்தனத்தினாலும் மிருகத்தன்மையாலும் எண்ணிறந்த ஆண்டுகளாய் விலங்குகளாய் அடிமைகளாய் தாழ்மையாய் நடத்தப்படுகிறார்கள். பெண்கள் புருஷர்களால்அடிமைப்படுத்தப்பட்டு வைத்திருப்பதற்கு ஒப்பான அடிமைத் தன்மைவேறொன்றும் இல்லை. பெண்களைவிடுவிக்க இதுவரை செய்து வந்த முயற்சிகளெல்லாம் மேல் ஜாதிக்காரர்கள் என்பவர்களால் அழிக்கப்பட்டே வந்திருக்கின்றன. இதுவரையில் பெண்கள் அளவுக்கு மீறிய பொறுமையோடு பொறுத்து வந்து திரு. நாயக்கர் அவர்களின் முயற்சியினால் புருஷர்கள் தங்களை ஏமாற்றி வரும் சூழ்ச்சிகளை உணரத்தொடங்கி விட்டார்கள். கல்யாண நிபந்தனை, சொத்துரிமை, சந்ததி பாத்யம், வாழ்க்கை இன்பம் முதலிய எல்லாத்துறைகளிலும் பெண்கள் ஆண்களின் மிருகபலத்துக்கும் மூர்க்கத்துக்கும் கட்டுப்பட்டு ஒவ்வொன்றிலும் உரிமை அற்றவர்களாய் ஒடுக்கப்பட்டவர்களாய் விட்டார்கள் பொருளாதாரநிலைமையில் ஸ்திரீகளுக்கு சமஉரிமையில்லை. மதவிஷயங்களில், சாஸ்திரங்களாலும் சாஸ்திரிகளாலும் அடக்கப்பட்டு விட்டார்கள். கவிவாணர்களும் பண்டிதர்களும் தத்துவசாஸ்திரிகளும் ஆகிய அயோக்கியர்கள் ஒன்று கூடி ஸ்திரீகளை ஏமாற்றி எந்த விஷயத்தையும் அவர்களுடைய சுய சிந்தனைக்கு விடாமல் மோசம் செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் ஸ்திரீகள் அவ்வளவு தூரம் தாழ்த்தப்பட்டிருப்பதற்கு காரணம் அவர்கள் தங்களது பொறுமைக்கு, அளவுக்கு மீறிய மதிப்பு கொடுத்ததுதான். அளவுக்கு மீறிய பொறுமைக்கு பலன் அடிமை என்பதற்கு ஸ்திரீகளின் நிலைமையே சாட்சி. என்றாலும் ஸ்திரீகளுக்கு தங்களுடைய சுதந்தரத்தில் நம்பிக்கை இல்லாமல் போக வேண்டியதில்லை. திரு. நாயக்கர் போன்ற அரிய தலைவர்களின் உதவியாலும் அதனால் ஏற்படும் உணர்ச்சியாலும் வெகு சீக்கிரத்தில் விடுதலை அடைந்து தங்களது உரிமைகளை அடைவார்களென்பதில்சந்தேகமில்லை. மக்களுக்கு மக்கள்சமஉரிமை அடையவேண்டுமானால், அதற்கு எதிரான சகலதந்திரம் மந்திரம், சாஸ்திரம், சட்டம் முதலிய எதையும் எதிர்த்துத்தான் ஆகவேண்டும், கோயில்களிலும், சர்ச்களிலும், மசூதிகளிலும், தொழிற்சாலைகளிலும், நீதி ஸ்தலங்களிலும், தங்களை தாழ்வாக கருதாதபடி எதிர்த்துயுத்தம் தொடுக்கவேண்டும். வேதமோ, பைபிளோ, குரானோ எதுவானாலும் அவைகளை எல்லாம் ஒரு கை பார்ப்பதற்கு துணிந்துகொள்ள வேண்டும். திரு. நாயக்கர் செய்யும் வேலையில் முக்கிய பாகம் இந்த துறைகளில் போராடுவதுதான். அவருடைய பெயர் மதக்கொடுமைகள் சமூகக்கொடுமைகள் அரசியல் கொடுமைகள் ஆகியவைகளுக்கு எமனாய் விளங்குகிறது. அவர் பேரை ஒலிக்க மாத்திரத்தில் குருட்டு நம்பிக்கையும் மூடப் பழக்க வழக்கங்களும், உயர்வு தாழ்வுக்கொடுமைகளும் பஞ்சாய்ப் பறக்கின்றன. திரு. நாயக்கருடைய துணிவையும், உறுதியையும் பார்த்து நீங்கள் அவரை ஒரு சமயம் நாஸ்திகரென்று நினைத்தாலும் நினைக்கலாம். நீங்கள் நினைப்பது ஒரு சமயம் உண்மையாக இருந்தாலும் இருக்கலாம். அதைப்பற்றி நமக்கு கவலையில்லை, நமக்கு வேண்டியது சமத்துவமும் விடுதலையுமேயாகும்- திரு, நாயக்கர், கடவுள் பேராலும், வேதங்களின் பேராலும் குருட்டு நம்பிக்கையின் பேராலும், ஏற்பட்ட வித்தியாசத்தையும், கொடுமையையும் தகர்த்து எறிய பூசாரிகளுடனும் பண்டிதர்களுடனும், சாஸ்திரிகளுடனும செய்துவரும் போரில் நாம் அவருக்கு படையாளாக இருப்போம்- அவரை முழுதும் நம்பி அவரை பின்பற்றுவோம்- திரு ராமசாமி நாயக்கரை இனிமேல் மிஸ்டர் ராமசாமி நாயக்கரென்று சொல்லவேண்டிய அவசியமில்லை. உண்மையானவரும் ஒப்பற்றவரும் ஆன பெரியாரை மிஸ்டர் என்று சேர்த்து சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆகலால் ராமசாமி நாயக்கரை வாயால் புகழ்வதை விட்டு அவரைப்பின்பற்றி அவருக்கு உதவியாய் இருந்து நமது ஆதரவை அவருக்குசெய்கையில் காண்பித்துவிட வேண்டியது தான் நமது கடமை. [illegible] அப் பெருந்[illegible] சாண அதிக ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி பெருத்த கரகோஷத்திடையே திரு நாயக்கரின் உருவப்படத்தின் திறையை ஒதுக்கினார்.—

திரு. நாயக்கரின் சொற்பொழிவு.

சகோதரி சகோதரர்களே! இந்த மகாநாட்டின்திறப்பு விழா நடத்த என்று நான் இங்குவந்தவன் இந்தச் சமயத்தில் என்னைப்பற்றி இவ்வளவு காரியங்கள் நடக்குமென்றும இவ்வளவு தூரம் புகழ்ந்து பேசப்படும். என்றும் நான் நினைக்கவில்லை. ஊர்வல மூலமாகவும் வரவேற்புப் பத்திர மூலமாகவும் எனது படத்திறப்பு மூலமாகவும அளவுக்கு மீறிய உற்சாகமும் வரவேற்பும் புகழ்ச்சி உரைகளும் காணவும் கேட்கவும் நான்மிகுதியும் சந்தோஷமடைகிறேன்- என

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

## வட ஆற்காடு ஜில்லா முதலாவது பார்ப்பனரல்லாத

# இளைஞர் மகாநாடு.

### தலைவர் திருவாளர் கே. வி. மேனன் சொற்பெருக்கு.

எனதருமை தோழர்களே!— என்னை இந்த மகாநாட்டில் தலைமை வகிக்கும்படிக்குச் சிறப்பித்ததில், நான் உன்னத கௌரவத்தை அடைந்துள்ளேன்; இதற்காக நான் முழுமனதுடன் நன்றி பாராட்டுகிறேன்.

### காலஞ்சென்ற பானகல் அரசர்

காலஞ்சென்ற நம் பெருந்தலைவர் பானகல் ராஜாசாகிப் அவர்களின் சமாதிக்கு நாம் மலர்மாலை சாத்தி, நமது நன்றியுள்ள பக்தியை விளங்கிக்காண்பிப்பது முதற்கடமையெனக் கருதுகின்றேன்.

### வாலிபர் இயக்கங்கள்

நண்பர்களே! வாலிபர் இயக்கங்கள் பெரும்போரின் பின் விளைந்த உலகம் பரவிய இயக்கங்களாகும். பெரும்போரில், வாலிபர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்து, முதியார்கள் தாம் அரசியற்றுறைகளிலும் மற்ற துறைகளிலும் தலையிட இயற்புடையவர்கள் என்ற குருட்டுக்கொள்கையை அடியோடு தகர்த்தார்கள். இவர்களியக்கங்களின் முக்கியநோக்கம் உலகத்திலுள்ள சகல வாலிபர்களும் சகோதரத்துவத்தைத் தம்மில் வளர்த்து, வஞ்சகம் பொறாமை முதலியவற்றை விடுத்து, ஒருவரைப்பார்த் தொருவர் முன்னேற்றமடைந்து சுகவாழ்வடைவதே வாலிபர்களின் இயற்கையான பெருந் தன்மையினையும் உதாரத்வத்தையும் கொண்டு, உலகமுழுதும் ஒரு குடும்பமென மதித்து ஒருவர்க்கொருவர் போரிடாது அன்பின் தலைப்பெய்தி அழகிய நல்வாழ்வை அனைவரும் அடைந்திருக்குமாறு, வாலிபர் இயக்கங்கள் தேயந்தோறும் முளைத்து உலகமெங்கும் ஓங்கிப்பரவின.

இந்தியாவிலும், இத்தகைய இயக்கங்கள் முளைத்தெழும் முன்னம், வாலிபர்கட்குள் ஒருவித உள்ளக்கிளர்ச்சிமாத்திரம் தோன்றிவந்தது. நம்முடைய சமூகத்தில் அநீதமான, கொடுமையான, அநாசாரக்கேடான, வஞ்சகமான பல தீமைகள் குடிகொண்டு விளங்கின. நம் முதியார்கள் இவைகளைச் சகசமெனக் கருதி, இவைகளைத்தொலைக்க முற்படாது தயங்கி என்றும்போல்காலங்கடத்தி வந்தனர். தங்கள்வாழ்வில் சகசத்திரகு வந்துவிட்ட பண்டை தீய மூடக்கொள்கைகளின்பற்றையகற்ற நம்முதியவர்கள் பின் வாங்கினர்கள். உயரிய தூரச முற்போக்கான நோக்கங்களைக் கற்பித்து, அவைகட்கு உழைத்து அநுபவ பாத்தியத்தை அறச்சிதைத்து, பொது மக்கட்கு புத்துயிரை அளிக்கவல்ல தற்கால சீர்திருத்தக் கொள்கைகளைப் புகுத்துவதற்கு நம்முதியார்கள் அஞ்சினின்றனர். இக்கோழைத் தன்மை நம்தீவிர முன்னேற்ற உணர்ச்சிக்கு ஊறுவிளைத்து நின்றது. எனவே, வாலிபர்கள்நம் சமூகத்தைபிறர்மதிக்கும்படிநன்நிலைமைக்குகொண்டுவரமுன்வந்தனர். இதுகாறும், நெடுங்காலமாக, சகல துறைகளிலும் ஒடுக்கப்பட்டு, தீண்டப்படாதவர்கள் போன்று கருதப்பெற்று வந்த நம் வாலிபர்கட்கு, சுயேச்சையுணர்வு பொங்கித்ததும்பி ஆத்திரத்துடன் தீவிரப்பட்டு, உயர்வென்றும், உயர்பிறப்பென்றும் நம் மக்களை அடிமைப்படுத்தி ஆழ்த்தியிருக்கும் கொள்கைகளை அழிப்பதற்கு நம் வாலிபர்கள் வீர சிங்கங்களாக, பழைய பழக்கங்களையும் வழக்கங்களையும் அழிப்பதே சான்றெனப் போர்க்கோலம் பூண்டனர். பிற்கால அரசியல் முறையில் தமக்கு மிகுந்த பொறுப்புள்ளதென்று விழித்துக்கண்ணும் கருத்துமாய்த் தலையிட்டுவரும் நம் பார்ப்பனரல்லாதவாலிபர்களின் இயக்கத்திற்குமுன்கூறியவைகளே காரணங்களாகும். நம்முடைய இயக்கம் அதிதீவிரத்தில் முன்வந்ததெனக் கொள்வதற்குஎனக்கு அபிப்பிராயமில்லை. வாலிபர்களால் எளிதில் பயன் பயக்கும்படியான காரியங்கள் இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கின்றன.

சிலகாலமாக, தேசிய இயக்கத்தில் நம் வாலிபர்களைத் தலையிடும்படியாக அநேகர் வாலிபர் மகாநாடுகளாலும், சங்கங்களாலும் தூண்டி வருகின்றனர். நம் வாலிபர் தேசீய இயக்கத்தில் ஈடுபடுவதைப்பற்றி எனக்கு ஒரு குறைவுமில்லை. ஈடுபடுவது என்றால் வாலிபர்கள் தேசீய இயக்கத்தை ஆய்ந்தோய்ந்து பகுத்துணர்வதே தவிர, தலைகீழாய் அரசியல் விஷயங்களில் இறங்கி விடுவது என்று நான் கொள்ளவில்லை.

இப்படி முன்பின்பாராது அரசியற் புரட்சிகளில் இறங்குவதில், நம் வாலிபர்களேனும் தேசமேனும் நன்மையடைவதற்கு மார்க்கமில்லையென்று நீங்கள் உணரவேண்டும்.

அநுபவமற்ற, அறிவு முதிராதநம் வாலிபர்கள் அரசியல் விடயங்களில்அகப்பட்டால் அவர்கள் அலங்கோல முறுவார்களன்றி, நன்மையடைய மாட்டார்கள் என்றே நான் உறுதியாகக் கூறுவேன்.

இந்த சமயத்தில், பஞ்சாப் கல்வியிலாக்கா அமைச்சர் திரு. மனோகரலால் அவர்களின் ஞானமொழிகளை உங்களுக்கு ஞாபகமூட்டக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் இப்பெரியார் சொற்பெருக்காற்றிய காலையில், எந்த தேசத்திலும், விசேடமாக இந்தியாவில், மாணவர்கள் வகுப்புத் துவேஷமும் குரோதமும் குழப்பமும் மிகுந்த தெளிவற்ற அரசியற் புரட்சிகளில் ஈடுபடுவது ஒப்பத்தக்கதன்று. பயிற்சியைப் பின்பற்றிய வாழ்விற்கும், விவாதமான அரசியற் புரட்சிக்கும் யாதொரு சம்மந்தமுமில்லை.

மாணவர்களின் சுபாவமான இயற்கை உயரிய கொள்கைகளுக்கும், அறிவிற்கும், ஆற்றலுக்கும் தேசீயபுரட்சிதக்கபயிற்சிசாலைகளாகா. தேசீயப்புரட்சிப் பிரசாரத்தையும்மற்றைய முறைகளையும் ஒருவர் பின்பற்றி அதே சமயத்தில்மாணவர்களாய் இருப்பது பொருந்தாத செய்கையாகும்: மாணவர் தொழிலிற்கு ஏற்புடைத்தன்று. அவர்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமேதவிர மாணவர்களாய் இருக்கும்பொழுது புரட்சியில் ஈடுபடுபவர்கள் பயிற்சியிலேனும சரியே பின்பு புரட்சியிலேனும் சரியே, ஒன்றிலும்வெற்றிபெற முடியாதென்று உணரவேண்டும்.

ஆகையால் நீங்கள் அனைவரும் அரசியலில் ஈடுபடாதிருக்கும்படிக்குக் கோருகின்றேன். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்கட்கு நல்லொழுக்கம், நல்வழி யிவை இரண்டும் தாம் அடிப்படையான நோக்கங்களாதல்வேண்டும்; இவற்றை அபிவிருத்தி செய்வதில் ஏற்படும் எத்தகைய இடையூறுயினும் அதனை எதிர்த்து அதற்கு இடங்கொடுக்காமல் இருக்கவேண்டும். கிரேக்கப் பழமொழிப்படி, செல்வம்போனால் போனதொன்றில்லை, தேகபலம் போனால் போனது சிறிது, ஆனல் குணம் (நற்குணம்) போனால் போனது சர்வமும் என்றிருக்கிறது. நீங்கள் இந்தப் பழமொழியை உணர்ந்து. குணத்தை விருத்தி செய்வதே உங்கள் கடமையென கண்ணும் கருத்துமாய் நின்றிலங்க உங்களை வேண்டுகின்றேன்.

### முக்கிய லக்ஷியங்கள்.

பார்ப்பனரல்லா வாலிபர்கட்கு ஒரு அவசியமான உன்னதமான லக்ஷியமொன்று இருக்கிறது. இந்த லக்ஷியத்தில் அவர்கள் எவ்வளவேனும் ஈடுபட்டுழைக்கலாம். அது சமூக சீர்திருத்தமாகும். சமூக சீர்திருத்தத்தில் எத்துணை உழைத்தாலும் அத்துணையும் மிகையாகாது.

தேசீய இயக்கத்தார்கள் சமூக சீர்திருத்தத்தை சற்றும் கவனித்தவர்களல்ல. நம்முடைய சமூகமோ எண்ணிறந்த குறைகளால் பரிதபிக்கக்கூடிய நிலைமையில் உள்ளது. நம் சமூகத்திற் பாவி இயங்கும் தீமைகளும் அநீதங்களும் அபாவிட முடியாது மலிந்து கிடக்கின்றன. இந்தத்துறையில் தான் நம் வாலிபர்கள் தங்கள் சிந்தையைச் செலுத்தி இவைகளைப்பற்றி நன்கு ஆராய்ந்து தெளிவதுடன் நில்லாமல், உட்புகுந்து வேலை செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சமூக விடுதலை அதாவது சமூகச்சமரசம் இன்றேல் தேசீய விடுதலை இன்று- ஒரு வேளை தப்பித்தவறிதேசீய விடுதலை ஏற்பட்டாலும், அவ்விடுதலையை நெடுங்காலத்திற்கு இச்சமூகக் கொடுமைகளுடன் காப்பது அரிதாகும். உயர் சாதியினரென்றும், தாழ்ந்தசாதியினரென்றும் தன்னுள்ளேயே பேதப்பட்டு, தன் சமூகத்தினரின் ஒரு பாகத்தினரை அடக்கி ஒடுக்கி அநீதமான, கொடுமையான, வஞ்சகமான தீமைகட்கு ஆளாக்கி வரும் ஒரு சமூகத்தை கொண்ட எந்த தேசமாயினும் சரி, அந்த தேசம் சுயேச்சையை அடைய விரும்புவது, முடவன் கொம்புத்தேனுக்கு அவாவிய கதையாய் முடியும். தேசீய முன்னேற்றத்திற்கே, சமூக உழைப்பு அத்யாவசியமாகும். சமூகத்திலுள்ள துவேஷம்நீங்கி, சமரசம் ஏற்பட்டாலன்றி, போதுநலமாகிய சுயேச்சையை யாரும் அடையமுடியாததென்பது திண்ணம். இந்த வேலை வாலிபர்களின முதல்வேலையாகும்- இந்த வேலையிற்றான் வாலிபர்கள் அதிக ஊக்கத்தைச் செலுத்த வேண்டும்- தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் கொடுமையுடன் நடத்தப்பட்டு வரும் வரையில், அவர்கட்கு ஒத்த சமரசம் வழங்காது ஆழ்த்தப்படும்வரையில், பெண்கள் அடிமைகளெனக் கருதப்படும் வரையில், விவசாயிகளும் தொழிலாளர்களும் தாழ்மையான நிலைமையில் இருந்து வரும் வரையில், நாம் விடுதலையில் நம்பிக்கை வைத்து, சுயராஜ்யத்தை எதிர் பார்ப்பது வீண் கனவென்றும் மும்முறையும் எடுத்துரைப்பேன்.

### தாழ்த்தப்பட்டார்களின் நிலைமை.

தாழ்த்தப்பட்டவர்கள் எனப்படுவோர், ஒரு நாகரீகமடைந்த உயர்ந்த வகுப்பார் என்போர்களால் தங்களுக்குள்ள மனித உரிமைகளின் சுகநலங்களில் ஒன்றையும அநுபவியாது அழுங்குகின்றர். நம் நெருங்கிய, நம் போன்ற சகோதரர்களை நாம் தாழ்த்தி வேறுபடுத்தி நடத்துவது ஒரு போதும் ஞாய சம்மதமாகாது என்பது நிச்சயம்- அந்தோ! கொடுமையிலும்கொடுமை! இவர்கள் பொதுச்சாலைகளில்-பன்றி முதல் பசுவரை மிருகங்கள் நடக்கின்ற சாலைகளில் செல்லப்படாதென்றும், கிணறுகளிலும் குளங்களிலும் நீரெடுக்கப்படாதென்றும், பொதுச்செலவில்ஏற்பட்ட கல்விச்சாலைகளில் அவர்கள் அவர்கள் குழந்தைகள் பயிலப்படாதென்றும், கருதப்படுவதுமன்றி இவர்களை நம் சமூகத்தினர் தீண்டப்படாதவர்களெனவும், இவர்கள் பரிசித்த காற்றுகூட அசுத்தமானதெனவும், இவர்களை ஓட ஓடத் துரத்தி ஒடுக்கிக்கொடுமை புரிந்துவருவதைநாம் எவ்வாறு மமொப்பிசகித்துக்கொண்டிருக்கமுடியும்? இதைவிட ஒருமனிதன்வேறுமனிதனுக்கு என்னவிதமாகக்கொடுமைபுரிய முடியும்? கேவல நியாயமாத்திரம் இவர்களுக்கு சமூக விடுதலை வழங்க வேண்டியதிருப்பது மல்லாமல் இவர்களே நம் தேசத்து செல்வாக்கிற்கும் செல்வத்திற்கும் அடிப்படைகளாயிருத்தல் பற்றியும் இவர்கள் நமது உழைப்பிற்கும் அன்பிற்கும் பாத்திரமாகிறார்கள்-

நம்மில் ஆறில் ஒரு பங்கு சனத்தொகை

(இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க).

குடி அரசு

ஈரோடு விபவ-ஹு தை-மீ 1-உ.

# தமிழ் மாகாண சுயமரியாதை மகாநாடு.

சுயமரியாதை இயக்கம் தோன்றிய சுமார் மூன்று வருஷ காலத்திற்குள் தமிழ் நாட்டில் அது அநேகமாக ஒவ்வொருவருடைய கவனத்தையும் இழுத்திருப்பதோடு இவ்வியக்க விஷயமாய் அநேகரை கூர்ந்து கவனிக்கும் படிக்கும் கவலைப்படும்படிக்கும் செய்து வந்திருக்கின்றது என்று சொல்லுவது மிகையாகாது.

இவ்வியக்கம் ஆரம்பமானது முதல் இதற்கு அநேக தத்துக்கள் ஒன்றின் பின் ஒன்றாய் வந்து கொண்டே இருந்தாலும் ஒருவாறு அவ்வளவையும் சமாளித்து வளர்ந்து கொண்டுவருவதையாரும் மறுக்கமுடியாது.

இதற்கு உதாரணம், இவ்வியக்க ஆரம்ப காலத்தில், காங்கிரஸ் துவேஷமென்றும் பிறகு பார்ப்பன துவேஷவ இயக்கமென்றும் பின்னால் தேசத்துரோக இயக்கமென்றும் பிறகு சர்க்கார் பிரசார இயக்கமென்றும் பிறகு வைணவ துவேஷ இயக்கமென்றும் பிறகு சைவத் துவேஷ இயக்கமென்றும் பிறகு நாஸ்திக இயக்கமென்றும் பிறகு நிரீச்சுவரவாத இயக்கமென்றும் மற்றும் அநேகர் அநேகவிதமாய் அதன் மீது பழி சுமத்தி அதற்கு பொது ஜனங்களிடம் எவ்வளவு தூரம் வெறுப்பும் துவேஷமும் ஏற்படச்செய்ய வேண்டுமோ அவ்வளவும் தூரம் ஏற்பட வேண்டி பல வழிகளிலும் பெருமுயற்சிகள் செய்தாய்விட்டது. என்றாலும் இவ்வளவு செய்தும் இதன் முன்னேற்றம் சிறிதும் குந்தகப்படாமல் மேலும் மேலும் முன்னேறுவதைப் பார்க்கின்றபோது இவ்வியக்க எதிரிகள் வேறு சமாதானம் சொல்ல முடியாமல் "இது இனி எத்தனை நாளைக்கு நிற்கப்போகின்றது, அப்பேர்ப்பட்ட ஒத்துழையாமை இயக்கமே பழங்கதையாய் விட்டது, இது தானா வாழப்போகின்றது, ஏதோ பார்ப்பனர்கள் மீது நமது நாட்டு மக்களுக்குஇருக்குமதுவேஷத்தினால் சிலர் ஆதரிக்கின்றார்கள், நாயக்கருக்குஇருக்கும் சொந்த செல்வாக்குக்கும் அரசாங்க செல்வாக்குக்கும் பயந்து சிலர் ஆதரிக்கின்றார்கள், இதெல்லாம் எத்தனை நாளைக்கு நிற்கும்" என இம்மாதிரியாக சொல்லிக்கொள்வதன்மூலம்தங்கள் பொறாமைகளை ஒருவாறு திருப்தி செய்து கொள்வதோடு இரகசியமாய் தங்களால் கூடிய கெடுதியையும் செய்துகொண்டே வருகின்றார்கள் என்பதும் இவ்வளவையும் தாண்டி தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு முக்கிய இடங்களிலும் மற்றும் வெளியிடங்களிலும் சுயமரியாதைச்சங்கங்களும் மகாநாடுகளும் பிரசாரங்களும் நடந்து வருவதும் அதன் கொள்கைகளில் பல சற்றும் எதிர்ப்பின்றி காரியத்தில் அனுஷ்டிக்கப் படுவதுமே போதுமான உதாரணமாகும்.

அதுமாத்திரமல்லாமல் இப்போது எந்த விதமான மகாநாடு எங்கு நடந்தாலும் சுயமரியாதைக் கொள்கைகள் கொண்ட தீர்மானங்களேதான் நிறைவேற்றப்பட்டு வருவதும் சமூக மகாநாடு, சமரச மகாநாடு, பெண்கள் மகாநாடு, பார்ப்பனரல்லாத வாலிபர் மகாநாடு, சீர்திருத்த மகாநாடு என் சில அரசியல் மகாநாடுகள்-ஆகியவைகளிலெல்லாம் மேல்கண்ட தீர்மானங்களே நிறைவேற்றப் பட்டுவருகின்றன.

இந்த நிலையில இவ்வியக்கத்திற்கு ஆதாரமாக ருஷியா, ஜப்பான், சைனா, துருக்கி, ஈஜிப்ட்,ஆப்கனி ஸ்தானம் முதலிய நாடுகள் வழிகாட்டியும் வருகின்றதைப் பார்த்தால் இவ்வியக்கம் தளர்ந்துவிடும்என்றோ மறைந்துவிடும் என்றோ நினைப்பவர்கள் கண்டிப்பாய் ஏமாந்துவிடுவார்கள் என்பது தெளிவாகாமல் போகாது. அன்றியும் நமது நாட்டு அரசியல் தலைவர்கள் என்பவர்களும் அநேகமாக இக்கொள்கைகளை உச்சரிப்பதின் மூலமாகவே செல்வாக்குப் பெறுவதையும் பார்க்கும்போது இக்கொள்கைகளின் தத்துவம் எவ்வளவு மேன்மையானது என்பதும் விளங்காமல் போகாது. இவ்வளவும் இருந்தாலும் இவ்வியக்கத்திற்கு ஒருநிலையான ஸ்தாபனமும் பிரசார பலமும் ஏற்படுத்தவேண்டியது மிகவும் முக்கியமான வேலை என்று நமக்குப் படுகின்றது. மேல்நாடுகளிலும் ஒவ்வொரு தேசத்திலும் இக்கொள்கைகள் கொண்ட இயக்கம் அதிக பலமான அஸ்திவாரத்தின்மீது கட்டப்பட்டு வெகு விரிவான முறையில் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. உதாரணமாக,

லண்டனில் R. P. A. என்னும் பகுத்தறிவாளர்கள் சங்கமும், அமெரிக்காவில் ப்ரீதிங்கர்ஸ் அசோசியேஷன் என்னும் தாராள எண்ணக்காரர்கள் (அறிவு எவ்வளவு தூரம் செல்லுமோ அவ்வளவு தூரம் செலுத்துவது) என்கிற சங்கமும், ருஷியாவில் ஆனடிகாட் சொசைட்டி (கடவுள் உற்சவம் வணக்கம் ஆகியவைகள் அவசியமில்லை) என்கின்ற (ருஷ்ய கவர்ன்மெண்டாராலும் ஆதரிக்கப்பட்ட) சங்கமும், சைனாவில், யங் சைனீஸ் அதாவது வாலிப சைனாக்காரர்கள் என்கின்ற சங்கமும், மற்றும் ஆப்கனிஸ்தானம் துருக்கி முதலிய சர்க்காரால் அநேக இடங்களில், குருட்டு நம்பிக்கைகளையும் மூடப் பழக்க வழக்கங்களையும் ஒழிக்கும் வேலைகளும் நடைபெற்றுவருகின்றன. அது போலவே நமக்கும் நமது அரசாங்கம் அடியோடு நமது இயக்கத்தின சுவாதீனத்திற்கு வருமளவும் அதாவது சுயமரியாதை அரசாங்கம் ஏற்படும்வரை நமக்கு தக்க ஆஸ்பதம் வேண்டியிருக்கின்றது. அநேகமாய் இவற்றை உத்தேசித்தே அந்த மாதம் 2வது 3வது வார வாக்கில் செங்கல்பட்டில் தமிழ் மாகாண சுயமரியாதை மகாநாடு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆம்மகாநாட்டுக்கு சைமன் கமீஷனும் அழைக்கப்பட்டிருக்கின்றது. மற்றும இம்மகாநாட்டில் அநேக பெரியார்களும் செல்வாக்குக்காரர்களும் உண்மைத் தொண்டர்களும் செல்வவந்தர்களும் பங்கெடுத்துக்கொள்ள சம்மதித்தும் இருக்கின்றார்கள். இதுவரை சுமார் 10 ஆயிரம் ரூபாய் போல வசூலும் செய்யப்பட்டிருக்கின்றது.

திருவாளர்கள் ராவ்பகதூர் எம். கெ. செட்டியார், சி. ஜயராமநாயுடுகார், சே. வி. மேனன், கண்ணப்பர் முதலியவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் இவ்வேலையில் பூரணமாய் ஈடுபட்டு உழைத்தும் வருகின்றார்கள். சுமார் இருபத்தையாயிரம் மக்களுக்கு குறையாமல் கூடக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. இம்மகாநாட்டிற்கு வந்து சில தீர்மானங்களை எதிர்க்கவேண்டும் என்கின்ற எண்ணத்தோடு சிலர் இரகசியமாய் கக்ஷி சேர்ப்பதாகவும் தெரிய வருகின்றது. எப்படியானாலும்சரி, நமக்கு அதைப்பற்றி கவலை இல்லை. நமதுநிலைமையையும் உண்மை என்று நாம் நினைப்பதையும் வெளிப்படுத்தி அதற்கு ஏற்ற நடவடிக்கைகள் நடத்த ஒரு பலமான ஸ்தாபனமும் பிரசாரமும் ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் நமது கவலை, ஆதலால் நாட்டின் க்ஷேமத்திலும்மக்களின் முன்னேற்றத்திலும் கவலையுள்ள மக்கள் யாவரும் அங்குவந்துகூடி தங்கள் கடமையைச் செலுத்தவேண்டியது மிகவும் அவசியமாகும், ஒவ்வொருவரும் தாங்கள் மனைவிமக்களுடனேயே வரவேண்டியது மிகவும் அவசியமானது என்பதை மிகவும் அழுத்தமாய் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தனிப்பட்ட ஸ்திரீகளும் தங்களை விதவைகள் என்றோ வேசிகள் என்றோ நினைத்துக்கொண்டிருப்பவர்களும் அவசியம் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். கவிர அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அதிகாரிகளும் கண்டிப்பாய் வரவேண்டியது மிகவும் அவசியமாகும் என்று தெரிவித்தோடு இந்த மகாநாடு கவ்வழியிலும் அரசியல்மகாநாடுஎன்பதல்லஎன்றும் அவர்களுக்கு உறுதிகூறுகின்றோம். அன்றியும் அரசாங்க சட்டமெம்பர் திவான்பகதூர் கனம் கிருஷ்ணநாயர் அவர்களும் மற்றும் பல பெரிய அதிகாரிகளும் வரச்சம்மதித்து இருக்கின்றார்கள்.

முக்கியமாக இம்மகாநாட்டில் யோசித்து தீர்மானிக்கப்படும்விஷயங்கள் என்னவென்றால் சமத்துவம்,சமஉரிமை, சமசந்தர்ப்பம், சிக்கனம், அன்பு,இரக்கம், ஒழுக்கம் ஆகியவைகள் ஏற்படவும், குருட்டு நம்பிக்கை,மூடப்பழக்க வழக்கம்,தீண்டாமை,பெண் அடிமை ஆகியவைகள் ஒழியவும் எளியோரை வலியோர் அடக்கி ஆளாமலும் பாமரர்களை படித்தவர்கள் ஏமாற்றாமலும் ஏழைகளை செல்வவந்தர் கொடுமைப்படுத்தாமலும் இருப்பதற்கும் பகுத்தறிவு வளர்ச்சி பெறவும தன் முயற்சியில் நம்பிக்கைஉண்டாகவுமான தன்மைகள் போன்ற விஷயங்களே தான் அங்கு நடைபெறும். ஆகையால் இவைகளை அரசியல் விஷயமென்று யாரும் சொல்ல

## தமிழ் மாகாண
## சுயமரியாதை மகா நாடு.

பிப்ரவரி மாதம் 2 அல்லது மூன்ருவது வாரத்தில்

:: செங்கல்பட்டில் நடைபெறும். ::

### சைமன் கமீஷனை மகாநாட்டுக்கு அழைக்க
### :: ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ::

திருவாளர்கள்:—

P. T. ராஜன் கொடியேற்று விழா ஆற்றுவார்
M. K. ரெட்டியார், வரவேற்பு கமிட்டி அக்கிராசனம் வகிப்பார்
டாக்டர் சுப்பராயன் மகாநாட்டைத் திறந்துவைப்பார்.
W. P. A. சௌந்திரபாண்டிய நாடார் மகாநாட்டின் தலைவர்.
M. கிருஷ்ணன் நாயர் திரு. பனகாலரசரின் திருவுருவப்படத்தை திறந்து வைப்பார்.
சுரேந்திரநாத் ஆரியா தொண்டர் படைத்தலைவராக இருப்பர்.
J. S. கண்ணப்பர் விளம்பர அதிகாரி.
K. V. மேனன் விஷயாலோசனைக் கமிட்டி அதிகாரி

மேற்படி மகாநாட்டின் ஆதரவில் சங்கீத மகாநாடு ஒன்று நடைபெறும்.

திரு. சி ஜெயராமநாயுடு தலைமை வகிப்பார்
டாக்டர் துரைசாமி நாயுடு L. M. & S. காரியதரிசி.

மற்றும் பல மகாநாடுகளும் பல வைபவங்களும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. மகாநாட்டுத்தலைவர் ஊர்வலக்காக்ஷி கண்படைத்தார் பார்த்து தீரவேண்டியது. ஏனெனில், ஆறு யானைகள் கட்டி இழுக்கப்பட்ட இரதத்தில் வைத்து அக்கிராசனரை ஊர்வலம் செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன. சென்னையிலிருந்து செங்கல்பட்டுக்கு 36 மைல் வரவேற்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. மகாநாட்டுக்கு ஸ்பெஷல் டிரெயின்கள்விட ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு ஊரிலிருந்தும் அவசியம் ஏராளமான பிரதிநிதிகள் வரவேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

---

முடியாது. அரசியல் விஷயம் என்று ஏதாவதுசொல்லவந்தால் அதுமேல்கண்ட விஷயங்கள் நிறைவேறி அமுலுக்குவர அரசாங்கத்தின் உதவி ஏதாவது வேண்டியிருந்தால் அந்தஅளவுக்கு அதுவும் அரசாங்கத்தின் ஆதரவைஎதிர்பார்க்கும் அளவுக்கு ஏதாவது பேசப்படுமேஒழிய வேறு ஒன்றும்நடைபெருது என்று உறுதிகூறுவோம்.

இந்த 3, 4-வது வருஷத்தியமகாநாடுகளில் இது வேமுக்கியமான மகாநாடாக இருக்கும்அன்றியும் இனிமேமது பிரசாரமும் வேலைத்திட்டமும் எப்படி இருக்கவேண்டும் என்பதும் யும் இம்மகாநாட்டில்தான் முடிவு செய்யப்படும் ஆதலால் செங்கல்பட்டு மகாநாட்டிற்கு எல்லோரும் முக்கியமாய் வாலிபர்களும் பெண்களும் தாழ்த்தப்பட்டவர்களும் அவசியம் வரவேண்டுமாய். வேண்டிக்கொள்ளுகின்றோம்.

---

## எது நாஸ்திகமல்லாதது?

ருஷியா தேசத்தில் கொஞ்ச நாளைக்குமுன்பிருந்தே கடவுளைப்பற்றிபிரசங்கங்களோ உபதேசங்களோ வணக்கங்களோ அவசியமில்லை என்பதாக ஒரு சங்கம் ஏற்பட்டுஅது தாராளமாய் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த வருஷத்திய கிறிஸ்து பிறந்த நாளை உற்சவமாய்க் கொண்டாடக்கூடாது என்று வெகு பலமான பிரசாரம் செய்யப்பட்டு வந்ததில் முழுதும் வெற்றியடையமுடியாமல் போனதால் அடுத்துவரும் ஈஸ்டர்உற்சவத்தை அதாவது 'கிறிஸ்துமறுபடியும் உயிர்பெற்றெழுந்த நாள்' உற்சவத்தை யாரும் கொண்டாடாமல் இருக்கும்படி இப்பொழுதிருந்தே வேண்டிய பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றதாம். இதற்குஅங்குள்ள சர்க்காரும இந்த இயக்கக்காரர்களை அனுசரித்து உத்திரவு போட்டு சர்க்கார் மூலமாகவும் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றதாம். இதற்காக அநேக பிரபுக்கள் லட்சக்கணக்காக ரூபாய்கள் கொடுத்து உதவியிருக்கின்றார்களாம்.

எனவே கடவுள் பிறந்த நாளையும் மறுபடியும் உயிர்த்து எழுந்த நாளையும் கொண்டாடக்கூடாது என்று சொல்லுவதும் சர்க்கார் மூலமாகவே அவற்றை பிரசாரம் செய்வதும அங்குநாஸ்திகம் என்று கருதப்படுவதில்லை.

நமதுநாட்டிலோ சாமி தாசிவீட்டுக்கு போகும்உற்சவம் வேணடாம்என்ருல் அது நாஸ்திகம்! சமணாைக்கழுவேற்றும் உற்சவம் வேண்டாம் என்ருல் அது நாஸ்திகம்!குடம் குடமாய் நெய்யையும் வெண்ணையையும் கொண்டு போய் நெருப்பில் போட்டு வீணுக்கும் கார்த்திகைதீபஉற்சவம் வேண்டாம் என்ருல் அது நாஸ்திகம்! வெடிமருந்துக்கும் அடுப்புக்கைக்கும் காசைப் பாழாக்கும் தீபாவளி உற்சவம வேண்டாம் என்ருல் அது நாஸ்திகம். இளங்குழந்தைகளை பாலில்லாமல் கஷ்டப்பட வைத்து விட்டு குடம் குடமாய்பால்கொண்டுபோய்கல்லின் மீது கொட்டும் பாலாபிஷேக உற்சவம் வேண்டாம் என்ருல் அது நாஸ்திகம்! அரசனிடம், குதிரை வாங்க என்று பணம் பெற்று தன்னிஷ்டப்படி செலவழித்து விட்டு அரசன் குதிரை எங்கே என்று கேட்டால் நரியைக் கொண்டு வந்து குதிரை என்று காட்டி அந்நரி அரசனுடைய பழய குதிரைகளையும் கடித்து கொன்று விட்டதுடன் அரசனும் அடிபட்ட உற்சவம் வேண்டாம் என்ருல் அது நாஸ்திகம்! வேறு ஒரு மதக்காரர் (பௌத்தர்) கோவிலை இடித்து விக்கிரகத்தைத் திருடிக்கொண்டு வந்து உடைத்த உற்சவத்தை நடத்தவேண்டாம் என்ருல் அது நாஸ்திகம்!

எனவே நமது நாட்டுக்கு எந்த காரியம் தான் நாஸ்திகம் அல்லாததோ நமக்கு விளங்கவில்லை.

---

### ஈரோடு முனிசிபாலிட்டி.

ஈரோடு முனிசிபாலிட்டியின் பட்ஜட் மீட்டிங்கு 11—1—29-தேதி மாலை 4 மணிக்கு சேர்மென் திரு. பாலசுப்பராயலு நாயுடு அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. 14 கவுன்சிலர்கள் ஆஜராயிருந்தார்கள்.

உபசாரப்பத்திரம்.

தென்னிந்திய செங்குந்தர் மகாநாட்டுத் திறப்பு விழாவிற்கு வரும் சென்னை அரசாங்க சட்ட மெம்பர் கனம் எம். கிருஷ்ணன் நாயர் அவர்களுக்கு ஈரோடு முனிசிபல் கவுன்சிலின் சார்பாக ஒரு உபசாரப்பத்திரம்வாசித்துக்கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டது

ஈரோட்டில் காலேஜ் ஏற்படுத்துவது.

ஈரோட்டில் ஏற்கனவே ஒரு ஹைஸ்கூல் இருப்பதால் முனிசிபாலிட்டியாரால் நடத்தப்பட்டு வரும் ஹைஸ்கூலை எடுத்துவிடுவது என்றும் அந்த இடத்தில் ஒரு இரண்டாந்தர உயர்தர காலேஜ் ஏற்படுத்துவதென்றும் அதற்காக 22000 ரூபாய் ஒதுக்கி வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த தீர்மானம் ராய்பகதூர் பழயகோட்டை பட்டக்காரர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு திரு ஈ வி. கஞ்சப்ப செட்டியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

பெண்கள் மிடில் ஸ்கூல்.

இப்பொழுது நடந்து வரும் பெண்கள் ஹையர் எலிமெண்டரி ஸ்கூலை மிடில் ஸ்கூலாக உயர்த்துவது என்று இந்த கவுன்சில் தீர்மானிக்கின்றது என்கின்ற தீர்மானம் ஜனுப் கே. எ. ஷெக்தாவூத் சாயபு பகதூர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு திரு எம். எஸ். முத்துக்கருப்பஞ் செட்டியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது. மற்றும் அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ராயவேலூரில் பெண்கள் மகாநாடு.

தலைவர்:-திருமதி வடிவாம்பிகைதாமோதரம்

உபன்யாசகர்:- திருவாளர் நாயக்கர்வாள்

வட ஆற்காடு ஜில்லா பார்ப்பனரல்லாத வாலிபர் மகாநாட்டிற்கும் கூட்டுறவு மகாநாட்டிற்கும் விஜயம் செய்திருந்த திரு ஈ வெ ராமசாமி நாயக்கர் அவர்களை வேலூர் அதிகாரிகளும் மற்றும் பல பிரமுகர்களும் அவரது ஜாகையில் சந்தித்து கேட்டுக்கொண்டதற்கு இணங்க அதாவது மூடப்பழக்க வழக்கங்களைப் பற்றியும் குருட்டு நம்பிக்கைகளைப் பற்றியும் ஆண்களுக்குமாத்திரம் போதிப்பது போதாது என்றும் பெண்களுக்கும் போதிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டபடி திருநாயக்கரும் சம்மதிக்க, ஸ்ரீமதி பத்பநாப முதலியார், ஸ்ரீமதி பத்பநாப நாயுடு, ஸ்ரீமதி சுந்திராராஜுலு நாயுடு, ஸ்ரீமதி கிருஷ்ண செட்டியார் ஸ்ரீமதி ரங்கநாத முதலியார், ஸ்ரீமதி சாரங்கபாணி நாயுடு, ஸ்ரீமதி பங்கஜம்மாள் முதலியவர் கையெழுத்திட்டு துண்டு விளம்பரம் பிரசுரித்து பெண்களுக்கென்று அழைப்புகள் வினியோகித்து இதற்கென்றே 4, 5 மோட்டார் பஸ்கள் வைத்து சரியாய் 2 மணிக்கு சுமார் 300, 400 ஸ்திரீகள் அழைத்து வரப்பட்டு விட்டார்கள். சரியாய் மூன்று மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கூட்டத்திற்கு:

## விஜயம் செய்திருந்தவர்கள்.

ஸ்ரீமதிகள் ஆண்டாளம்மாள் கிருஷ்ணசாமி நாயுடு, முனியம்மாள், ருக்மணியம்மா வீரராகவலு நாயுடு, பங்கஜம்மாள் குப்புராவ் நாயுடு, ராஜம்மாள் பாணி நாயுடு, பாக்யம்மாள் சுந்தரராஜுலு நாயுடு, கிருஷ்ணவேணியம்மாள், விஜயலட்சுமியம்மாள் பத்மநாப நாயுடு, சுப்பம்மாள் ராமய்யசெட்டி, துளசிபாயம்மாள் கிருஷ்ண செட்டியார், மிஸ் வேணு அம்மாள், விட்லு அம்மாள், சாரதாம்பா கஜேந்தர நாயுடு, ரத்னம்மா, வரலட்மி அம்மாள், மிஸ் சாவித்திரி அம்மாள், ஜெயம்மா செஞ்ன கேசவலு நாயுடு, அம்மணியம்மா புண்யகோடி முதலியார், காவேரி அம்மாள் நம்பெருமாள் நாயுடு, மிஸ்ஸஸ் செங்கப்பா, மிஸ்ஸஸ் சி.டி. நாயகம், சொர்ணகுமாரி பாக்யமாள் பத்மநாப முதலியார், முதலியவர்கள் முக்கியமானவர்கள்

கூட்டத்திற்கு வேலூர் டிப்டி கலெக்டர் திரு தாமோதர முதலியார் அவர்களின் மனைவியார் திருமதி வடிவாம்பிகை தாமோதரம் அம்மையார் அவர்களை திரு, சி டி நாயகம் அவர்கள் மனைவியார் பிரேரேபித்து பேசியதாவது.

## சி. டி. நாயகம்.

அன்புள்ள சகோதரிகளே! இன்றைய தினம் நமது சகோதரர் திருவாளர் ஈ வெ ராமசாமி நாயக்கர் நமக்கு அரிய உபதேசங்களைச் செய்யப்போகிறார், அவரைப்பற்றி நீங்கள் பலர் கேள்விப்பட்டிருந்தாலும் அவர் நமது சமூகத்திற்கு பெண்கள் விடுதலைக்கு என்று எவ்வளவு தூரம் பாடுபட்டு வருகிறார்கள் என்பது உங்களில் சிலருக்கு தெரியமார்க்கமிருக்காது என்றே எண்ணுகிறேன்.

இந்த நாட்டில் பெண் மக்களின் உண்மை விடுதலைக்கும் மேன்மைக்கும் பாடுபடுபவர் அவர் ஒருவரே தான். அவருடைய உழைப்பைப்பார்த்த பிறகு தான் பெண்கள் உலகத்திற்கு எப்படியும் விடுதலை உண்டாகும் என்கின்ற தைரியம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அவரைப்போன்ற தைரியசாலியும் உண்மையை எடுத்துக்கூறுபவரும் வேறு யாரும் இல்லை என்றேசொல்லுவேன் கொஞ்ச நேரத்திற்குள்ளாக நீங்கள் அவரது பெருமையை அறிய போகின்றீர்கள், ஆதலால் இம்மகாநாட்டிற்கு தலைமை வகிக்கும்படி திருமதி வடிவாம்பிகை அம்மையாரை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன் என்று பிரேரேபித்ததும் பெருத்த கரகோஷத்தினிடையே எல்லோரும் ஆதரிக்க

## திருமதி வடுவாம்பிகையம்மாள்.

அக்கிராசனம் வகித்து முன்னுரையாகப் பேசியதாவது,—

சகோதரிகளே! இன்றையதினம் ஸ்திரீகளின் நிலைமையைப்பற்றி நம்மிடையில் பேசப்போகும் பெரியார் ஈ வெ ராமசாமி நாயக்கரைக்குறித்து நான் உங்களுக்கு அதிகம் சொல்லவேண்டியதில்லை, அவர்கள் இப்பொழுது பல வருஷங்களாக சமுதாய ஊழல்களை யாவரும் நன்றாக அறியும்படி வெளிப்படுத்திக்கொண்டு வருகிறார்கள், நமது சமூக பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டு கிடப்பது அழகன்று. யாவரும் அறிவை உபயோகப்படுத்திப் பார்த்து ஒரு வழக்கம் அல்லது அனுஷ்டானம் சரியா தவறு என்று பார்க்கவேண்டுமென்பதே அவர் எல்லோருக்கும் சொல்லி வருகிற உபதேசமாகும், பெண்களாகிய நாம் ஆண்களைவிட அதிகமாய் பழக்க வழக்கங்களில் மூழ்கிக்கிடக்கிறோம், ஆகையினால் பெரியார் ஈ வெ ராமசாமி நாயக்கரைப்போன்றவர்கள் தங்களுடைய அனுபவங்களை நமக்கு எடுத்துரைத்து நம்மை மூடப் பழக்க வழக்கங்களிலிருந்து விடுவிப்பது அவசியம் என்று எனக்குதோன்றுகிறது, அவர்கள் சொல்லப்போவதை நீங்கள் யாவரும் பொறுமையுடனும் கவனத்துடனும் கேட்பீர்களென்று நினைக்கிறேன் இத்துடன் என்னுடைய முகவுரையை நிறுத்திக்கொண்டு திருவாளர் ஈ வெ ராமசாமி நாயக்கரை பேசும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்று சொல்லி ஆசனத்திலமர்ந்தார்,

தொடரும், ஒரு நிருபர்

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட ஒரு வகுப்பினரை நமக்குத் தாழ்ந்தவரெனக் கேவலமாய் நாமும் பிறரும் நடத்த மனம் பொறுத்து இருக்க முடியாது.

நீங்கள் உயர்வு தாழ்வென்ற நவறன உணர்ச்சியை அறவே விடுத்து, உங்களுக்கு சமயம் வாய்த்த போதெல்லாம், கிராமம் கிராமமாகப் புகுந்து சமரசக் கொள்கையை பிரசாரம் செய்து உழையுங்கள்; இதனிலும் சிறந்த பணி நீங்கள் தற்சமயத்தில் ஒன்றும் செய்ய முடியாது என்பதை திண்ணமாய் மனதில் வைக்கவேண்டும்.

## நம் ஸ்திரீகளின் நிலை,

நிற்க; நீங்கள் மற்றொரு துறையிலும் ஈடுபட வேண்டியிருக்கிறது; அதாவது நம் ஸ்திரீகளின் முன்னேற்றத்தைக்குறித்து. ஸ்திரீகளின் கற்பையும் மற்ற உயர்ந்த குணங்களையும் நம் தேசத்திற் புகழ்ந்துரைப்பது போல், பிற நாடுகளிற்காண்டலரிது. ஆனல், நாம் வாய்ப்பேச்சில் அவர்களைப் புகழ்கின்றோமே தவிர, அவர்களை நாம் ஒழுங்காக நடைமுறையில் மதிப்பதில்லை: அவர்களை நாம் நமது அடிமைகளாகவே கருதி நடத்தி வருகின்றோம். பார்ப்பன மனுவே ஒரு இடத்தில் "ஸ்திரீகள் எங்கு உயர்வுடன் பாராட்டப் படுகின்றார்களோ அங்குதேவதைகள் உறைகின்றார்கள்" என்றும், மற்றோரிடத்தில் "ஸ்திரீகளை அடிமைகளாகக்கருத வேண்டும்" என்றும் கூறியிருக்கிறது- இந்ததுர்ப்போதனை பிரகாரம் "ஸ்திரீகள் மணம் புரியும் முன்னர் தந்தையின் பாது காப்பில் இருக்கவேண்டும்- பின்னர் கொழுநனின் பாதுகாப்பில் இருக்க வேண்டும்- கொழுநன் மரித்தால் தன் குழந்தைகளினுடைய பாதுகாப்பில் இருக்க வேண்டும். குழந்தைகளும் இன்றேல், காலஞ்சென்ற கணவனின் நெருங்கிய உறவினர்களின் பாதுகாப்பில் இருக்க வேண்டும்" முற்கூறிய நற்போதனையை கைக் கொள்ளாமல் பிற் கூறிய பிற்போக்கான கொடுமையை மட்டும் நாம் அங்கீகரித்து நம் ஸ்திரீகட்கு சகல உரிமைகளையும் மறுத்து, அவர்களை நடை பிணங்களாக நடத்தி வருகின்றோம். என்ன கொடுமை!

இப்பொழுது நம் வாலிபர்கள் இக்கொடிய பழக்கங்களை புறக்கணித்து, ஸ்திரீகளை முன்னேற்றுமாறு விதவா விவாகத்திற்குச் சார்பளித்து, சொத்துரிமைக்கு உதவியாக நின்று, பால்ய விவாகத்தை தடுத்து நிற்பதற்கு சற்றும் பின்னடையாமல் தருணம்நேர்ந்த பொழுதெல்லாம், ஸ்திரீகளின் கைகளிலும் கண்களிலும் இருக்கும் விலங்குகளை உடைத்தெறியவேண்டும்.

## ஆண்மையே பிரதானம்.

நண்பர்களே! நீங்கள் தீண்டாமை விலக்குவதற்கும் ஸ்திரீகட்கு விதவாவிவாகம் போன்ற சீர் திருத்தங்களை வழங்குவதற்கும், நமது வைதீகர்கள் முட்டுக்கட்டைகளாய் இருப்பார்களே என்றுதயங்கலாம்- ஆனல் இவ்விடயங்களிலெல்லாம், நீங்கள் உங்கள் மனச்சாட்சியைப் பின்பற்றி ஒழுக வேண்டுமேயல்லாது முன் பின் பார்ப்பதில் வெற்றியடைய மாட்டீர்கள்- எந்நாட்டிலும் பன்னூற்றாண்டுகளாக புரோகிதர்களும் சாமித்தரகர்களும் ஒவ்வொரு சீர்திருத்தத்திற்கும் ஊறு விளைத்துத்தான் வந்திருக்கின்றனர்; பன்னூற்றாண்டுகளாக பேதைகளை ஏமாற்றி வயிறு வளர்த்து வந்திருக்கின்றனர்; பன்னூற்றாண்டுகளாக ஏகபோகாநுபவம் பெற்று வந்திருக்கின்றனர்- இத்தரகர்கள் தங்கள் உன்னத ஸ்தானத்திலிருந்தும் கீழ் இறங்கார்கள்- ஒருபோழ்தும் தங்கள் சுயநலத்திற்கு மாற்றமாக நடந்துகொள்ளத்துணியார்கள். இக்கோழைகட்கு அஞ்சலதிற் பயனில்லை- மதம் போச்சுது! சாதி போச்சுது! நாஸ்திகமாச்சுது! என்றுபிதற்றுவார்கள். இதற்கு நீங்கள், நம்மதத்தில்ஜாதியில் ஆஸ்திகத்தில் சமூகச் சீர்கேடுகட்கு ஆதாரமிருக்குமாயின், அவை எதுவும் நமக்கு வேண்டியதில்லையென்று தைரியமாய் விடையிறுக்க வேண்டும்-

இப்பொழுது நம்மத்தியில் வைக்கம் வீரர் திருவாளர் ஈ- வெ- ராமசாமி நாயக்கர் இருக்கின்றார்கள்- நாம் இவர்களைப் பின்பற்றி நடந்து வருவோமாயின் நமக்கு வெற்றி கிடைப்பதில் சிறிதும் ஐயமில்லை- நம் தலைவர் நம் சமூகத்தின் முன்னேற்ற திற்குரிய வழிகளைக் காண்பித்து நமக்கு என்ஞான்றும்பக்கத்துணையாயிருப்பார்கள்- ஆதலால், நாம் எதிர்கால நிலைமையைப் பற்றி மிகவும் உற்சாக நோக்கத்துடன் இருக்கலாம்.

## வட ஆற்காடு ஜில்லா 10 வது கூட்டுறவு மகாநாடு.

6-1-29 தேதி வேலூரில் வட ஆற்காடு ஜில்லா கூட்டுறவு மகாநாடு ராமநாதபுரம் ஜில்லா போர்ட் தலைவரும் சட்ட சபை மெம்பருமான திருவாளர் ஊ பு அ சௌந்திர பாண்டிய நாடார் அவர்கள் தலைமையில் நடந்தது.

அபிவிர்த்தி மந்திரி கனம் சேத்துரத்தினம் அய்யர் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

சுகாதார மந்திரி கனம் முத்தய்யா முதலியார் அவர்கள் விவசாய கண் காட்சியை திறந்து வைத்தார்.

சுமார் 600, 700 பிரதி நிதிகளும் கூட்டுறவு இலாக்கா முக்கிய அதிகாரிகளும் விஜயம் செய்திருந்தார்கள்.

திருவாளர் ராவ் பகதூர் வெ மு கைலாச முதலியார் அவர்கள் வரவேற்பு அக்கிராசனராக இருந்து மகாநாட்டை வெகு சிறப்பாக திறந்து வைத்தார். ஒரு நிருபர்.

## டாக்டர்கள் நாயர் & நடேச முதலியார் திருவுருவப்படத் திறப்பு விழா.

நிகழும் 1929-வருஷம் ஜனவரி மாதம் 11-தேதி 6-30 மணிக்குதிருவல்லிக்கேணியில் இந்து பாடசாலையில் டாக்டர் டி. எம். நாயர் அவர்களின் உருவப்படத்திறப்பு விழாவும் ராவ் பகதூர் டாக்டர் சி. நடேச முதலியார் அவர்களின் உருவப்படத் திறப்புவிழாவும் சென்னை மாகாண முதன் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களால் கனம் கான் பகதூர் உஸ்மான் சாயபு பகதூர் அவர்கள் தலைமையில் நிகழ்த்தப்பெறும்.

ஒரு நிருபர்.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

து தொண்டில் உள்ள இடை யராத கஷ்டங்களினிடையே இம்மாதிரியான சில வைபவங்கள் ஏற்படுவதால் சில சமயங்களில் பரிகாசமாகவும் சில சமயங்களில் உற்சாகமாகவும் இருக்கச்செய்கின்றது.

என்னைப்பற்றிய ஆடம்பர வரவேற்பும் புகழுரைகளும் நான் உங்களிடம் ஒரு சிறிதும் எதிர்பார்க்கவில்லை. நீங்களும் இத்துடன் உங்கள் கடமை தீர்ந்து விட்டதாக தயவுசெய்து நினைத்துவிடாதீர்கள்.

நாம் பிரவாகமான எதிர் வெள்ளத்தில் நீந்துகின்றோம் என்பதையும், நமக்கு எதிரிகளும் எதிர்ப்பிரசாரங்களும் வெளிப்படையாயும் திரை மறைவிலும் சூட்சிகளுடனும் நடைபெற்று வருகின்றதை கருத்தில் வையுங்கள். அவற்றிற்கு தலைகொடுக்கத் தயாராயிருங்கள். நமது தலைவர் பனகால் அரசர் காலமான ஒரு நெருக்கடியான சமயமானதால் இந்த சமயத்தில் உங்கள் விழிப்பும் தியாகமும் அதிகம் தேவை இருக்கின்றது என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொள்வதுடன் உங்களுக்கும சிறப்பாக திருமதி மார்த்தா ஆரியா அம்மையார் அவர்களுக்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு நிருபர்

## வேலூரில் மந்திரிகள், பார்ப்பனரல்லாத தலைவர்கள் விஜயம்.

வட ஆற்காடு ஜில்லா கூட்டுறவு மகாநாட்டையும் பார்ப்பனரல்லாத வாலிபர்கள் மகாநாட்டையும் உத்தேசித்து ஜனவரி மாதம் 5, 6, 7 தேதிகளில் விஜயம் செய்திருந்த மந்திரிகளுக்கும் பார்ப்பனரல்லாத தலைவர்களுக்கும் வரவேற்புகளும் உபசாரப்பத்திரங்களும் விருந்துகளும் சிற்றுண்டிகளும் வெகு ஆடம்பரமாக நடந்தன.

மந்திரிகள் கனம் முத்தய்ய முதலியார் கனம் சேத்து ரத்தினய்யர் ஆகியவர்களுக்கு வேலூர் முனிசிபாலிட்டி தாலூக்கா போர்டு முதலிய ஸ்தாபனங்கள் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக்கொடுத்தன. திரு ஈ வெ ராமசாமி நாயக்கருக்கு பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தார் ஒரு வரவேற்பு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். வட ஆற்காடு ஜில்லா போர்டு பிரசிடெண்டு திருவாளர் ராவ் பகதூர் கே கிருஷ்ணசாமி நாயுடுகாரின் உருவப்படம் பார்ப்பனரல்லாத வாலிப மகாநாடு நடந்த இடத்தில் மந்திரி கனம் முத்தய்யாமுதலியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. வேலூர் முனிசிபல் சேர்மேன் திரு பத்பநாப முதலியார் அவர்களுக்கு அவரது சேர்மேன் ஸ்தான சேவையை பாராட்டிஊர் மகா ஜனங்களால ஒரு தங்க கை கெடியாரமும் பெரியதங்க டாலர் தொங்கிய தங்க சங்கிலியும் மந்திரி கனம் சேதுரத்தினமய்யர் அவர்களால் வழங்கப்பட்டது.

பார்ப்பனரல்லாத வாலிபர்கள் மகாநாடு சார்பாக திரு ஈ வெ ராமசாமி நாயக்கர் அவர்களின் உருவப்படம் திருமதி மார்த்தா ஆரியா எம். எ அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. மேல்கண்ட பிரமுகர்களுக்கு திரு ராவ் பகதூர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களால் மாலையில் ஒரு தேக்கச்சேரி நடத்தப்பட்டது.

அன்று இரவு திரு பத்பநாப முதலியார் அவர்களால் ஒருசமபந்தி போஜனம்நடத்தப்பட்டது. சிற்றுண்டிக்கும் விருந்துக்கும் மந்திரிகள், அவ்வூர் கலெக்டர், டிப்டிகலெக்டர், ஜில்லா ஜட்ஜி, சூப்பரெண்டு முதலிய அதிகாரிகளும் வியாபாரிகளும் மிராஸ்தாரர்களும் மற்ற பெரியோர்களும் இந்து முகம்மதிய கிறிஸ்துவர் ஆகிய எல்லா சமூகத்தார்களும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. மற்றும் திருவாளர்கள் சௌந்திர பாண்டிய நாடார், எம் கே ரெட்டியார், ஜெயராம நாயுடு, கே-வி-மேனன், கண்ணப்பர், ஈ வெ ராமசாமி நாயக்கர், ஜட்ஜி வரதராஜுலு நாயுடு, தண்டபாணிபிள்ளை அவர்களுக்கு பத்பநாபநாயுடு திரு பி வி சுந்தரராஜுலு நாயுடு அவர்கள் வீட்டிலும் மறுநாள் தேவஸ்தான கமிட்டி பிரசிடெண்டு திரு பத்பநாப நாயுடு அவர்கள் வீட்டிலும் தனி விருந்துகள் நடந்தன. ஒரு நிருபர்.

## ரயில்வே தொழிலாளரும் திரு. ரத்னசபாபதி முதலியாரும்.

தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தத்தின் போது குற்றம் சாட்டப்பட்டு விசாரணையிலிருந்த தொழிலாளர்கள் நடத்தப்பட்டபான்மையைப்பற்றி சென்னை சட்ட சபை அங்கத்தினரான கோவை திரு. சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் கவர்மெண்டாரைக் கேட்ட கேள்விகளுக்கு கவர்ன்மெண்டார் விடுத்துள்ள பதில்களின் சுருக்கம் வருமாறு:—

(1) கைது செய்யப்பட்டு விசாரணையிலிருந்தவர்கள் சிற்றுண்டி சாப்பிட்டது கோர்ட் ஹாலைச் சேர்ந்த அறையிலேயே யல்லாமல் வெளித்திண்ணையிலல்ல,

(2) குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரையில் உட்கார அனுமதிக்கப்பட்டார்கள். சௌகரியமில்லையென்று கேட்டுக்கொண்டவர்கள் பெஞ்சுகளில் உட்கார அனுமதிக்கப்பட்டனர்.

(3) போலீசார் தலையிடாதபடி குற்றம் சாட்டப்பட்டவர்களும் அவர்களின் வக்கீல்களும் சந்திக்கவும் பேசவும் சௌகரியமாக கோர்ட் ஹாலின் மூலையும் வெளி ரூமும் கொடுக்கப்பட்டன,

ப-ர் குறிப்பு:— திரு முதலியாரவர்கள் தொழிலாளர் விஷயமாக எடுத்துககொண்ட முயற்சிக்கு அவரைப் பாராட்டுகிறோம்,

## மலாய்நாட்டில் ஓர் மாபெரும் புதுதிருமணம்.

மலாய் நாட்டில் பினங்கில் ஆர்டின் லேனில் 32-ம் நெம்பர் கட்டிடத்தில் திருவாளர் கருப்பண்ண வைத்தியர் திருமகன் அப்பாவு பண்டிதருக்கும், திருவாளர் கலியபெருமாள் செல்வி ஸ்ரீமதி ஜானகியம்மாளுக்கும் 21-1-29-ல் தமிழ்த் திருமணம் நடைபெறும். டாக்டர் என். கே. மேனன் அவர்களின் தலைமையில் பல அறிஞர்கள் சொற்பெருக்கு நிகழ்த்துவார்கள். திருமணப் பத்திரிகை, திரு நாயக்கரின் உருவப் படத்துடனும், பல சுயமரியாதை வாக்கியங்களுடனும், தலைவர், வரவேற்பாளர் சொற்பொழிவாளர் [illegible] முதலியவர்களின் பெயர்களுடனும், [illegible] அட்டவணையுடனும் மிளிர்வதைப் பார்ப்பின் இம்மணம் ஒரு பெரிய மகாநாட்டைப்போல் நடைபெறுமென்பதில் ஐயமில்லை. திருமணங்களில் வீண்செலவு செய்வதைவிட இத்தகைய முறையில் செலவுசெய்தால் மக்கள் அறிவு வளர்ச்சி பெற்று உய்வார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## பார்ப்பனீயம் ஒழிந்த சடங்குகளும் நன்கொடைகளும்.

கலையமுத்தூர் திருவாளர் சி. செல்லப்ப பிள்ளையவர்கள் பார்ப்பனீயத்தை ஒழித்துச் செய்த திதியை முன்னிட்டு சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்காக திரு. எ. ஆர். சிவானந்தம் முதலியார் மூலமாக ரூ. 1 ஒன்று "குடி அரசுக்கு" நன்கொடையாக அனுப்பியுள்ளார். எமது மனமார்ந்த வந்தனம். [ப-ர்]

## வால்மீகி இராமாயணத்திற்கு
# முந்திய ராமாயணம்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவலகால வகையினாலே"
"உயாகருத்தொன்றுள தெக்காலத்துமே
இதிலையெனக்கில்லை எல்லாக்கிரகமும்
ஏகுங்காலை மாந்தரினெண்ணமும்
மென்மேலென்றும் விரிவடைகின்றதே"

இராமாயண உற்பத்தியைப்பற்றி திரு. பாவலருரை முன் சிறியேன் ஒன்றுங்கூற முடியாதெனினும் யான் கண்ணுற்ற கீழ்கண்ட குறிப்புப்பற்றி விஸ்தாரமாக அறிய ஆவல் கொண்டுவரையலானேன்.

1915 ம் ஆண்டில் கல்கத்தா செனெட் ஹாலில் ராய் சாஹேப் தினேச சந்த்ரசேன் என்பவர், "வால்மீகி ரிஷி கி மு 4 ம் நூற்றுண்டில் இராமாயணத்தை எழுதியதாக சிலர் மதிக்கின்றனரெனினும் ஷை ராமாயணத்தை அருளிச் செய்புமுன் இரண்டு இராமாயணங்கள் இருந்தன"வென்று பிரசங்கித்தாராம்.

(1) கி. மு. 1600 வருஷங்களுக்கு முன்னிருந்து வழங்கிய தசரத ஜாதகம் என்னும் நூல் கி. மு. 6-ம் நூற்றுண்டில் எழுதப்பட்டது- அதில் இராவணனைப் பற்றியாவது ராமன் அவனுடன் போர் புரிந்ததைப்பற்றியாவது ஒன்றுங்கூறப்படவில்லையாம்- லங்காவதார சூத்ரத்தில் சீதையை அபகரித்தானென்றுவது ஒன்றுங்கூறப்படவில்லையாம்,

(2) மற்றொன்றாகிய ஜயின இராமாயணத்தில் இராவணன் செய்கைகளைப் பற்றி விஸ்தரித்து இராமனைப்பற்றி சிறிதே கூறப்பட்டிருக்கிறதென்றும் கூறி இப்பொழுது நாமறிந்திருக்கும் ஸ்ரீமத் ராமாயணம் கி- பி- 12 ம் நூற்றுண்டிலேயே உண்டாயது என்றும் மெய்ப்பித்தாராம்.

ஆ- அறிவிற் சிறந்த பெரியோர்களே! 'பகைத்தவன் சொல்லாத தில்லை' என்பதற்கேற்ப "கோபவெறிகொண்ட 'குடி அரசு' குதர்க்கம் பேசுகிறது" என்று நினைக்கும் சாத்விகர்களே! மேற்கண்ட பெரியோர்க்கு யாரிடம் பகை; கோபம்? ஏன் அவர் பொய்ச்சித்தாந்தம் செய்துபடிந்த அறிவாளிகளின் சபையில் பகிரங்கப் படித்தினர்?

மேலும் வங்காளத்தில் பிராமணர் அல்லாதார் கட்சி தோன்ற நியாயமுமில்லை- அக்காலத்தில் தோன்றியுமிராது-

ஆகையால் பாரபக்ஷ நோக்கத்துடன் கவனியுங்கள்- வீணாக உண்மையாராய்ச்சியாளர் பேரில் சந்தேகங் கொள்ளாதீர்கள்- கண்மூடித்தனமாய் குற்றமுள்ள நூல்களுக்கு, கடவுள் கருணையால் அருளியதென்று நான்முகஞ்சாற்றி அக் "கடவுளை" ஆபாச மாக்கி விடாதீர்கள்.

ஆராய்ச்சியாளர்களே ஷை திருதினேசசந்த்ரசேன் என்பவரின் விரிவான பிரசங்கத்தை இக்'குடி அரசு' வாயிலாய்த் தெரிவிப்பீரென்று ஆசையோடு எதிர்பார்க்கிறேன்.

D. M. வளா.

## திரு. நாயக்கரைப்பற்றி நாடார் மகாஜன சங்கம்.

### ஸ்பெஷல் கவுன்சில் மீட்டிங்கு.

29—12—28-ல் சங்கம் ஹாலில் விருதுநகர் ஸ்ரீமான் மு. ச. பெ. செந்திக்குமார் நாடார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடிய கூட்டத்தின் தீர்மானங்கள்.

1. பிராமணரல்லாதார் கட்சியின் தலைவர் கனம் பனகால் அரசர் அவர்கள் அகால மரணமடைந்தது குறித்து அவரது குடும்பத்தாருக்கு சங்கம் தனது ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறது.

2. சங்கஸ்காலர்ஷிப் இரண்டாவது லாட்டரி நடத்துவதற்கான செலவுக்காக காரியதரிசி திரு. W. P. A. சௌந்திர பாண்டிய நாடார் அவர்கள் ரூ. 2000 மும், வைஸ் பிரசிடெண்டு திரு. மு. ச. பெ செந்திக்குமார் நாடார் அவர்கள் 2000 மும் கடன் கொடுத்து லாட்டரிச் சீட்டு விற்பனைத் தொகையிலிருந்து மேற்படியார்கள் ஷை தொகையை பெற்றுக்கொள்வதாக வாக்களித்திருப்பதை கவுன்ஸில் வந்தனத்துடன் ஏற்றுக்கொள்கிறது.

3 22—11—28-ல் விருதுநகர் திரு. W. P, A. சௌந்திரபாண்டிய நாடார் அவர்களுக்கு நடந்த உபசாரணைக் கூட்டத்தில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் நமது குலத்தின் உண்மை நிலை அறிந்து கூறிய "பிறரால் ஒடுக்கப்பட்டவர்கள்" என்ற வாக்கியங்களையும், சட்ட சபையில் முதல் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் என்று கூறிய வாக்கியத்தையும், கவுன்சில் ஆலோசனை செய்து அவைகளில்எவ்வித குற்றமும் கற்பிப்பதற்கு இடமில்லையென ஏகமனதுடன் அபிப்பிராயப்படுகிறது.

பிறகு வந்தனோபசாரத்துடன் இரவு 10-30 மணிக்கு மீட்டிங்கு முடிவுபெற்றது.

மு. ச. பெ. செந்திக்குமார் நாடார்,
பட்டிவீரன்பட்டி.

## 1929-ம் வருட காலண்டர்கள் வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

கீழ் கண்டவர்கள் தங்கள் கம்பெனியின் 1929-ம் வருஷத்திய காலண்டர்கள் அன்பு கூர்ந்து அனுப்பியுள்ளார்கள்.

திருவாளர்கள்

1. தெ. வெ. சென்னி செட்டியார் அண்டு சன்ஸ் நகை வியாபாரம், குகை, சேலம்.
2. பொ. ராயலிங்கம் அவர்கள், புகைபண்டர் திருப்பாதிரிப்புலியூர்.
3. அக்ரிகல்சுரல் டெய்ரிபாம் கம்பெனி, மைசூர்,
4. N. L. ஐயர், நியூஸ் ஏஜண்டு, தஞ்சை.
5. ச. கோவிந்தசாமி, ஜவுளி வியாபாரம், ஜோகூர்பாரு.
6. P. கோபால்சாமி நாயுடு & சன்ஸ்; நகை வியாபாரம், மதராஸ்.

மேற்கண்ட அன்பர்களுக்கு எமது மனமார்ந்த வந்தனம்.

## சென்னை மகாண ஆரம்ப ஆசிரியர் சங்கம்.

ஷை சங்கம் "7-வது மாகாண ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டைத் திண்டிவனத்தில் மே மாதத்தில் கூட்டவேண்டுமென்றுகேட்டுக்கொண்ட திண்டிவனம் ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளை" அங்கீகரிக்கிறது.

"ஆரம்ப ஆசிரியன்" பத்திரிகையின் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் யோசிப்பதற்காக 'நாளது ஜனவரி மாதம் 12-ந் தேதி சனிக்கிழமையன்று ஒரு நிர்வாகக் கமிட்டிக்கூட்டவேண்டும்" என்று தீர்மானிக்கப்பட்டது.

காரியதரிசி
29, அப்புமுதலி வீதி, மைலாப்பூர்.

## சென்னை மாகாண வன்னியகுல க்ஷத்திரிய சங்க முதல் ஆண்டுவிழா,

மேற்படி விழாவும், மாகாண ஜில்லா கான்பரன்சுகளும் 1929 வருஷம் ஜனவரி மாதம் 20-ந் தேதி பண்ருட்டி டவுன் லட்சுமி விலாச ஹாலில் புதுவை சட்டசபை மெம்பரும், மேயரும், வக்கீலுமான ஸ்ரீமான் ஆர். செல்லம் நாயகர் அவர்கள் அக்கிராசனத்தில் நடைபெறும்.

காரியதரிசி.

## ஈரோடு டி. மு. கோர்ட்டு.

1928-ளு அசல் நெம்பர் 1152
1928-ளு I A நெம்பர் 1388

வாதி—சி. ர. வெங்கடாசலஞ் செட்டியார்
பிரதிவாதிகள்—பழனிச்சக்கிலி வகையரா.

ஷை நெம்பரில் வாதி பக்ஷம் நோட்டீசு சி. பு கோடு ஆர்டர் 1 ரூல் 8 (கிளாஸ் 1 படி)

ஷை நெம்பரில் விவாதப்பட்ட ஈரோடு கிருமத்திய க. ச. 23 நெ ந காலை வாதிக்கு சர்வ சுதந்திரமாய் பாத்தியப்பட்டு அவர் அநுபோகத்தில் இருக்கிறதென்றும், ஈரோடு தாலூகா வைராபாளையம் கிராமத்திய சக்கிலியர் ஜாதியாருக்கு ஷை காலையில் எவ்வித பாத்தியமும் அநுபோகமும் இல்லையென்றும் ஷை ஜாதியார் தங்கள் பிணங்களை சுடுவதற்கும் புதைப்பதற்கும் ஷை காலைக்குள் பிரவேசித்து அதை உபயோகிக்க எவ்வித பாத்தியமும் இல்லையென்றும், டிக்ளரேஷனுக்கும் சாசுவத இன்ஜங்ஷனுக்கும் தாவா செய்து ஷை தாவா 24-1-29ந் தேதிக்கு போட்டிருக்கிறது. ஷை வைராபாளையம் சக்கிலியர்கள் ஷை நெம்பரில் பிரதிவாதிகளாகச் சேர்ந்துகொண்டு வாதியின் பாத்தியத்தை ஆக்ஷேபிக்கப் பிரியப்பட்டவர்கள் 24-1-29ந் தேதியில் ஈரோடு டி. மு. கோர்ட்டில் ஆஜராகி ஆக்ஷேபடி செய்துகொள்ளவேண்டியது என்பதை இதன்மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கே. சுந்தரமய்யர்,
8—1—29. வாதி வக்கீல்.

## பார்ப்பனீயமும் புரோகிதமும் ஒழிந்த சடங்குகளும் நன்கொடைகளும்.

"குடி அரசை" சுமார் ஒரு வருடமாய் எனது தகப்பனுர் படித்து வந்ததின் பயனாய் இருபத்து நான்கு வருடமாய் எனது பாட்டனாராகிய காலம் சென்ற ராமசாமி நாயக்கருக்கு பார்ப்பன பஞ்சாங்க தாகன் மூலமாய் செய்து வந்த வருடாந்தர திதியை 31-12-28 ல் அர்த்தமற்ற சடங்கும் வடமொழி பாஷையும் பார்ப்பன பஞ்சாங்க புரோகிதமும் நீக்கி எனது பாட்டனாரின் ஞாபகார்த்தமாக எனது தகப்பனுர் மு. ரா, சஞ்சிவி நாயக்கர் அவர்கள் தமது சக்திக்கு இயன்றவாறு ஏழைமக்களுக்கு அன்னமிட்டு முடித்தார். ஷை வருடாந்திர விழாவின் சார்பாக நமது திராவிடனுக்கு ரூபாய் 1—0—0 நன்கொடையாக அனுப்பப்பட்டது.

எஸ் ராமசாமி.

விழுப்புரம் தாலூகா வளவனூர் திருவாளர் மு. ர. சபாபதிப் பிள்ளை அவர்கள் இற்றைக்கு சுமார் பதினேழு ஆண்டுகளாக பார்ப்பன புரோகிதரைக் கொண்டு நடத்தி வந்த தம் அருமைத் தாயாரின் திதியை சுயமரியாதை உணர்ச்சி கைவரப்பெற்று இவ்வாண்டு மார்கழித்திங்கள், 19ந் தேதியன்று பார்ப்பனீயத்தையும் புரோகிதத்தையும் ஒழித்து விட்டு பலவாய ஏழைகளுக்கும், சிலவாய சுற்றத்தினருக்கும், நண்பர்களுக்கும் விருந்தாற்றினர். இவ்வூரில் பார்ப்பனீயத்தை ஒழித்து வீறு கொண்டு தலையணியாக சுயமரியாதையைக் கைப்பற்றியவர் இவ்வாண்டகைதான்.

ஒரு நிருபர்.

கோவை முனிசிபல் சித்த வைத்தியசாலை மருத்துவர் வைத்தியபதி சிகாமணிப்பண்டிதர் அவர்களின் இருதிக்கடன் நேற்று (1—1—29) காலை வம்புலாஞ்சோலையில் சுயமரியாதை முறையில் நிகழ்ந்தது. அதுகாலை கோவை கவர்மெண்டு கலாசாலை ஓய்ந்த ஆசிரியரும் ஷை சிகாமணிப்பண்டிதர் அவர்களின் தலை மகனும் ஆய எஸ். பால சுந்தரம் பிள்ளையவர்கள் 'குடி அரசு'ப் பத்திரிகையின் மூலதனத்துக்கென ரூபாய் ஒன்று மணி ஆர்டர் செய்யும்படி அளித்துள்ளார்.

த. வே. உமாமகேசுவரம், கரந்தை,

## பார்ப்பனியம் ஒழிந்த பெயர் சூட்டு விழா.

### குழந்தைக்கு திராவிடப்பெயர்வைத்தல்

ஈரோடு திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்களின் சகோதரர் குமாரர் திரு செலமேலு அவர்களின் பெண் குழந்தைக்கு 7-1-29-ல் திரு நாயகரவர்களால் திரிசடை என்ற திராவிடப்பெயர் வைக்கப்பட்டது. அதுசமயம் பூவாளூர் திரு. அ. பொன்னம்பலனாரவர்கள் விழாவை நடத்தினார்கள். திருவாளர்கள். எஸ். ராமநாதன், என். பி. காளியப்பன், எம். ஏ. ஈஸ்வரன், எஸ். குருசாமி, என். எஸ். கோவிந்தசாமி முதலானவர்களும் இன்னும்பல பந்துக்களும் வந்திருந்தார்கள்.

ஒரு நிருபர்.

இனம்! இனம்!! இனம்!!!

சாலிபர் மகாஜன சங்கம்

க்ஷேமநிதித் தருமப்பண்டு லாட்டரி.

சீட்டு 1-க்கு ரூ. 1 வீதம் 11000 சீட்டுகள்.

22 சீட்டுள்ள புக் 1-க்கு ரூ. 20

**முதல் பிரைஸ் ரூ. 1000.**

2வது ரூ 500. 3 வது ரூ 250

4 வது ரூ 125. 5 வது ரூ 100

4630 ரூ. 865 பிரைஸ்களாகக்கொடுக்கப் பெறுவதால் 13 சீட்டிற்கு ஒரு பிரைஸ் கிடைப்பது திண்ணம்.

23-2-1929-ல் பிரைஸ் எடுக்கப்பெறும். 2 புஸ்தகங்கள் விற்பவர்களுக்கு 4 ரூ கமிஷனும் தனிப்பிரைஸ் டிக்கட் ஒன்றும் கொடுப்பதால் தேவையான புஸ்தகங்களுக்கு விரைவில் எழுதினல் மறுதபாலில் அனுப்புவோம்.

உ. அ. சுந்தரமகாலிங்கம்,
K. P. K. சுப்பிரமணியம்,
காரியதரிசிகள்,
சாலியர் மஹாஜன சங்கம் க்ஷேமநிதி லாட்டரிக் கமிட்டி,
அருப்புக்கோட்டை, இராமநாதபுரம் ஜில்லா.

## கோபி வனமலர்ச்சங்கக் கூட்டம்,

சென்ற டிசம்பர் மீ 23ந்தேதி கோங்கரபாளையத்தில் உயர்திருவாளர் கே. என். கஞ்சப்ப கவுண்டர் அவர்கள் வீட்டில் கோபி வனமலர் கிளைச்சங்க கூட்ட மொன்று பகல் ஒரு மணிக்கு நடந்தேறியது; சங்க அங்கத்தவர்களும் கோபி கோவை நண்பர்கள் சிலரும் வந்திருந்தது பாராட்டத்தக்கது. திரு. ச. க. முத்து கவுண்டர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பனகால் அரசரும், லாலாஜியும் காலஞ்சென்றதைக்குறித்து ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றி அவர்கள் குடும்பத்தாருக்கு இச்சங்கத்தின் சார்பாக அனுதாபம் காட்டிக்கொண்டது. அதன் பின் அங்கத்தவர்களால் தீண்டாமை, வாலிபர்வாழ்க்கை, பெண் கல்வி முதலியவைகளைப்பற்றி அரிய பிரசங்கங்கள் நடந்தேறியன. புஷ்பம் சந்தனம் தாம்பூலம், பழம், கற்கண்டு, திராட்சை முதலியன வழங்கப்பெற்று வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

கே. என். பொன்னம்பலம், காரியதரிசி.

# தென்னிந்திய செங்குந்தர்

## :: முதலாவது ::

### சமூக மகாநாடு, வர்த்தக மகாநாடு,

### :: வாலிபர் மகாநாடு, பொருட்காட்சி ::

ஆகியவைகள் நிகழும் ஜனவரி மாதம் 19, 20ம் நாட்களாகிய சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ஈரோட்டில் நடைபெறும்.

**சமூக மகாநாடு.**

திறந்துவைப்பவர்:—திருவாளர் சென்னை அரசாங்க சட்ட மெம்பர் திவான்பகதூர் M. கிருஷ்ணன் நாயர் அவர்கள்.

தலைவர்:— புதுவை அரசாங்க செக்ரெடேரியேட் ஜெனரல் திருவாளர் A. V. முத்தய்யா முதலியார் அவர்கள்.

வரவேற்பு அக்கிராசனர்:—கோவை முனிசிபல் கவுன்சிலர் & பஞ்சு, நூல், ஜவுளி வியாபாரி திருவாளர் V S. செங்கோட்டையா அவர்கள்.

**வர்த்தக மகாநாடு.**

திறந்துவைப்பவர்:—திருவாரூர் மடபுரம் வைஸ் சேர்மன் திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள்.

தலைவர்:—தென்காசி பாங்கர் திருவாளர் T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள்.

வரவேற்பு அக்கிராசனர்:—சேலம் ஜில்லா போர்டு மெம்பர் & நூல் ஜவுளி வியாபாரி திருவாளர் T. R. கந்தப்ப முதலியார் அவர்கள்.

**வாலிபர் மகாநாடு.**

திறந்துவைப்பவர்:—கொல்லங்கோடு மிராசுதார் திருவாளர் சி. முத்துக்குமார முதலியார் அவர்கள்.

தலைவர்:—குடியாத்தம் மாஜி முனிசிபல் சேர்மன் திருவாளர் M V. பீமராஜ முதலியார் அவர்கள்.

வரவேற்பு அக்கிராசனர்:—ஈரோடு வியாபாரி & பாங்கர் திருவாளர் N. M. ஷண்முகசுந்தர முதலியார் அவர்கள்.

**பொருட்காட்சி.**

திறந்துவைப்பவர்:—ஈரோடு "குடி அரசு" ஆசிரியர் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள்.

பொது காரியதரிசி, T, V. நடேசமுதலியார்,

(6ம் பக்கத்தொடர்ச்சி)

வுடன் கூடிய ஒழுக்கம், நாகரீகம், யுத்த சாஸ்திரம் முதலானவைகளிலேலே, மற்றைய முன்னேற்றமடைந்த நாடுகளுக்குச் சமமாகவிருந்தால் தான் முடியும். தன் மதமானது தற்பொழுது பட்டாணி ஜாதியினரைக் காப்பாற்ற ஆற்றலுடையதல்ல வென்றறிந்துமிருக்கிறார். ஆதலால் மதமயக்கங்கொண்டவர்களைச் சற்றேனும் மதியாது தன் நாட்டினரைக் கல்வியிலும் நாகரீகத்திலும் உச்சஸ்தானத்திற்கு கூட்டிச்செல்ல முயலுகின்றார். அவ்விடத்தை அவர்களடைந்தால், பிறநாட்டார் அவர்களைக் காலடியால் தேய்க்கமுடியாதென்பது திண்ணம்.

ஆனால் நாம் (ஹிந்துக்களோ) கற்பனைசெய்த ஸநாதன தர்மத்துக்கு மானக்கேடு விளையாவண்ணம் முற்றிலுஞ் சுயமரியாதையையிழந்தும் எல்லா இந்துஜ்ஜாதிக்கும் மானக்கேட்டைவிரும்பியழைத்துக் கொள்ளுகிறோம்.

பிறர் பொருளைப்பறித்துண்டு கொழுத்து திரிகின்ற காசிவாசி பார்ப்பனப் பண்டிதர்கள் ஏழையுலகை எவ்வித மறிவார்கள்? க்ஷேத்திரவாசிப் பிராமணர்கள் அரைரூபாய் தட்சணையும், கால்சேர் மிட்டாயும் லஞ்சம் வாங்கிக்கொண்டு மனம்போனபடி பணங்கொடுத்தோருக்குதவியாய் விதி விலக்குகளை விதிக்கும் 'பெரியார்'களோ நந்தலைவர்களாயும் சுயமரியாதையிழந்த மக்களுக்கு மார்க்கதரிசிகளாயுமிருக்கிறார்கள்? தாங்களே வழிதப்பிப் பிரஷ்டர்களாய் இருக்கும் இவர்களா நற்கதி நாடும் மற்றோருக்கு வழிகாட்டியாவார்கள்?

அரசியலடிமைத்தனமோ வெளிப்படையாயுளது. அதைக்காட்டிலும் மோசமாக நம்மை இவ்வளவு பேடிகளாகவும் கோழைகளாகவும் செய்து வைத்திருப்பது நமது மத தர்ம நிலை. அடிமைத்தனமும், அடிமை பூண்ட மனமுந்தான் நம்மைப் பழம் புத்தகங்களின் உதவியை நாடச்செய்துஇந் நிலையில் இருத்தி இருக்கின்றது.

காலுக்கு மிதியடி போட்டுக்கொள்ள வேண்டுமானால் பழைய நூற்களின் விவஸ்தை வேண்டும்? தாகத்திற்குதண்ணீர் பருக வேண்டுமானால் ஸ்மிருதியில் கட்டளைவேண்டும், பசிக்குப்புசிக்க வேண்டுமானால் சாஸ்திரங்களின் முடிவைப்பற்றிய வேண்டும் என்கின்றோம்.

இவ்வித மனப் பான்மையாலேயே நாம் நம்முடைய அறிவைப் பெட்டியிலடைத்துப்பூட்டி விட்டோம். இம்மாதிரியான ஒரு ஜன சமூகம் உலகப்போரில் வெற்றியடைந்து வாழமுடியுமா? நாம் இறந்தாலும் இறப்போம், பூதலத்திலிருந்து கெட்டு அழிந்தாலும் அழிவோம், ஆனால் இப்பொழும் ஸநாதன தர்மத்தை மாத்திரம் சற்றும் தளரவிடாமல் கட்டி அழுதுகொண்டேயிருப்போம். என்னே மூடவாதம்! என்ன துராக்கிரஹம்! என்ன அற்புதமான 'தெளிவு'

ஹிந்துக்களே! உங்கள் ஜாதியின் பாதுகாப்பு பெரும்புரட்சி யொன்றினால் தான் முடியுமென்பதை நன்குணருங்கள் அப்புரட்சிதான்! அதுதான் ஜாதிக்கட்டுப்பாட்டை யுடைத்து எல்லா இந்துக்களும் சமபோஜனம் கலப்பு விவாகம் செய்தலாம். இதனாற்றான் தீண்டாமையொழியும், இதனாற்றான் தாழ்த்தப்பட்டோர் உயர்த்தப்படுவார்கள். இதனாற்றான் சுத்தி பிரயோஜனத்தையடையும். இதுதான் சங்கதனுடையமூலமந்திரம் இதுதான் ஸ்வராஜ்யத்தின் திறவுகோல் நீங்கள் இப்புரட்சிக்குப் பயப்படுகிறீர்களா? அல்லது இதற்கு விரோதமாக அழுகி நாறிக்கிடக்கும் ஸ்மிருதிகளையும் லிமிட்டேஷன் பாராய்ப்போன சாஸ்திரங்களென்று சொல்லப்படும் கூழாங்கற்களையும் குறுக்கேபோடுகிறீர்களா? நீங்கள் இதுகாறுஞ் செய்து வந்த கொடுஞ்செயல்களால் இனி வெகு காலம் வாழ முடியாதென்பதை யுணரவில்லையா?

ஹிந்துக்களே! ஏழு கோடி தீண்டாதவர்கள், ஏழு கோடி முசல்மான்கள், இரண்டொருகோடிகிருஸ்துவர்கள் இவர்களெல்லோரும் ஓர்காலத்தில் உங்களுடைய உடலின் அங்கங்களாகவிருந்தவர்களல்லவா? அவர்கள் உங்களுடைய சதையும் எலும்புமல்லவா? இச்சாதிக்கட்டின் காரணத்தால் உங்களிடத்திலிருந்து துண்டாக வெட்டப்பட்டு விலகிப் போய் விட்டார்கள். உங்களுடைய பாதிபுடல் மரித்து விட்டது. இன்னும் நோயுடனிருக்கின்றோமென்பதையும் நீங்கள் அறியவில்லை. இம்மஹாரோகத்திற்கு என்ன மருந்து?

ஜாதிவகுப்புகளையுடைத்து உங்கள் நோய்க்கு மருந்தளிப்போரைஉங்கள்முற்பாட்டனார் பிரம்மா காலத்து வசவுகளால் திட்டிப்பயமுறுத்தப் பார்க்கின்றீர்களா? சகோதரர்களே, சற்று கண் விழித்து புத்திக்குச் சிறிதேனும் மருந்தூட்டுங்கள்.

ஆப்கானிஸ்தானத்தைப் பார்த்தாவது பாடங்கற்றுக்கொள்ளுங்கள். கண் விழிக்காவிடின் இயற்கைதேவி உங்கள் பேரில் அருள் சுரக்கமாட்டாள்! மாட்டாள்!! பின்னும் நீங்கள் சுகவாழ்வு வாழ முடியாது. உங்களுடைய ஸ்மிருதி சாஸ்திரங்களால் கட்டப்பட்ட குட்டிச்சுவர்களும் வேலிகளும் இவ்வுலகத்தை விடுத்து உங்களுடன் கூடவே மறைந்துவிடும்.

தன் நிலையைத்திருத்தும் பொருட்டுச்செய்யப்படும் புரட்சியை வரவேற்கும் மக்களே பாக்கியவந்தர்கள். தேசத்தின் நன்மைக்காகப் பிறவிச்செருக்கை விட்டொழித்து சபாஜம் அல்லது சமூகத்தில் சமத்துவத்தையும் சகோதரப்பான்மையையும் நிலை நிறுத்தமுயற்சிக்கின்றார்களோ அவர்களேபுண்ணியசாலிகள் மக்கள்கூட்டத்தில் சாந்தத்தின் பொருட்டும் சுகத்தின் பொருட்டும் ஜாதிக்கட்டுகளையழித்து அவரவர்களுடைய குணம், தொழில் இயல்களிசைய நன்மை தீமையையறிவிக்கும் உறைகல்லாய்க்கொண்டு விவாகம் முதலானவைகள் யார் செய்கிறார்களோ அவர்களே மகாபுருடர்கள்.

பாமரமான ஹிந்துக்களுக்கு ஜாதிக்கட்டை யுடைக்கும் நல்வழியைக் கடைப்பிடித்து நடக்க வலிமையைக்கொடுத்தருள்வாராக!

---

சுயமரியாதை பெற்றால்
சுயராஜ்ஜியம் பெறலாம்.

## மதிப்புரைகள்.

பார்ப்பனரல்லா இளைஞர் சங்க டைரி:— இந்து பார்ப்பனரல்லாதார் தலைவர்கள் டாக்டர்நாயர், சர் தியாகராயர், பனகால் அரசர், சுரேந்திர நாத் ஆரியா முதலியவர்களின் திருவுருவப்படங்களும், பார்ப்பனரல்லாதார் இயக்க வரலாறுகளும், பக்கத்திற்கு இரண்டு தேதிகளும், பல பெரியார்களின் சிறந்த அநுபவ மொழிகளும், எண்ணிறந்த முக்கிய குறிப்புகளும் கொண்டதாய் சட்டைப்பையில் அடங்கக்கூடியதாய் பெயர்பெற்ற சோல்டன் கம்பெனியாரால் பதிப்பிக்கப் பெற்று காலிகோ பைண்ட் செய்யப்பட்டு வெகு அழகாக இருக்கிறது. விலையும் எட்டு அணா தான். வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

S. P. Y. சுரேந்திரநாத் ஆரியா,
மில்லர்ரோட், டவர் ஹவுஸ்,
கீழ்ப்பாக்கம், மதராஸ்.

யூகிமுனி வாத வைத்திய நூல்.

இதில யூகிமுனி பூரணம் 100 யூகி முனி கரிசல் 152, அகஸ்தியர் ஷண்முக ஜாலமென்னும் சர்ப்பராஜக் குளிகை 43 ஆகிய மூன்று அரும்பெரும் சித்தர் நூல்களடங்கியிருக்கின்றன- இவை இதுகாறும் வெளியாகாமலிருந்து சித்த வைத்தியம் தலையெடுக்க முற்பட்டிருக்கு மிக்காலத்தில் வெளிவந்திருப்பது சித்த வைத்தியத்திற்கு ஆக்கம் தருவதாகும். சித்தர் நூல்கள் பல வெளிவராமலே செல்லரித்துப்போயினமையின் பல சித்தர் வித்தைகள் அழிந்தொழிந்தன. சுயநலத்தால் வெளியிடாமல் சித்தர் நூல்களை வைத்திருப்போர் இனியேனும் அவற்றை உலோகோபகாரமாக வெளியிடுவாராக. மேற்படி மூன்று நூல்களும் பிழையறப் பரிசோதிக்கப்பெற்று, நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவை ஒரே கட்டடமாக ஒரே ரூபாய்க்கு சென்னை கோமளேசுவரன் பேட்டை, அப்பா விலாச புத்தகசாலையில் கிடைக்கும்.

---

## சென்னிமலை யூனியன் போர்டு

1929 வருஷம் ஜனவரி மாதம் 8 ந்தேதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யூனியன் போர்டு தலைவர் ஸ்ரீமான் மு. பழனியப்ப முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு அனுதாபக்கூட்டம் கூடிற்று. அவ்வமயம் 'கனம் பனகால் அரசர் காலம் சென்றது பற்றி இந்த போர்டு தனது வருத்தத்தை தெரிவிப்பதுடன் ஷை பெரியாரின் குடும்பத்தாருக்கு தனது அனுதாபத்தைத் தெரிவிக்கிறது' என்கிற தீர்மானம் எல்லா மெம்பர்களாலும் எழுந்து நின்று ஏகமனதாய் நிறைவேற்றப் பட்டது.

நமது மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தி ஐந்தாவது ஜார்ஜ் மகாராஜா அவர்கள் சென்ற சில நாட்களாக நோய்வாய்ப்பட்டிருப்பதினின்றும் சீக்கிரம் குணமடையும்படி பிரார்த்திக்க மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஒரு நிருபர்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போன பின் திரும்பி வரும்போது தசரதன் "நல்ல சந்தனங்களால் அலங்கரிக்கப்பட்ட உடலுடன் சுகமான தலையணைகளின் மேல் சாய்ந்து கொண்டு அழகு வாய்ந்த வேலைக்காரிகள் விசிறி போடத் தூங்கிய இராமன் இன்றிரவு எந்தக் காட்டிற் படுப்பான்? இராமனில்லாமல் ஒரு நொடியாவது என்னால் பிழைக்க முடியாது." (சருக்கம் 42) என்று இராமன் உடலழகையே நினைத்து அதைப் பார்த்து மார்புறத்தழுவ இடமில்லையே யென்று ஏங்குகின்றான். இராமன் இவ்விதமான செயல்களுக்கும் மனமிசைந்தவனே என்பது அவனை வாயில்காவலராகிய கிழவரும் அவனைக் காணுந்தோறும் மார்புறத்தழுவுவர் என்று முந்திய கட்டுரையில் இனிது விளக்கினோம். பல அழகிய பெண்கள் விசிற இராமன் படுத்து தங்குவானென்பதால் அவனுடைய ஒழுக்க நிலை இன்ன தன்மையதென விளங்குகிறது.(சருக்கம் 42)

அரண்மனையை யடைந்தவுடன் தசரதன் "இராமன் தாயான கோசலை வீட்டிற்கு என்னைச் சீக்கிரத்தில் கொண்டு போய் விடுங்கள், அதைத் தவிர வேறிடத்திலிருந்தால் என் ஏக்கம் தணியாது" என்கிறான். கோசலையின் அந்தப்புரம் அடைந்தவுடன் கட்டிலிற் படுத்துக் கொண்டு இரவில் தசரதன் கோசலையைப் பார்த்து "உன் கையால் நன்றாக என்னைத் தொடு; இராமனுடன் காட்டிற்குப் போன கண்கள் இன்னும் திரும்பிவரவில்லை, அவனைப் பார்க்கும் நல்வினை எனக்கில்லாமற் போனாலும் அவனைப் பெற்ற உன்னைப் பார்க்கவும் என் கண்களால் முடியவில்லை. அவனைப் பார்த்த கண்கள் அவனுடைய அழகிலேயே ஈடுபட்டு அவனுடன் போயின. போனவை திரும்பி வருமா? இராமனைப் பார்க்காமல் தவிக்கும் எனக்கு அவனைப்பெற்ற உன்னைத் தொட்டால் அந்தத்தாபம் நீங்கும். இராமனைப் பார்க்கா விட்டாலும் அவனுடைய தாயான உன்னைப் பார்த்துப் பேசித் தொடுவதால் அதற்குச் சமமான சுகம் கிடைக்கும். என்னை மன்னித்து உன் கைகளால் அன்புடன் தொடு" என்று தவிக்கிறான் இது துன்பமிகுதியால் அவனுடைய உள்ளக்கிடை வெளியான இடம். இதனால் தசரதன் இராமனது ஆண்மகனுடைய அழகில் ஈடுபட்டு மிகக்கிழவனானதால் அவனைப் பக்கத்தில் வைத்துப் பார்த்துப் பேசி அவனைத் தொட்டு மார்போடு அடிக்கடி அணைப்பதால் ஏதோ சுகம் கிடைக்கிறதென மயங்கி அச்சுகத்திலேயே ஈடுபட்டு அதனால் அச்சுகம் தரும் இராமனுக்காக தனது மகனை பரதனை வஞ்சித்துப் பல அக்கிரமமான செயல்களைச் செய்யத் துணிந்து புரிகின்றனனென்பது வெள்ளிடைமலை போல் விளங்குகின்றது.

தசரதன் தன்னைத் தொடுமாறு எத்தனை தடவை புலம்பினாலும் கோசலை எண்ணம் சுயநலத்திலேயே இருக்கிறது. அவள் அவனைத் தொடாமல் கைகேயி தனக்குச் செய்யவிருக்கும் கேடுகளை நினைந்து புலம்பி அகங்காரத்துடன் இராமனைக் காட்டுக்கனுப்பாதிருந்தால் அவனைப்பிச்சையெடுத்தேனும் பிழைக்கச்செய்திறெனெனக்கூறி மேலும் மேலும் அவனை வருத்தத்தொடங்குகின்ள். இத்தகைய கோசலையைக் கற்புடையாளுக்கோர் எடுத்துக்காட்டாகக் கூறுதல் மிகவும் பொருந்துமன்றோ! என்னே அவளுடைய இழிதகைமை!

கோசலை சீதையை வழியனுப்பும்போதுகூறிய பேச்சால் அவளும் சீதையின் நடையில் ஐயுறவுடையவளாகவே தெரிகிறது. அதற்குச்சீதைகூறிய மறுமொழி பொருத்தமானதே! கடைசியாக சுமித்திரை கோசலையைத்தேற்றும்பொது கூறும் மொழிகளால் அவர்களெல்லோரும் எப்படியாவது பரதனைக்கொன்றேனும் இராமன் நாடுபெறவேண்டுமெனவே சூழ்ந்திருந்தனரென்பது தெளிவா

## ஒரு விதவைப்பெண் தேவை,

சைவ வெள்ளாள வாலிபர், பி. ஏ. படித்திருக்கிறார். வயது 23. கலியாணமாகாதவர். கொஞ்சம் பூஸ்திதியுண்டு. ஒரு ஆங்கில பத்திரிகையில் உதவியாசிரியர். அவருக்கு, எந்த வகுப்பைச் சேர்ந்தபெண்ணாயிருந்தாலும் சரி, படித்த, அழகுள்ளவோர் விதவை பெண்தேவை. கீழ் கண்டவிலாசத்திற்கு எழுதவும்.

X C/o பத்திராதிபர் "குடி அரசு" ஈரோடு.

கிறது. நிற்க! இவ்வரலாற்றைக் கம்பர் எவ்வாறு கூறுகின்றனரென ஆராய்வோம்.

"முழும்பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பது இயலுமா" என ஒரு பழமொழி வழங்குகிறது. அதன் கருத்து, பூசனிக்காய் மிகவும் பெரிய உருவினதாதலின் அதை உண்ணுவதற்காக இலையில் படைத்துள்ள சோற்றில் மறைத்தல் இயலாது என்பது; அதாவது பெரிய பொய்களைக்கூறினால் உலகம் கண்டு பிடித்துவிடும் என அறியலாம். கம்பரோ முழுப் பூசனிக்காயைச் சோற்றிலே மறைத்துளர். அதாவது கம்பர் இக்கட்டுரையிலுள்ள கதை முழுவதையுமே மறைத்துவிட்டார். இத்தகைய பெரும் புழுகரைத் தமிழ்த்தாய் எங்ஙனம் பெற்றாள்! இவரால் தமிழன்னைக்கு இது அவமானமே ஒழிய பெருமையன்று. சிலர் திருவள்ளுவருடன் இக்கம்பரையும் இணையாகக் கூறுகின்றனர். அவர்கள் இக்கம்பருடைய பொய்ம்மைநிறைந்த உருவினையும் திருவள்ளுவருடைய உண்மை உருவினையும் சற்றுத் தம் சித்தத்தில் சிந்திப்பரேல் தாம் எண்ணுவது மிகவும் தீமையைத்தரும்எண்ணமென உணர்வது திண்ணம். ஏனெனில் மெய்ம்மையே ஒருருவாம் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்முன் பொய்ம்மையே ஒருருவாம் கம்பரையும் எண்ணுவது அறக்கொடுஞ்செயலே.

கம்பர் தசரதனைப் பிரேதம்போலக்கிடத்திவிட்டு இராமனை அவன் முன்னிலையில் போனதாக வேகூறாமல் தாய்மார்களிடம் விடைபெற்றுத் தேரேறிச்சென்றான் எனக்கூறிச் செல்கின்றனர். இக்கதையைக்கூறும் அவர்பாடல்கள் மூன்றே. அவையின் வருவான:— (இராமன்)

1. 'தாதைவாயிற்குறுகினன் சார்தலும்
கோதைவேலவன் தாயரைக்கும்பிடா
ஆதிமன்னனை ஆற்றுமின் நீரென்றான்
மாதராரும் விழுந்து மயங்கினார்!

2. 'எத்தினார் தம்மகனை மருகியை
வாழ்த்தினார் இளையோனை வழுத்தினார்
காத்தல்குமின் செய்வதங்காவென்றார்
நாத்தழும்ப அரற்றி நடுங்குவார்!

3. அன்னதாயரின்றிற் பிரிந்தபின்
முன்னர்நின்ற முனிவனைக் கைதொழா
தன்னதாருயிர்த் தம்பியும் தாமரைப்
பொன்னும் தானும் ஓர் தேர்மிசைப் போயினான்!

வால்மீகி வரலாற்றுப்படி இராமன் வசிட்டனை வணங்கவில்லை; கம்பர் வணங்கிச் சென்றனனென்கின்றனர்.

தசரதனுக்கு கோசலை முதலிய மூவரும் நீங்கலாக முன்னூற்றைம்பது (350) மனைவியரே இருந்தனரென வால்மீகி (அயோத்தியாகாண்டம் சருக்கங்கள் 34, 39) கூறுகின்றனர். கம்பரோ அவனுக்கு அறுபதினாயிரம் (60, 000) மனைவியரிருந்தனரென்கின்றனர். அயோத்தியாகாண்டம் தைலமாட்டுபடலம் எழுபத்தேழாவதுசெய்யுளில் "மாதரார்கள் அறுபதினாயிரருமுள்ளம் வலித்திருப்ப" என்று கம்பர் கூறுகிறார். முந்நூற்றைம்பதுக்கும் அறுபதினாயிரத்துக்கும் எவ்வளவுதூரம்? கம்பர் கதைகட்டும் திறம் வியக்கத்தகுந்ததே! என்னே இவர்தம் பொய்மை? இவ்வெண்ணை இவர் யாண்டுக்கண்டனரோ? இனிமேற் செல்லுதும்.

## வேண்டுகோள்.

சேலம் ஜில்லா திருச்செங்கோடு தாலூகா பள்ளிபாளையத்தில் 'சுயமரியாதைத் தொண்டன்' என்னும் ஒரு வாரப்பத்திரிகை திரு. சாமிநாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு அடுத்த மாதம்முதல் வெளிவரும். அதன்கொள்கை முழுவதும் சுயமரியாதை இயக்கத்தைத் தாங்கியே நிற்கும். ஆதலால் ஆங்காங்குள்ள கனவான்கள் அப்பத்திரிகைக்கு சந்தா சேர்க்க வருகின்றவர்களுக்கு தக்க ஆதரவளிக்க வேணுமாய் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

## கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு தக்க இனாம் அளிக்கப்படும்.

7—9—25-ல் என்னுடைய பேத்தி காணாமல் போய் விட்டது. பல விடங்களில் தேடியும் இதுவரையிலும். கிடைக்கவில்லை. அக்குழந்தைக்கு அப்போது வயது இரண்டரை. இப்போது ஏறத்தாழ 4 வயதாகப்போகிறது. சிகப்பு நிறம். குழந்தை இருக்குமிடம் தெரிவிப்பவர்களுக்கு அல்லது கண்டு பிடித்துக்கொடுப்பவர்களுக்கு தக்க இனாம் அளிக்கப்படும்.

[illegible]ராசு பண்டிதன்,
வடக்குத் தெரு, சின்னமனூர்,
உத்தமபாளையம் தாலூகா (மதுரை ஜில்லா)

## பார்ப்பனனின் மேல் பழி இல்லை !

"திரேதா, துவாபரயுக காலங்களிலுள்ள ராக்ஷசர்களெல்லாம் கலியுக காலத்தில் பாப்பார ஜாதியில் பிறப்பார்கள். கெட்ட காரியங்களைச் செய்வார்கள்" என்று தேவி பாகவதத்தில் பரமேஸ்வராலும், மகாபாரதத்தில் பீஷ்மாச்சாரியாலும் கூறப்பட்டிருக்கிறது. அவ்வாக்கியங்களை இக்காலத்துப் பார்ப்பனர்கள் நிர்ணயப்படுத்துகிறார்கள் போலும். டி நூற்களைப்பற்றி யானெழுதுவது மிகையே? ஏனெனில் 'குடி அரசி'ல் நமது 'கைவல்யம்' கைவலியாது கணக்கற்றவை வரைந்து கொண்டே வருகிறது. ஒரு நிருபர்

## பார்ப்பனருக்கு கொடுக்குஞ்சோறு நின்றுவிட்டது.

கோட்டார் ஆறுமுகப்பெருமாள் பிள்ளையார் சுவாமிகோவில் தேவஸ்தானத்தில் மார்கழி திருவாதிரையன்று நடைபெறும் திருவிழாவில் வழக்கமாக உத்தேசம் (50)ஐம்பது பார்ப்பனர்களுக்கு சாதம்கொடுத்து தக்ஷிணை தாம்பூலசகிதம் அனுப்புவது வழக்கம். இந்த மார்கழியில், நமது சுயமரியாதைத்தலைவர் வைக்கம் வீரர், ஈ. வெ. ராமசாமி வள்ளலால் நடைபெறும் "குடி அரசு" "திராவிடன்" "ரிவோல்ட்" என்ற பத்திரிகைகளின் சுயமரியாதை முழக்கத்தின் பிரகாசத்தால் எமது குலப்பெரியார்களும் தேவஸ்தான மானேஜர்களும் மேற்படி பார்ப்பனர்களுக்கு கொடுக்கும் சாப்பாட்டை நிறுத்திவிட்டார்கள். ஒரு நிருபர்.

## மதுரை முனிசிபாலிட்டி.

1929-30-ம் வருஷத்திற்கு ஏற்பட்ட சுங்கக் குத்தகை வகையரு கண்டிருக்டுகள் 1929 ம் வருஷம் ஜனவரி மாதம் 21-தேதி திங்கட்கிழமை காலை 9-மணியிலும் அதையடுத்த நாட்களிலும் முனிசீபலாபீசில் பகிரங்கமான ஏலத்தில் விடப்படும்.

(Signed) R. S. Nayudu,
Chairman, Madura.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமச்சந்திரஅய்யர் பிராமணசபைத்தலைவரும் பிராமணசமூகங்களுக்கு உபதேசகர்த்தாவுமானல் பிராமணதருமமென்னும் சிறப்பு எவ்வளவுசிறப்புடையதாகவிருக்கும் என்பதை ஆலோசித்துப் பாருங்கள். இவர்சம்மதவயதுக்கமிட்டியின் முன் சாக்ஷிசொல்லுகையில், "உயிரைவிட்டாலும்விடுவேனேஒழிய 12வயதிற்குமேல் பெண்களுக்கு விவாகம் செய்யச்சாஸ்திரம் இடம்கொடுக்காததால் ருதுமதிவிவாகத்திற்கு சம்மதம் கொடுக்கமாட்டேன்" என்றுசொல்லிவிட்டார். காசியாத்திரை போய்வந்தவன் பாவங்களைச்செய்யமாட்டேன் என்று சங்கல்பித்துக்கொள்ளவேண்டியதற்குப்பதிலாகப் பாவக்காயோ சுண்டைக்காயோ அல்லது தனக்குப்பிரியமில்லாத காய்வகைகளில் ஒன்றையோ விட்டுவிட்டதாக காசிப்புரோகிதன் சொல்லிக்கொடுத்தபிரகாரம் சங்கல்பித்துக் கொள்ளுவான். சமயம்வந்தபோது இவன் "உயிரை விட்டாலும் விடுவேனேஒழிய சுண்டக்காயை தின்னமாட்டேன்" என்பதற்கும் சபைத்தலைவர் சாக்ஷிக்கும் என்ன வித்தியாசம்?

பாப்பார்கள் இங்கிலீஷ் படிக்கட்டும், சேவகாவிர்த்தியே அவர்களுடைய தொழிலாகவிருந்து உலகபோக்கியங்களை அனுபவிக்கட்டும், அதைப்பற்றி நமக்கு விவகாரமில்லை. சாஸ்திரவிதிகளுக்கெல்லாம் விரோதமாகநடந்து பின்னும் தங்களைப்பிராமணனென்று நினைத்து மற்றவர்களைத்தாழ்ந்தவர்களென்றும் சூத்திரர்களென்றும் சொல்லுவதற்கு என்ன ஞாயமிருக்கிறது? பாப்பான் நடப்பதற்குமட்டும் சாஸ்திரமில்லை, விதியில்லை, நியாயமில்லை, ஒழுங்கில்லை, கோவில்லை, தெய்வமில்லை, மற்றவர்களைத்தாழ்த்தவும் எதிலும் தங்களை முதலாகக்கொண்டாடவேண்டுமென்பதற்குமட்டும் சாஸ்திரங்கள், பூர்வீகவழக்கங்கள், விதிகள், நியமங்கள், தெய்வங்கள், பெரியவர்கள், ஆகியவைகளெல்லாம் முன்வந்து நிற்கும்; இதுஎன்ன ஞாயமப்பா! படித்தவர்களின் கோழைத்தனத்தின் பாரபக்ஷமும் பணக்காரச்சோம்பலும் இவைதத் அறியாவிட்டாலும் பண்டிதனாவது இதை அறியவேண்டாமா? "புறச்சீர்திருத்தத்திற்கு ஆகச்சான்றேவேண்டும். அதற்கும் நுண்ணறிவுவேண்டும். அதற்குத்தவம்கிடக்கவேண்டும்" என்றுசொல்லும் "நுண்ணறிவு ஆராய்ச்சிப்பத்திரிகை" ப்பண்டிதருக்கு இது ஏன் படுவதில்லை? கடவுளிடமிருந்து கிடைக்கப்பெற்ற அவரால், உத்தரவுபெற்ற அவரால், அங்கீகரிக்கப்பெற்ற அவரால் ஆபரணமாக அணிந்துகொள்ளப்பெற்ற பூர்வகாலத் துக்பிரசங்கள் அப்படியே இயற்கையில் விளங்கட்டும். கடவுளைத்தகுந்த அளவிற்குமேல் நம்பிவிடட்டும். தன்காரியத்திற்கில்லாமல்மற்றவர்களின் காரியங்களைத்தடுக்க கடவுளை சன்னக்கட்டையாக உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டாம், துவையலில்லாமல் மோருஞ்சோற்றைத்தொண்டைக்குள் தள்ளும் நாக்கில்லாத "நுண்ணறிவு" பண்டிதர்கள் வேதாந்தம் பேசவேண்டாம். இருபொருள் கொண்ட வாசகங்களைச்சொல்லி உலகமானது ஒருபிழையிலிருந்து மற்றொருபிழைக்குப்போய்ப்பின்னும் அடிமைக்கு ஆசாவதில் என்னபலன்?

பின்னும் பிராமணச்சபைத்தலைவர் சொல்லுவதாவது, "பிராமணனுக்கு ஆகாரவிதிகள்,நியமங்கள் இருப்பது அவசியம். பலஆகாரங்களுக்கு ஆசைப்படுவதால் பிற்பட்டபலன் வியாதி. அதனால்பிராமண்யம் போகிறது" என்கிறார். இப்பொழுது சபைத்தலைவருக்கும் சபையிலிருப்பவர்கட்கும் இனியுள்ளபாப்பார்களுக்கும் ஆகாரமின்னதென்பது எல்லாருக்கும் தெரியும். வெங்காயச்சாம்பாரில்லாமல் எந்தப்பாப்பான் இப்பொழுது இருக்கமுடியும்? பாப்பாரக்குழந்தைகள் பிறந்தவுடனே தாய்ப்பாலில்லாமல் இங்லிஷ்பால் மாவுமுதலிய ஆகாரங்களினால் அல்லவா வளர்க்கப்படுகின்றன. அவர்கள் குழந்தைகளும் சாக்லட்டும் பப்பிரமெண்டும் கேக்பிஸ்கட்டுமல்லவா கேட்கின்றன. இவைகளில் முட்டைசம்பந்தமுண்டல்லவா? காய்ச்சல்வந்த மறுநாளே கோழிமுட்டையின் வெள்ளைக்கரு வேண்டும், அதிகநான்பட்டால் கோழிக்குஞ்சு சூப்புஅவசியம் வேண்டும், பெலவீனப்பட்டால் மாட்டுக்கன்றின்கால்சூப்பு, பீவு, முதலியனவேண்டும். வெங்காயம்பாப்பானுக்குத்தள்ளப்பட்டசாதனம், இதைப்பற்றின விஷயங்களெல்லாம் வாசகர்கள் தெரிந்திருப்பதால் விரித்தெழுதவில்லை.

## குரு சிஷ்யர்கள் மகாநாடு.

### 3 படி சாம்பலுக்கு 300 ரூபாய்

அவனாசியில் செட்டிமார் நந்தவனத்தில் ஒரு மகாசபைக்கு கூனம்பட்டி மடம் ஸ்ரீ மாணிக்கவாசகக்குருக்கள் வந்து போக ஷையாருக்கு கொடுத்த பீசும் மோட்டார் வாடகை செலவும் கூடி ரூபாய் (300) வரை ஆயிற்று. இவ்வளவுக்கும் ஷை குருக்கள் குறித்த நேரத்தில் வந்து சபையை பூர்த்தி செய்யாமல் சாயந்திரம் 6-மணிக்கு வந்து 9-மணிக்கு கிளம்பி விட்டார். 300 ரூபாய் செலவில் வந்த குருக்கள் விபூதிப்பையை அவிழ்த்து 3 மணி நேரம் மூன்றுபடி விபூதியை கொடுத்துக்கொண்டிருந்து விட்டு சபையாருக்கு யாதொரு விதமான பதிலும் சொல்லாமல் திரும்பிப் போனதை பார்த்து பணம் கொடுத்த செட்டிமார்கள் இஞ்சி தின்றவர்களைப் போல் ஏமாந்து நிற்கிறார்கள். இவர்களுக்கு "குடி அரசு" தான் வழிகாட்டவேண்டும்.

ஒரு நிருபர்.

## சுயமரியாதைத் திரியும் நன்கொடைகளும்.

சென்ற ஒருவருட காலமாக "குடி அரசு" பத்திரிகையைப்படித்து வந்ததின் பயனாய் எனது தகப்பனார், 24 வருடமாய் பஞ்சாங்கப் பார்ப்பனரைக்கொண்டு செய்துவந்த எனது பாட்டனாரின் திதியை, இவ்வருஷம் 31-12-28 ல் பஞ்சாங்கப் பார்ப்பனரையும் அவர்கள் அர்த்தமற்ற சடங்குகளையும் ஒழித்துவிட்டு எனது பாட்டனாரின் ஞாபகார்த்தமாக சில ஏழைகளுக்கு அன்னமிட்டு முடித்தார். சுயமரியாதைக்காக உழைக்கும் "திராவிடன்" பத்திரிகைக்கு ஒருரூபாய் நன்கொடையும் அனுப்பியுள்ளார்.

எஸ். ராமசாமி, துறையூர்.

## பார்ப்பனீயமும் புரோகிதமும் ஒழிந்த சடங்குகள்.

கோபிசெட்டிபாளையம் தாலூக்கா கொங்கர்பாளையத்திலிருக்கும் உயர்திருவாளர் சே எம் குழந்தையப்ப கவுண்டர் அவர்கள் கார்த்திகை மாதம் 13 ம் நாள் புதன்கிழமையதினம் தம்முடைய தகப்பனாரின் திதியைபார்ப்பனீயத்தையும், புரோகிதத்தையும் ஒழித்து பந்துமித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் சாப்பாடு போட்டுமுடித்தார்,

ஷையூரிலிருக்கும் திருவாளர் ஆர் எம் வெங்கிடுசாமி கவுண்டர் கார்த்திகை மாதம் 12 ம் நாள் செவ்வாய்க்கிழமையதினம தம்முடைய தகப்பனாரின் திதியை பார்ப்பனீயத்தை ஒழித்து பந்துமித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் விருந்திட்டு முடித்தார்.

கொ ச பொன்னம்பலம்

## கோயமுத்தூர் ஜில்லா குடியானவர்கள் சங்கம்.

21-12-28-ல் பழயகோட்டை பட்டக்காரர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடிய ஷை சங்கத்தின் காரிய கமிட்டி மீட்டிங்கின் தீர்மானங்களும் நடவடிக்கைகளும்.

No 104 R, S. of 28

1. குடியேற வசதியுள்ள இடங்களில் குடியேற விரும்புகிற ஜனங்களுக்கு இலவசமாய் பூமிகள் சாகுபடிக்குக் கொடுக்க கவர்மெண்டாரை கேட்டுக் கொள்ளவும்,

2. இந்த ஜில்லாவிலுள்ள கால்நடை ஆஸ்பத்திரிகளுக்கு கட்டாய சிகிச்சைக்காக அனுப்பும் கால் நடைகளுக்கு ஆஸ்பத்திரியில் தீனி வகையறா குறைந்த விலைக்குக் கிடைக்க சவுகரியம் செய்து கொடுக்க அதிகாரிகளை கேட்க வேணுமாயும்,

3 அவனாசி தாலூகா மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி தாலூகா கோட்டூர், கொள்ளேகாலம் இந்த இடங்களில் கால் நடை ஆஸ்பத்திரி வைக்க கவர்ண்மெண்டாரை கேட்டுக்கொள்ளவும்,

4 மைனர் இரிகேஷன் வேலைகளை நடத்த கவர்ண்மெண்டில் தனி அதிகாரிகளை நியமிக்கக் கெட்டுக்கொள்ளவேணுமாயும்,

5. கீழ் பவானி பிராஜக்ட்டு விஷயமாய் என்ன நடவடிக்கைகள் நடந்திருக்கிற தென்பதைப்பற்றி கவர்ண்மெண்டாரை மறுபடியும் கேட்க வேணுமாயும், தீர்மானிக்கப்பட்டது.

7. (a) இந்தசங்கத்தின்காரியகமிட்டிமீட்டிங்குக்குதிருவாளர்கள் 1. கொள்ளேகாலம் மல்லப்பா, 2. உடுமலைப்பேட்டை தாலூகா எரிசினம்பட்டி ஈ. எம். பெரியண கவுண்டர், 3. ஷை தாலூகா பெரிய வாளவாடி கி. நாராயணசாமி நாயுடு, 4. பவானி தாலூகா அந்தியூர் கொல்லப்பாளையம் எ. கே. துரைசாமி ரெட்டியார், 5. திருப்பூர் புதூர் ஆர். வி. இராமசாமி கவுண்டர், 6. பொள்ளாச்சி தாலூகா மலையாண்டிப்பட்டணம் சென்னியப்ப கவுண்டர் ஆகியவர்கள் மெம்பர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

(b) எல்லா தாலூகா போர்டு பிரசிடெண்டுகளும் இந்த சங்கத்தின் காரிய கமிட்டிக்கு மெம்பர்களாக சேர கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கோயமுத்தூர், 21—12—28. } C V. வெள்ளியங்கிரிகவுண்டர், கௌரவகாரியதரிசி.


## சுயமரியாதைத் தொண்டன்.

இம்மாது வைக்கம் வீரரும் 'குடி அரசின்' பத்திராதிபருமான உயர் திருவாளர் ஈ வெ. இராமசாமி நாயக்கரின் உதவியைக்கொண்டும், 'குடி அரசின்' கொள்கையைக்கொண்டும் வெளிவரப்போகும் ஓர் உயர்தர வாரப் பத்திரிகையாகும்.

இதன் வருஷ சந்தா ரூ 3—0—0
வெளி நாடுகளுக்கு ரூ 4...0...0

ஆசிரியர், S. சாமிநாதன்.

விலாசம்:—

மானேஜர், "சுயமரியாதைத்தொண்டன்"
பள்ளிபாளையம்.
ஈரோடு மார்க்கம்

## கான்பூரில் சுயமரியாதைத் திருமணம்.

கான்பூரில் ராதாஸ்வாமி சமாஜம் என்ற சீர்திருத்தக்காரர்கள் சுயமரியாதை இயக்கத்தை வெகு தீவிரமாக பரப்பிவருகிறார்கள். அவர்கள், அர்த்தமற்ற சடங்குகளையும் அனாவசியமான கிரிகைகளையும் அடியோடு ஒழித்துவருகின்றனர். இந்த வாரத்திலேயே தாயல்பாக் என்ற ஒரு ஊரிலேயே எழு கல்யாணங்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு கல்யாணமும் ஒரே ஒரு மணி நேரத்தில் நடத்தப்பட்டதாயினும் யாரும் மறக்கமுடியாத அவ்வளவு சிறப்பாக நடந்தப்பட்டது. அவைகளில் எந்த மணப் பெண்ணும் 16 வயதுக்குக் குறைந்ததல்ல. எந்த மணமகனும் 21 வயதுக்குக் குறைந்த வயதுடையவரல்ல. ஷை கல்யாணங்களில் இரண்டு கலப்பு விவாகங்கள். ஒன்று பஞ்சாப் மணமகனும் மராட்டிய மணமகளும் கொண்டது. மற்றொன்று ஐக்ய மாகாணக்கணவனும் பஞ்சாப் மாகாணத்துப் பெண்ணும் கொண்டது. மற்ற மணங்களும் ஏறக்குறைய கலப்பு வகுப்பு விவாகங்களேயாகும். இவ்விவாகங்களெல்லாம் திரு. ராதா சுவாமியவர்களால் நடத்தி வைக்கப்பட்டவையாகும்.

டைம்ஸ் ஆப் இந்தியா.


சுயமரியாதை பெறவேண்டுமானால்
"குடி அரசு" "திராவிடன்"
பத்திரிக்கைகளை வாங்கிவாசியுங்கள்

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

மன்மத ஸ்தம்பண குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும்உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பேனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.


ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்,
டெலிபோன் 3311-
தந்தி விலாசம்:—விகடன், சென்னை.

Use Only Unbreakable
Wrought Iron Railings Noted for.





100 வருஷத்துக்கு உத்திரவாதம்-
நம்நாட்டு கைத்தொழிலை ஆதரியுங்கள்.
இரும்பு கிராதிகள் விலை சரசம்.

பால்கனி கட்டிடங்களுக்கு அவசியமான இரும்பு கிராதிகள் அநேக தினுசுகளில் விற்பனைக்கு தயார்செய்திருக்கிறோம். இந்த புது தினுசு கிராதிகள் நாகரீகமானதும் கட்டிடங்களுக்கு பார்வை கொடுக்கக்கூடியதும், எந்த விதத்திலும் உடையாததுமாக தயார்செய்து ஏராளமாக விற்பனைசெய்துவருகிறோம். கட்டிடங்களுக்கு ஏற்றவாறு எந்த அளவுப்படியும் குறித்த காலத்தில் தயார்செய்து கொடுக்கப்படும். உடனே தங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய கிராதிகளுக்கு ஆர்டர் செய்யவும்- பிரைஸ் லிஸ்ட் இனாம்-
தயார் செய்பவர்கள்:—

ஸ்ரீ கிருஷ்ண இரும்பு தொழிற்சாலை,
மதுரை.

குளிர்! குளிர்!! குளிர்!!!

பால கலவா அல்லது கம்பளி குல்லா.




குளிர், பனி காலங்களில் சரீரத்தைப் பாதுகாப்பதற்காக இந்த கம்பளி குல்லா ஒவ்வொருவரிடத்திலும் ஒன்று இருத்தல்வேண்டும். அசல் கம்பளி, சிகப்பு, கிரே, பிரௌன், வெள்ளை முதலிய பலகலர்களில் கிடைக்கும்.

நெ. 1 குல்லா பெரியது ரூ. 1—8—0
நெ 2 குல்லா ரூ. 1—0—0

உடனே எழுதுங்கள்.

கனடியன் வாட்சு பீபிள், ஜார்ஜ் டவுன், மதராஸ்,

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை
ரோல்டு கோல்டு "கோல்டன்" புது மாடல்கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போலிருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்ரவாதமானது. ரூ4-15-0 வி. பி. வேறு

ஜினன் வாட்சு கம்பேனி
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



ஜீவரசம்.
(ஓர் குடும்ப ஔஷதம்)
ஏன் வைத்தியரைத் தேடவேண்டும்?

சகல ரோக நிவாரணி உங்களிடமிருந்தால் வேறு வைத்தியர் தேவையில்லை. செலவும் குறையும்.

அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் உள.
ஒரு புட்டிக்கு உடனே எழுதுக.
உண்மை விளங்கும். விலை ரூ. 1-8-0

முக்கிய வியாபாரிகள்:—
T. N. சொக்கலிங்கம் பிள்ளை அன் சன்ஸ்,
வடக்கு சித்திர வீதி, மதுரை.


ஜீவரசம் கம்பெனி (லிமிடெட்,)
(2) காரைக்குடி S. I.

## ஹாடன்ஸா.

ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டது.

:: மூலவியாதிக்கு சிறந்த மருந்து. ::

ஆபரேஷன் தேவையில்லை.




பெருமிதமான இரத்தப்பெருக்கு அல்லது கடுமையானதாயிருந்தாலும் ஜர்மனியில் கண்டுபிடிக்கப்பட்ட ஹாடன்சா முன்னால் நிற்கமுடியாது. இதனை உலகமெங்கும் ஆயிரக்கணக்கான டாக்டர்கள் உபயோகித்து உண்மை என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஹாடன்சா ஜெர்மனியிலுள்ள ஒவ்வொரு ஆஸ்பத்திரிகளிலும் இன்னும் மற்ற எல்லாவிடங்களிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. போட்ட உடனேயே ஆறுதல் அளிக்கும். மூலத்தால் இரத்தம் வழிந்துகொண்டிருந்தால் உடனே இரத்தப்பெருக்கை நிறுத்தி சாதாரணநிலைக்குக் கொண்டுவரும். எவ்விதமான ஆபரேஷனும் செய்யவேண்டியதில்லை. இன்றே பரீக்ஷித்துப் பாருங்கள் தாமதிக்கவேண்டாம். பலனைக்கண்டு ஆச்சரியப்படுவீர்கள். எல்லா இங்கிலீஷ் மருந்து வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும். பெரிய டபிள் ட்யூப் ஒன்றுக்கு விலை ரூபாய் 2—0—0 தான். தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

'எச்சரிக்கை'

வாங்குபவர்கள் பெட்டியின்மேல் 'டபிள்ட்யூப்' என்று முத்திரை போட்டிருப்பதை பார்த்து வாங்கவும். இது புதிதாக தயாரிக்கப்பட்டது. உபயோகிக்கும் முறை டியூபினுடன் இருக்கும் பிரசுரத்தில் தெரியும்.

மதராஸ் ஏஜண்டுகள்:— சவுத் இண்டியன் மெர்கண்டைல் கம்பெனி,
நெ. 12, மன்றோ தெரு. பி. சென்னை. டி.

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

## சுவாச காச ரோக நிவாரணி.

## Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலிய வைகளையும் எமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும் படியாயும் செய்கிறது. ஒருமுறை பரீக்ஷித்து பார்ப்ப தவசியம்.

48-நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0. தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், மூ. மா. சொக்கலிங்க முதலியார். திருநாவுக்கரசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I)

உங்களுடைய சஞ்சலம் ஒழிந்தது

"சௌரியா"

ஓர்வரப்பிரசாதம்



சகோதரிகளே, இனி நீங்கள் சோர்வடையவேண்டியதில்லை. உடனே எழும்கள். சூதகவலி மாதவிடை காலத்திய வயிற்றுவலி, முதலிய எல்லாவியாதிகளையும் தீர்த்து புத்திர பாக்கியத்தையும் சௌகரியத்தையும் தரவல்லது.

ஒரு புட்டியின் விலை ரூ 3—0—0 கேட்லாக் இனாம்.

Apply to—சங்கராம் மெடிகல் ஹால், குகை, (S. I. R.)


சந்தாதாரர்களுக்கு

## அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறு வருஷத்திற்கு சந்தா அனுப்பும்போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்றும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.


எதிர்பார்த்தது வந்து விட்டது!!

## தமிழ் டைப் மிஷின்கள்.

எழுத்துக்கள் சுத்தமாக இருக்கக்கூடியது எல்லாவித வேலைகளுக்கும் உதவக்கூடியது. ஒவ்வொரு ஆபீசுக்கும் தேவையானது. வியாபாரிகளுக்கு அவசியமானது. விபரத்திற்கு எழுதவும்.

ராம் நாராயணன் அண்ட் கம்பெனி,
147, அக்கிரார வீதி, ஈரோடு.

பட்டாதாரர்களே!

## இன்றே எழுதுங்கள்.

பின்திகாலம் நெருங்கி விட்டது. நீங்கள் செலுத்தும் பணத்துக்குச் சரியான ரசீது புஸ்தகங்களை முன்னமே வாங்கிவைத்துக்கொள்வது நலம்.
100-பக்கமுள்ள பௌண்டுபுக் 1-க்கு 0—8—0.
சிறியபுக் 1-க்கு 0—0—9. 100-க்கு 3—0—0.
தபால் சார்ஜ் வேறு. பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு வேண்டிய பாரங்களும் கிடைக்கும்.

ஸ்ரீ ஷண்முகானந்தம் பிரஸ்,
பழனி.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை

இனாம்! இனாம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜினேன் வாட்சு கம்பெனி,
பின்னு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.


ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கரவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.